8300

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரப்ரஹ்ம தத்வவிளக்கம்

15 AUG 1922

இஃது

சைதாப்பேட்டை

ஸ்ரீமான் ஆதிமூர்த்தி இராமாநுஜதாஸர் புத்ரரும்,

ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி ஸ்ரீமான்

வானமாமலை கலியன் இராமாநுஜஜீயர் ஸ்வாமிகளின்

திருவடி சம்மந்தியும்,

உபயவேத ப்ரவர்த்தகரான கொயம்பத்தூரைச்சார்ந்த குரிஞ்சிவாடி

ப்ராஹ்மஸ்ரீ கணேச ராவ் அவர்களிடம்

உபயவேதாந்த ரஹஸ்யங்களையுமோத, உணர்ந்தவருமான

ஸ்ரீமான் க்ருஷ்ணராமாநுஜதாஸர்

அவர்களால் இயற்றப்பட்டு.

சென்னை சைதாப்பேட்டை

ம-ள-ள-ஸ்ரீ கோ. ஸ்ரீனிவாச நாயகர் அவர்களாலும்,

ம-ள-... ராமசாமி முதலியார் அவர்களாலும்,

...சென்னை:

...லயில் பதிப்பிக்கப்பட்டது.

...922

...விலை அணா 5

R6
N22
178123

83(

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரப்ரஹ்ம தத்வ விளக்கம்

15 AUG 1922

இஃது

சைதாப்பேட்டை

ஸ்ரீமான் ஆதிமூர்த்தி இராமாநுஜதாஸர் புத்ரரும்,

ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி ஸ்ரீமான்

வானமாமலை கலியன் இராமாநுஜஜீயர் ஸ்வாமிகளின்

திருவடி சம்மந்தியும்,

உபயவேத ப்ரவர்த்தகரான கோயம்பத்தூரைச்சார்ந்த குரிஞ்சிவாடி

ப்ராஹ்மஸ்ரீ கணேச ராவ் அவர்களிடம்

உபயவேதாந்த ரஹஸ்யங்களையுமோத, உணர்ந்தவருமான

ஸ்ரீமான் க்ருஷ்ணராமாநுஜதாஸர்

அவர்களால் இயற்றப்பட்டு.

சென்னை, சைதாப்பேட்டை

ம-ா-ா-ஸ்ரீ கோ. ஸ்ரீனிவாச நாயகர் அவர்களாலும்,

ம-ா-ா-ஸ்ரீ தி. இராமசாமி முதலியார் அவர்களாலும்,

சென்னை:

தாதா அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1922

இதன் விலை அணு 5

PRINTED AT
THE TATA PRINTING WORKS,
5, THAMBU CHETTY ST., MADRAS

128143

ப்ரவேசம்

பஞ்ச பூதமயமான லோகங்கள் அனேக முளவாயினும், இந்தலோகத்தினும், அதினும் இந்த பூமியின் நடுவிடத்திலிருப்பதும், எண்பத்திநாலாயிரம் யோஜனை யுயரமுள்ளதும், பதினாயிரம் யோஜனை பூமிக்குள்ளே யுருவியோடியிருப்பதும், முப்பத்தீராயிரம் யோஜனை தலைவிரித்திருப்பதுமான மஹாமேருவென்கிற பர்வதத்தின் சுற்றெல்லைகளிலெல்லாம் நம்மைப் படைக்காமல், ஸ்வாயம்பு மநுவின் புத்ரரான அக்னீந்த்ரனுக்கு உரிய ஜம்புத்வீபத்தினும் ஒன்பதாங் கூறான தக்ஷிணபாகத்தில் நாபியினாலாளப்பட்ட பாரதவர்ஷ பரதகண்டமென்கிற இமயத் தென்பாக பூமியானது, நமக்குப்பிறப்பிடமாக ஜன்மிப்பித்தது மிகவும் அருமையாக எண்ணக்கடவீர், இப்படிப்பட்ட புண்ய தேசத்தில் நாம் பிறந்தது மிகவும் அரிது, அதினினும் அவயவ சூந்யமற்று, ஆண்மகனானது மேலான ஆச்சர்யம், அதனினும், அநாதி வேதசாஸ்த்ரோப ப்ரஹ்மணாதி நூல்களுக்கு உரியனாவது மிகவும் அருமைப்பாடு, இவ்வாறான புண்யோத்க்ருஷ்டங்களினால் சிற்சில வேதப்பயிற்சி யோர்ப்படுமாயின் யதார்த்தங்களை நன்குணர்ந்து நடப்பதே வேதப்பயிற்சியுள்ளோரின் கடமையென வறியாமையாலும், தாம் நன்குணரவல்லோமென்னும் அஹங்காரத்தினாலும், அவைகளுக்கு அனர்த்தம் செய்தும், தமக்கியன்றவாறு சப்தங்களை வருவித்துக்கொண்டு அவைதிக பரமாயும், கல்பனைகளாயும், புரளிகளான அர்த்தங்களை

ஸ்தாபித்துக்கொண்டும், யதார்த்தங்களை மறைத்தும், யதார்த்தவாதிகளை நிந்தித்தும், யதார்த்தம் கைவந்த ப்ரஹ்மவித்தாக்ரேசர்களை தூஷித்தும் புத்தகரூபமாய்ச் சுவடிகளில் வரைந்துத் திரியும்பாஷண்டத்ரோகிகளினது, அனர்த்தங்களைக்கண்டித்து, யதார்த்தங்களை ஸ்தாபிக்கவும், அப்பாஷண்டர்களினது தூஷணை நிந்தைகளனைத்தும் சூர்யனைக்கண்ட பனிப்போல் ஓடி ஒளியவுமே இந்நூல் வெளியிடப்பட்டது.

இங்ஙனம்,

எதிராஜ ராமாநுஜதாஸன்,

சைதாப்பேட்டை.

ஓம் பரப்ரமணே நம:

பரப்ரஹ்ம தத்வவிளக்கம்

சுக்ல யஜுர்வேத ப்ருஹதாரண்யகோபநிஷத்தில்
4-ம் அத்தியாயம் 4-ம் பிராம்மணம்.

"அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதமேதத்யத்
ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ தர்வாங்கிரஸ
ஹிதிஹாஸ: புராணம் வித்யா உபநிஷத:"

இத்யாதியாகிய ப்ரமாணங்களின்படியே சர்வ நியந்தாவாயும், சர்வ வேதோபப்ரம்மணுதி நூல்களின் ப்ரதிபாத்தியனுயும், சர்வாந்தர்யாமியாயுமிருக்கும் சர்வேஸ்வரனது ஸங்கல்ப ஸ்வாஸமே ருக், யஜுர், ஸாமம், அதர்வணமுதலாகிய வேதங்களும் இதிஹாசம், புராணம், வித்தை, உபநிஷத் முதலியன என அறுதியிட்டுள்ளபடியால், எம்பெருமானது ஞாயமான கடாக்ஷமில்லையாயின் வேதத்தின் யதார்த்தம் வெளிப்படையாய் தோன்றுதாகையால் தமது பரம க்ருபையால் தாமே தம் ப்ரஜைகளுக்கு விளக்கிக்காட்டிபபடியால் வேதங்கள் அனுதியாய், கல்பங்கள்தோறும் ப்ரஜைகளாகிய ப்ரம்ம, ருத்ர, இந்த்ராதி தேவர்களுக்கும், மஹரிஷிகளுக்கும், ஸர்வேஸ்வரனுல் போதிக்கப்படுவதால், அவ்வேத ப்ரதிபாத்யனுன ஸர்வேஸ்வரன் பக்கலிலும், வேதத்தின் பக்கலிலுமுள்ள ஏற்றங்களை அறிந்தவர்களிற் றலைமையானவர்கள் எம தாரியர்களேயாம். அவ்வேத புருஷர்களில் பெரும்பாலும் நல்ல யோகிகளாயும், ஞானிகளாயும், வேதநிர்வாகிகளாயும், விளங்கினர் அப்பரமஞானிகளுக்குப் பிறகு அமைந்தவர்கள்

அமைப்பின்றி விளங்கினதால் காலக்ரமத்தில் வேதாத்யயனம் குறைவுபட்டுப்போய் வேதமானது கோர்வையின்றி சிதரிப் போனமையால் அதை சீர்திருத்தவேண்டி எமதருட் பெருங் கருணையப்பன் தமது பரம க்ருபையால்

"பரமேஸஸ்யா தத்விஷ்ணு: பரமம்பதம்"

என்கிறபடியே பரமேஸ்வரனும், பரமபத நிர்வாஹனனும், விளங்காநின்ற மஹாவிஷ்ணுவினம்சமாய் "வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணுவே" என்றும் "ஸஹோதாஸ வ்யாச: பராசர்ய:" என்றும் "வ்யாஸயதீதிவ்யாஸ:" என்கிற யஜுர் வேதத்தில் வித்பத்யின் பிரகாரம் வேதங்களினுடைய யதார்த்தத்தை ஸ்தாபிக்கவும், அனர்த்தங்களை நிராகரிக்கவும், கல்பங்கள்தோறும் அம்ஸாரூடராயும், பராசரர் புத்திரராயும், விளங்கிய வேதவ்யாஸபகவான் அவதரித்து அஹோபாஹ்ய மாய் கெம்பீரார்த்தமாய், தைத்ரியம், பௌடிகம், தலவகாரம், ஸாமம் என்று பெயர் பெற்றிருந்த வேதங்களை தமது பரம க்ருபையாலே எதிர்கால நிகழ்ச்சியைக் கணித்து சிற்றறிவினோர் அறிந்துய்யுமாரு ருக், யஜுர். ஸாமம், அதர்வணம் என்பதாகப் பிரித்து தன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்க அவர்கள் அவ்வொவ் வொரு பாகத்தையும் அநேக பகுதிகளாக தொகுத்து அவ் வாறு தொகுத்த பாகங்களுக்கு வேதஸாகைகளென்று பெய ராய் அதிலும் ருக்வேதத்தில் 21, யஜுர்வேதத்தில் 109, ஸாமவேதத்தில் 1000, அதர்வணவேதத்தில் 50, இப்படி 1180, ஸாகைகளாய் ஒவ்வொரு ஸாகைகளுக்கும் ஒவ்வொரு உபநிஷதென்று பெயராய் ஒவ்வொரு ஸாகையும் முந்தியபாகம் யஜ்ஞாதி நித்ய, நைமித்ய, கருமங்களையும், அவைகளை அனு ஷ்டிக்கவேண்டிய விதிகளையும், செய்ய யோக்யதையுள்ள அதி காரிகளையும், செய்விக்றவர்களின் யோக்யதையும், ஆராதிக்க

வேண்டிய தேவதைகளையும், தத் தேவதைகளைப்பற்றிய மந்த்ரங்களையும், தத்தத் கருமங்களின் பலன்களையும், கூறுகிறது. அக்காரணத்தால் இதற்கு கரும காண்டமென்றும், அவித்தை என்றும் கருதப்படுகிறது. வேதத்தில் கருமகாண்டத்திற்கு அவித்தை என்னும் நிரூபணம் மைத்திராயண்ணி யுபநிஷத்தில் 7, 9 கடோபநிஷத்தில் 2, 4 ஈஸாவாஹியோபநிஷத்தில் 11 லும் காணலாம். உத்ரபாகமானது ஸர்வேஸ்வரனை உபாஸிக்கும் மார்க்கமாகிய ஸாங்கியயோகம், நிஷ்காம கருமயோகம், தபசு, ஸகுண நிர்க்குண ப்ரம்மோபாசனவிதியும், ஆத்மலக்ஷணமும், ஸர்வேஸ்வரனுடைய ஸர்வரக்ஷகத்வமும், ஸமஸ்த்த கல்யாண குணத்மஹத்வமும், ஸர்வசேஷித்வமும், ஸ்ரீய: பதித்வம் முதலியவைகளையும், அவைகளுக்கு அங்கோபாங்கமான விஷயங்களையும் கூறுகையாலே, ஸ்வ பரகத்திற்கு ஞான காண்டமென்றும், வித்தையென்றும், மேலேகூரிப்போந்த மைத்திராயண்ணியம், கடோபநிஷத்தும், ஈஸாவாஹியம் முதலிய ஸ்ருதிகள் கூறுகிறது இவ்வாறு விவரிக்கப்பட்ட விஷயங்களை முக்திகோபநிஷத்திலும், விஷ்ணுபுராணத்திலும் விரிவாகக் காணலாம் இப்படி 1180 ஸாகைகளுடைய வேதங்களின் சில பாகங்களே தற்போது 108, உபநிஷத்துகளாக வெளியாயிருக் கின்றது இவ் 1180 ஸாகைகளையுடைய வேதங்களை வேத புருஷனால் வெளியிடப்பட்ட மீமாம்ஸா ஸாஸ்த்திரங்களன்றி வேதத்தின் யதார்த்தம் விளங்காது. அம்மீமாம்ஸா ஸாஸ்த்திரம் 20 அத்யாயங்களாயும், அதில் உத்ரபாகம் 14 அத்தியாயங்களையுடையதாயும், கருமநிச்சய ஸாதனமாயும், ஜைமினி முனிவரால் விளக்கப்பட்டதாயும், உத்ரபாகம் ப்ரஹ்மத்தினுடைய நிச்சயத்தின் ஸாதனமாயும், 6-அத்யாயங்களையுடையதாயும், வ்யாஸபகவானால் விளக்கப்பட்டதாயுமிருக்கும்.

யஜுர்வேத ப்ரதிபாத்யரான வேதவ்யாஸபகவான் "வேதஸாஸ்த்ரார்த்பரம்" என்கையாலே அவ்வேதங்களை யனுசரித்தே பரதத்வ பரம்பொருளை யறியவேண்டும்.

அந்நபூர்ணோபநிஷத்தில்

"யச்சூன்யவாதிநாம் சூந்யம் ப்ரஹ்மப்ரஹ்மவிதாம்சயத்
விஜ்ஞாநமாத்ரம் விஜ்ஞாந விதாம்யதமலாத்மகம்
புருஷஸ்ஸாங்க்ய த்ருஷ்டீநா மீஸ்வரோயோகவாதிநாம்
ஸிவச்சைவாகமஸ்தாநாம் கால: காலைகவாதிநாம்
யத்ஸர்வஸாத்ரஸித்தாந்தம் யத்தத்வம்ததஸௌஸ்திக:"

இதன் பொருள்.

ஸர்வநியந்தாவான ஸர்வேஸ்வரனை உட்யும்வகை எண்ணில வாயினும், சூன்யவாதி சூன்யமாகவும், ப்ரஹ்மவாதி ப்ரஹ்மமாகவும், விஞ்ஞானமுளோன் ஆன்மாவினிடத்தில் விஞ்ஞானமாகவும், ஸாங்க்யன் புருஷனாகவும், யோகவாதி ஈஸ்வரனாகவும், ஸைவ, ஆகமி சிவனாகவும், காலைகவாதி காலமாகவு மறிகிறுனுதலால், ஸர்வ ஸாஸ்த்திர சித்தாந்தங்களினு முடிந்த தத்வப்பொருளும், விகாரரஹிதமான நிர்விகாரனும், கல்பங்கள் தோறும் ப்ரம்ம, சிவ, இந்த்ராதி தேவர்களை நிக்ரஹித்து ஹரிக்கின்றவனுமான ஸர்வேஸ்வரன் ஒருவனேயுளன்.

அதர்வசிரோபநிஷத்.

"காரணநாம்த்யாதா காரணந்துத்யேயஸ்
ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் சர்வேஸ்வர" என்கிறபடியே

சராசர ப்ரபஞ்சங்களுக்கும் காரண வஸ்துவும், த்யாதாவும், அறிபொருளும், பரமான வஸ்துவும், ஸர்வவ்யாபகனுமான ஸர்வேஸ்வரனேயாவன். மேலே கூறியுள்ள ஈஸ்வர ஸப்தத்தால் அஸாஸ்த்ர வாதிகளும், நவீனபண்டாரங்களும் நிகண்டுகளில் கூறும் ஈஸ்வர ஸப்தங்களுக்கு ருத்ராதி தேவர்களுக்குத்தான்

பொருந்துமென நம்புகின்றனர் அதற்கிணங்க சிற்சில ஆபாச மான உதாரணங்களேயும், கதைகளேயும், பிதற்றுகின்றனராயினும் ஆராயுமளவில் சில காரணத்தால் சிற்சில தேவர்களால், தங்களுக்கேற்பட்டுள்ள கடுமைகளைத் தவிர்த்து காப்பாற்றும் பொருட்டு துதித்துக் கொண்டாடப் பெற்றதாம் அதாவது கடுமையால் வருந்தும் ஒருவன் தனது போஷகத்துக்காக பிரரைவருந்திக் கொண்டாடப்பட்ட பட்டப்பெயர்களுக்கு எவ்வாறு அர்த்தம் பொருந்தாதோ அவ்வாறே பெற்றவையாம் ருத்ராதி தேவர்களின் ஈஸ்வரத்வம்.

சகல ஈஸ்வர சப்தங்களுக்கும் ப்ரதிபாத்யன் யாவனெனில்.

" யதா ஈஸ்வர ஸப்தோயம் நாராயணேப்ரதிஷ்டதே " என்றும், " யத்வா ஈஸ்வர ஸப்தோயம் ரூட்யாவத்திஜநார்த்தநம்" என்றும், வசிஷ்டரும் விஸ்வாமித்ரரும் வியாகர்ண சூத்திரங்களினலே ஈஸ்வர சப்தங்களுக்கு ப்ரதிபாத்யனும், அச்சப்தார்த்தங்களுக்கு அர்ஹனுமானவன் ஸ்ரீமந் நாராயண னொருவனே யாவன் என்றும், ஜீவகோடிகளினுடைய அநிஷ்டங்களே போக்கி இஷ்டங்களே கொடுக்குமவனை ஜநார்த்த னொருவனே யாவன் என்றும் ஹிதாநுஸாகர கர்மாநுகுண நியாமக ஸ்வரூபரூப நாமவிபூதிகளேயும், பரத்வகாரணத்வாதி கல்யாண குண ஸமூஹங்களேயும், வேதவேதாந்தாதிகளெல்லாம் ஓதத்தக்க அநந்தவைபவ ஸஹிதனுய் விளங்குமவனுதலால், ஸமஸ்த விலக்ஷண ப்ரமேயப்ரமாதாக்களான சதுர்முக, பஞ்சமுக, வ்யாசபராசர, சுக செளநக, விக, னச, வசிஷ்டாதி ப்ரஹ்மவித்துக்களும், ஸ்ரீபராங்குச பரகாலபட்டர்பிரான் ஆதியான ப்ரஹ்ம விதாக்ரேசர்களும் அப்பரமேஸ்வர ஸப்தப்ரதிபாத்யனை பரப்ரஹ்மத்திற்கு நாராயணனென்ற திருநாமமே அஸாதாரண திருநாமமென்று அறிவுறுத்தினர்களிறே ஆகையாலே மேலே

கூறிய ப்ரமாணத்தாலே “நாராயணோ ப்ரதிஷ்டதே” என்கிற சப்தார்த்தமானது, ஜகஜந்மாதி காரணபூதனாய், சர்வாந்தர்யாமியாய், ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுக்கு அதீதமானவனாய், சர்வவேதப் ரதிபாத்யனாய், ஜீவோத்பதியாய், பரமபாவன சச்சுதானந்த ஸ்வரூபமாயுமுள்ளப் பரமபத நிர்வாஹனுமான, பரமாத்மாவையே ஈஸ்வரசப்தம் ப்ரதிபாதிக்கும் என்றே சூத்திரகாரர்களும் அறுதியிட்டனர், இதற்கிணங்கியே மீமாம்ஸர்களும், மநுவும் அருளிச்செய்தனர்.

ஜகஜ்ஜன்மாதி காரணபூதனாவது.

யஜுர்வேதம் தைத்ரீயோபநிஷத்

“ யதோவா இமாநிபூதானி ஜாயந்தேயோந ஜாதாநிஜீவந்தி
யத்ப்ரயந்த்யபிஸம், விஸந்திதத்வி ஜிஜ்ஞாஸ்வப்ரஹ்மெதி,”

என்கிறபடியே முன்னம் இச்சராசராத்மகமான பூத, பௌதிக ப்ரபஞ்சங்களும், அதற்குள்ளடங்கிய உடலும், உயிரும், சரப, அசரபமுமாய் காணப்படுகிற சகல வஸ்த்துக்களும் எவனிடத்திலடங்கினவோ, பிறகு அடங்கின யாவும் எவனிடத்திலிருந்து வெளிப்படுகின்றனவோ, வெளிப்பட்டயாவும், தத்தமக்கு விதித்தகாலம் வரைகடவாது நிலைபெற்றுநிற்க எவனால் ரக்ஷிக்கப்படுகின்றனவோ அப்பரம்பொருளே நாராயண பரப்ரம்மமென்றறிக.

நாராயணோபநிஷத்

“ நாராயணாத்ப்ரம்மாஜாயதே, நாராயணாத்ருத்ரோ
ஜாயதே, நாராயணாதிந்த்ரோஜாயதே, நாராயணாத்தவா
தசாதித்யா, ருத்ரா வஸவஸ்ஸர்வாணிசந்தாம்ஸி
நாராயணாதேவா ஸமுத்பத்யந்தே, நாராயணாத்ப்ரவர்
த்தியந்தே, நாராயணேப்ரலீயந்தே ”

என்கிறபடியே புருஷோத்தமனாயும், ப்ரணவமந்த்ரப்ரதி பாத்யனாயுள்ள ஸ்ரீமந்நாராயணநிடத்திலிருந்தே ப்ரம்மா, சிவன், இந்திரன், த்வாதசாதித்யர் முதலான பன்னிரண்டு ருத்ரர்களும்,

தேவ, மநுஷ்ய, திரியக், ஸ்தாவராதி சகல பதார்த்தங்களும் உண்டாயிற்றென்றும், அத்தயாபரக்கடலாகிய ஸ்ரீமந்நாராயண னலேயே அவ் ஒவ்வொன்றும் தத்தமக்கு விதித்த நாள்வரை, நிலைபெற்று நிற்கின்றனவென்றும், பின்னர் கற்பக்ஷயத்தில் அகில ஈஸ்வரசப்த ப்ரதிபாத்யனை ஸ்ரீமந் நாராயண நிடத்தி லேயே அவையாவும் லயமாகின்றன வென்றும்.

பைங்களோபநிஷத்.

" ப்ராணிகர்ம வஸாதேஷ படோயத்வத்ப்ரஸாரித:
ப்ராணிசர்ம க்ஷயாத் புநஸ்த்திரோபாவயதி தஸ்மிந்
நேவாகிலம் விஸ்வம் ஸங்கோஸ்தித படவர்வர்ததே
ஈஸாதிஷ்டி தாவரணசத்திதோ ரஜோ த்ரிக்த்தாபஹதாக்யா"

என்கிறபடியே ப்ரம்ம, ருத்ர, இந்த்ராதி தேவர்கள் முதல் ஸ்தாவரம் வரையிலுள்ளயாவும் ப்ராணிகளே யாயினும் கர்ம வசத்தினலே மாருதலடைவதேயாம், சுருட்டப்பட்ட சித்ரப் படம்போலே சகல ஜகத்தையும், அதிலடங்கிய ப்ரம்ம, ருத்ர, ஈசான்ய ப்ரிதிவ்யாதி பதார்த்தங்களனைத்தும் தனக்குள்ளே லயிக்கவும், அனந்தரம் நிக்ரஹிக்கவும், பின்னர் ஹரிக்கவும், வல்லவனுகையாலே (ஹரி) என்னும் திருநாமமுண்டாயிற் றென்று வ்யாஸபகவானும், ஸ்ரீமத்ராமாநுஜாசாரியரும், சங்கரா சாரியரும், மத்வாசரியரும், வித்யாரண்யர் முதலானோரும் தங் கள் பாஷ்யங்களிலே ஸ்பஷ்டமாக அறுதியிட்டனர். இக்கார ணத்தால் ஸர்வநியந்தாவும், திருவஷ்டாக்ஷர ப்ரதிபாத்யனும், விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணனை ஜெகஜ்ஜன்மாதி காரண பூதனென தட்டில்லையிறே.

சர்வாந்தர்யாமித்வமாவது.

நாராயணேபநிஷத்.

" அந்தர்ப்பஹிச்ச நாராயண: நாராயணயேவேதம் ஸர்வம்
யத்பூதம் யச்சபவ்யம் நிஷ்களங்கோ நிரஞ்ஜநோ
நிர்விகல்போ நிராக்யாதச்சுத்தோதேவ ஏகோ நாராயண:"

என்கிறபடியே அவித்யாதி கர்மகட்டுகளும் நாராயணன், ஊர்த்தவமும் நாராயணன், அதோங்கமும் நாராயணன், உள்ளும், புரம்பும் நாராயணன், பஞ்சபூதப் பரப்பாலலங்க்ருதமான சர்வ லோகங்களிலும் அணுவிற்கணுவாயும், மேருக்கு மேர்வாயும், யாதொரு பூதகாலம், பவிஷ்யத்காலம், சர்வமும் நாராயணனேயாய், நிஷ்களங்கனுய், நிரஞ்சனனுய், நிர்விகல்பனுய், சகல பிரம்மாண்டங்களிலுமுள்ள வியவஹாரங்களை ஒருங்குணர்ந்து சங்கல்பத்தால் ஆட்டி அசைப்பிக்கும் அகடிதகடனு சாமர்த்தியமமைந்த பரம்பொருளன்றே சர்வார்ந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயணனென்றும்,

யஜுர்வேதத்தில் தஹாவித்தையில்.

"புருஷயேவேதம் ஸர்வம் யத்பூதம் யச்சபவ்யம்"

என்கிறபடியே காலபரிச்சேதரஹிதமாய், கழிந்த காலத்திருந்த ஜகத்தும், எதிர்கால நோக்குடைய ஜகத்தும், நம்முன் காணப்படுகிற ஜகத் யாவும் அநிருத்த நாராயணனின் அந்தர்யாமித்வமென்றும், இம்முக்கால நோக்குள்ள ஜகத்தும் அதிலுள்ள சேதனு சேதனங்களும் அப்பரம புருஷனுக்கு சரீரமாயமையப்பட்டவை என்றும்,

சுக்லயஜுஸ் சுபாலோபநிஷத்.

"சக்ஷுக்ஷு சக்ஷு த்ருஷ்டவ்யம்ஸ நாராயண: ஸ்ரோ
த்ரஸ்ஸ ஸ்ரோதவ்யம்ஸ நாராயண:"

என்கிறபடியே சகல லோகங்களிலுமுள்ள சகல வஸ்துக்களையும் பார்க்கின்றவனும், பார்க்கப்படுகின்ற சகல வஸ்துக்களும் நாராயணன், கேழ்க்கின்றவனும், கேழ்க்கப்படுகின்ற சகல வஸ்துக்களிலும், சகல சப்தங்களிலும் அந்தர்யாமி யானவன் நாராயணனே என்றும்,

"அந்தச்சரீரே நிஹிதோஹுஹாயாம்"

ஒவ்வொரு தேவ, மநுஷ்ய, திரியக், ஸ்தாவராதி ஸ்தூல சூஷ்மாதி சரீரங்களிலும், உள்ளும், புரம்பும் வ்யாபித்துள்ளோன் நாராயணனென்றும்,

யஜுஸ் கைவல்யோபநிஷத்.

"பரேணநாஹம் நிஹிதோஹாஹாயாம் பிப்ப்ராஜ்யதே
தத்ய தயோவிசந்தி"

என்று சகலஜீவகோடிகளின் ஹிருதயகுகையில் வியாபித்துள்ளோன் சர்வாந்தர்யாமியான வாசுதேவனென்றும்,

கிருஷ்ணயஜுஸ், ஸ்வேதாஸ்வதா உபநிஷத்.

"அணோரணியாம் மஹதோ மஹியாம் ஆத்மாஹா
ஹாயாம் நிஹிதோஸ் ஜந்தோ"

என்று அனந்தமான பிரம்மாண்டங்களிலும், மேருத்ராணுதிகளிலெல்லாம் உள்ளும் புரம்பும் வியாபியாநின்றவன் க்ருபாவிஷிஷ்டனான ஜநார்த்தனனென்றும்,

மஹா நாராயணோபநிஷத்.

"யச்சகிஞ்சித் ஜகத்தஸ்மிந் த்ருஷ்யதேஸ்ரூயதேபிவா
அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வியாப்யா நாராயணஸ்தித:"

என்கிறபடியே காலபரிச்சேதரஹிதனாய், த்ரிகாலநோக்குள்ள ஜகஜ் ஜீவகோடிகளின் துருஷ்டிக்குக் காணப்படுகிற மேருத்ராணுதிகளினுள்ளும் புரம்பும் வியாபிப்பவனும், அவ்வொவ்வொன்றினின்று மெழும் சப்தங்களை கேழ்கும் ஜீவகோடிகளிலும், அவ்வாறு நிகழும் சப்தங்களிலும், நிஷ்களங்கனாய், நிரஞ்சனாய், நிர்மலனாய், அபின்னனாய், அவங்மனோகோசரனாய், தனக்குப்புறம் பிற்போகவிட்ட சிதசித்துக்களில்லாமல் அவைகளை விடாதே வளைத்துக்கொண்டு சுகசயனனாய் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளே ஸ்ரீமந்நாராயணனென்றும்

மஹா நாராயணோபநிஷத்.

"அநந்தமவ்யயம கவிம் சமுத்ரேந்த்ரம் விஸ்வசம்
பவம் பத்மகோசபிரதிகாசம் ஹிருதயம் சாப்யதோமுகம்"

என்று சகலபிரம்மாண்டங்களின் ப்ருதிவியில் வசிக்கும் ஜீவ கோடிகளின் வியாபகமின்றிக்கே சகல பிரம்மாண்டங்களினு முள்ள சப்த சமுத்ரங்களில் வசிக்கும் மச்சகுழாங்களிலும், அச்சமுத்ரங்களினின்றெழும் குமிழிகளிலும், அலைகளிலும், அவ்வலைகளினின்று சிதரும் ஜலத்துளிகளிலும், அத்துளி களின் ஒவ்வொன்றிலும் தனித்தனியாய், உள்ளும் புறம்பும் வியாபியா நின்றவன் ஸ்ரீமந்நாராயணனே என்றும்,

கோபாலதாபன்னியுபநிஷத்.

"ஏகோதேவஸ்ஸர்வபூதேஷு கூடஸ் ஸர்வவ்யாபீ
ஸர்வபூதாந்தராத்மா"

சகல பிரம்மாண்டங்களிலும், சராசரபூதங்களிலும், சகலஜீவ கோடிகளிலும், சர்வாந்தர்யாமியாயிருக்குமவன் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவே என்றும்,

அதர்வசிரோபநிஷத்.

"அஹமேஹபிரதமமாசம் வர்த்தாமி பவிஷ்யாமி
சநாந்யய: கச்சிந்மத்தோ வியக்துருக்த: ஹிதிசோ
ந்ராந்த்ரம் பிராவிசத்திசஸ்சாந்தரம் பிராவிஸச்
சோஹம்நித்யா நித்யோஹம் பிரபஞ்ச்யோஹம்
ப்ரத்யஞ்ச்யோஹம் முதஞ்ச்யோஹம் மதஞ்ச்
யோத்வா திஷத்சாஹம் த்ருவஷு ஜசத்அனுஷத்
சோஹம் சந்தோஹம் தியரஹம் பார்கஸ்வத்சோஹம்"

என்கையாலே சிவபிரான் தானே தெய்வ சபையில் நின்றும், யதார்த்தமாயும், சர்வவேததாத்பர் யார்த்தமாயும், சொல்லுவதாக நிச்சயித்து, சர்வாந்தர்யாமியாயும், ஜீவோத்பதியுமான, ஸ்ரீமந் நாராயணன் எனக்குள் அந்தர்யாமியாயிருக்கையால் தான் நான் திரிலோகாதிபதியாயிருக்கப் பெற்றேனென்றும், அவ்வேற்றத் தாலே பூத பவுஷ்ய வர்த்தமான காலங்களிலும், எனக்கீடானவ

ரொருவருமில்லை என்றும் தனது சந்தோஷப்பெருக்காலே பிர சங்கித்தனரென்றும், இப்பிரமாண பெருக்கை ஸ்கந்தோப நிஷத்தும் காணலாம்.

மஹோபநிஷத்.

"பீதாபாஸ்யாத்தனுபமா தஸ்யஸிகாயாமத்யே
பரமாத்மா வியவஸ்தித: ஸ பிரம்மா ஸ ஸிவா ஸ ஸிந்
த்ரோக்ஷர: பரமஸ்வாராட்"

என்று ஒவ்வொரு ஜீவகோடிகளின் ஹிருதய நடுநிலைமையில் இருக்கும் ஜடாக்கினியின் மத்தியில், கருமேகத்தினை பிளவு பட ஓடி ஒளியும் மின்னல் கொடிபோலும், நெல்நுனிபோல் மெல்லியதாயும், ஸ்வயம்பிரகாசமாய், சமனற்றதாய், விராட் புருஷனை பரமாத்மா வியாபித்துளன் அவ்விராட் புருஷனை ஸ்ரீமந்நாராயணன், பிரம்மாவிற்குள்ளும், சிவனுக்குள்ளும், இந் தரனுக்குள்ளும் இவ்வாறே அந்தர்யாமியாயிருக்கிறானென்றும் அப்பரமபுருஷன் மூவித பேதமற்றவனென்றும், தன்னை யொழிந்த சர்வராலும் தொழப்படுமவனென்றும், கருமத்திற்கு வசப் படாதவனென்றும், ஸ்ருதிஸ்ம்ருதியாதி சகல வேதவேதாந் தாதிகளும் ஸ்ரீமந்நாராயணனே சர்வாந்தர்யாமி என்றும், பர ப்ரஹ்ம மென்றும் நிச்சயிக்கப்பட்டது. இத்யாதிப் ப்ரபல ப்ரபாவங்களைக்கொண்டே (ஹரி: ஓம்) என்று மும்முறை ஆர ணங்கள் முறையிடுகின்றன.

ஸத்வ, ரஜதமோ குணங்களுக்கு அதீதமான நிற்குணமாவது.

திருபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்.

"ஸுத்தசத்வம் மயோலீலாக்ருஹீத நிரதிசையானந்த
லக்ஷணோமாயோபாதிகோ நாராயண ஆஸீத் ஸயே
வநித்யபரிபூரண பாதவிபூதி வைகுண்டநாராயண:"

என்று சுத்தசத்வமயமான ஸ்ரீவைகுண்டத்தி லுள்ளவனானும் அச்சத்வகுண ரஹிதனுயும், மாய்கையை ஸ்வாதீனமாயுடை

யவனுனலும் அம்மாய்கைரஹிதனயும், விளங்கும் ஸ்ரீமந் நாராயணனை தியாநிக்கின்றேனென்று இச்சுருதி உத்கோஷிக்கின்றது.

அதர்வணவேத திருபாத்விபூதி மஹா நாராயணேபநிஷத்.

"நாராயணும் ஸை:ஜோகுணப்ரதாநை ரேகைக
ஸ்ருஷ்டி கர்த்ருபி ரதிஷ்டிதாநி விஷ்ணு மஹே
ச்வராக்யைர் நாராயணும் ஸைஸ்ஸத்வதமோகுண
ப்ரதாநை ரேகைக ஸ்திதிஸம்ஹாரகர்த்ரு பியாதிஷ்டிதாநி"

என்று யாதொரு பொருளே ஆதிமத்யந்த மென்னும் பாகுபாடாக விருத்தல்போலே சர்வேஸ்வரனுன நாராயணனே ஸத்வ ரஜதமஸ்சுக்களாகிய முக்குணங்களுக்கும் ப்ராதாநியாயும் அதீதனயும், விஷ்ணு, ப்ரம்ம, ருத்ர, ரென்பவர்களின் முத்தொழிலுக்கும் ப்ரதானியாயும், அதீதனயும் இம்மூவித தெய்வங்களை கடந்தவனுயும், விளங்கா நின்றவன் ஸ்ரீமந்நாராாணனென்று வேதங்களிலும், ஸ்ருதியாதி உபநிஷத்துக்களிலும், நிவாச தீக்ஷித முதலான பாஷ்யங்களிலும், பிரம்மஸூத்ரத்தாலும் நிரூபிக்கப்பட்டது.

வேதப்ரதிபாத்யனுவது.

வ்யாகரணசூத்திரம்.

"சர்வவேதாய யத்பதம் மாமநந்தி சர்வவேதாய
த்ரைகம்பவந்தி நதஸ்மவசஸாம் ப்ரதிஷ்டாவச
சாம் வாத்ஸ்யஉத்தமம் நாராயணபரோவேத:"

என்று சர்வவேத வேதாந்தாதிகளும் யாதொரு பரதத்வமான பதத்தை நாடுகின்றனவோ, ஸ்ருதியாதி சகல ப்ரமாணங்ளும் யாதொரு மங்களவஸ்துவை தியாநிக்கின்றனவோ, இதிஹாசாதி சகல சாஸ்த்திரங்களிலும் யாதொரு பரமபாவன பரம்பொருளை துதித்துக் கொண்டாடப்படுகின்றனவோ அவ்வுத்தம பரதத்வபரம்பொருளே ஸ்ரீமந்நாயணனென்றும்.

“ஸாக்ஷாத்நாராயணோதேவ: க்ருத்வாமத்தியம்கிர்”

தனும் மகியானுத்ரதேலோகாந் காருண்யஸாஸ் ரபாணினும்”

என்று யாதொரு வேதமுதல்வனும் சர்வநியந்தாவும் சகல ஜீவகோடிகளாலும், உபாயோபேயமாக ஆஸ்ரயிக்கப்படுவது மான பரம்பொருளே ஸ்ரீமந்நாராயணனென்றும்

“நாராயணபரோவேதோதேவா நாராயண நாங்கஜா” என்றும்,

“ஆலோடியா ஸர்வஸாஸ்ராணிவிசாரியே ஸ்ப் புன புன:
யிதமேஹ ஸ்நிஷ்பன்னம்த்தேயோ நாராயணசத:”

என்று சர்வசாஸ்த்ர ஸித்தாந்தங்களிலும், மநுவாதி நூல்களிலும் வஸிஸ்டாதி சூத்ரங்களிலும், பலவாராக பரிசோதித்து நாராயண நாமமுள்ளான் யாவனோ அவன்றான் சுத்தசாத்விக ப்ரஹ்மமென்றும் ஆணையிட்டுரைத்துவிட்டன வேதவேதாந்தங்களென்றுணரக்கடவீர்.

ஜீவோத்பதியாவது.

மஹாநாராயணாதி உபநிஷத்துக்களிலும், ஈசம், கேனம், கடகம், மஹோபநிஷத் முதலான உபநிஷத்துக்களிலும்

“நாராயணாத் ப்ராணோஜாயதே, என்றும், நாராயணாத்
ப்ரவிர்த்யந்தே, என்றும், நாராயணாத்ப்ரலீயந்தே என்றும்,”

ஜகஜ்ஜன்மாதி சர்வஜீவன்களையும் நிக்ரஹிக்கவும், ரக்ஷிக்கவும் பின்னர் ஹரிக்கவுமான அசாதாரண க்ருத்யங்களை செய்யவல்லோனுகையால் ஸ்ரீமந்நாராயணனே ஜீவோத்பதி என சகல ப்ரமாணங்களிலும் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன பகவத்ஸாஸ்த்ரமாகிய ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் ஜீவோத்பதி ப்ரமாணம் ஸ்பஷ்டமாய் விளக்கப்படுவதால் அதை அனுசரித்தே ஸ்ருதிகளும்

மஹோபநிஷத்

“விஸ்வமேவேதம் புருஷஸ்தத்விஸ்வமுபஜீவதி
பதிம்விஸ்வஸ்யாத் மேஸ்வரம் ஸாஸ்வதம்
ஸிவ அச்சுதம் நாராயணமஹாங்கேயம்”

என்று சகல பிரம்மாண்டங்களும் அதிலுள்ள ஜீவகோடிகளும் உஜ்ஜீவிப்பதற்குடலாய் ஆஸ்ரயிக்கப்படுமவன் எவனோ சகல சேதனா சேதனங்களும் எவனால் நிலைபெற்று நிற்கின்றனவோ சகல ப்ரம்மாண்டங்களுக்கும் அதிலுள்ள தேவ மநுஷ்யாதி சகலபதார்த்தங்களுக்கும் (பதி) நாயகனாய் நின்றவன் எவனோ பரமேஸ்வரனாயும், அழிவற்றவனாயும், மங்களஸ்வரூபனாயும், அச்சுதனாயும் விளங்காநின்றவன் எவனோ அவனே ஸ்ரீமந் நாராயணனென்று வேதவேதாந்தாதிகளும், இதிஹாசாதி சாஸ்திரங்களும், வெளிப்படையாய் ஆணையிட்டுரைத்துவிட்டன

இத்யாதி ப்ரமாணங்களால் பரமாத்மாவாயும், ஜீவோத்பதியுமான ஸ்ரீமந் நாராயணன் சேஷியான தான் நவவித ஸம்மந்தத்தால் ஜீவாத்மாவை தனக்கு சேஷப்படுத்தி ரக்ஷிக்க முன்வருகிறானாகையாலும் ஜீவோத்பதியென தட்டில்லையிறே.

ஸ்ரீ பாஷ்யம்.

"இச்சயாயது பாதேயம் யஸ்யாதிஸயவித்தயே
உபயாநுபயைகைக ஜுஷோதௌ ஸேஷ ஸேஷிணௌ" என்றும்.

"அயமே வாத்மஸரீரபாவ: ப்ருத்க்ஸித்தய நர்ஹாதாராதேயபாவ:
நியந்த்ருநியாம்யபாவ: ஸேஷஸேஷிபாவஸ்ச" என்றும்.

"பரகதாதிஸயார்தாநேச்ச யோபாதேயத்வமே
வயஸ்யஸ்வரூபம் ஸஸேஷ: பரஸ்ஸேஷீ" என்றும்.

"யஸ்யசேதநஸ்யயத்த்ரவ்யம்ஸர்வாத்மநா
ஸ்வார்த்தேநியந்தும்தாரயிதும் சஸக்யம்தச்சே
ஷதைகஸ்வரூபம்ச தத்தஸ்யஸரீரம்"

என்னும் ஸ்ருதி வாக்யங்களுக்கு, வேதார்த்த சங்க்ரஹத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும், நியந்த்ரு நியாம்யபாவம், ஆதார ஆதேயபாவம், ஸேஷஸேஷிபாவமாகிற இம்மூன்று சம்மந்தத்தையும் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

" யதேஷ்டவிநியோகார்ஹம் ஸேஷஸப்தே
நகத்யதே ஈஸ்வரேண ஜகத்ஸர்வம் யதேஷ்டமவிநியுஜ்யதே"
என்று ஸர்வஸேஷியான ஸ்ரீமந்நாராயணனுக்கு சகல ஜீவகோடிகளும் எப்போதும் எக்காலத்தும் இஷ்ட விநியோ ஹார்த்தமாக ஸேஷப்படவேண்டி யிருக்கையாலும்,

" தேவகீஸூத கோவிந்த வாஸுதேவ ஜகந்பதி" என்றும்.

" நாராயணப்பதிம் ஸர்வலோகாந்" என்றும்.

" நாராயணப்பதிம் ஸர்வஜீவாநாம்" என்றும்.

ஸர்வலோகங்களுக்கும், சகல ஜீவன்களுக்கும் நாயகனையும், பரப்ரஹ்மமாயும், தேவகீபுத்ரனையும், கோகுல திலகமாயும், வாசுதேவனை ஸ்ரீமந்நாராயணனை தியானிக்கின்றேனென்று மஹா நாராயணோபநிஷத் முதலான ஸ்ருதிகள் உத்கோஷிக்கையாலும்,

" மநூநாம்ஸர்க்கமசுரோந்முகபாஹூருபாதத : சதுர்ணும்
ப்ராஹ்மணதீநாம் ஸர்க்கமகத்வாரம் ஜகத்பதி :"
என்று ஸ்ரீபாஞ்சராத்ர, விஷ்வக்ஸேந, பாராசர, நாரத, அநுருத்த, பாத்மாதி முதலிய ஸம்ஹிதைகளிலும் ஜீவோத்பதி ப்ரமாணம் ஸ்பஷ்டமாய் கூறுகையாலும், ப்ரம்மருத்ரேந்தராதிபிபீலிகாநந்தமான சேதனசேதன வர்க்கங்களை யெல்லாம் வளர்த்துக்கொண்டு அவ்வவ்ப்ரகுதியாதிகளைத் தமது ஜாயமான கடாக்ஷத்தால் ரக்ஷித்து பின்னர் பஞ்சபிரளய காலத்தில் தன் சங்கல்பாதீனமாக தம்மில் அயனப்படுத்துவோனதலால் (ஜீவோத்பதி) ஜகஜ்ஜீவநாயகனெனத் தட்டில்லையிறே.

சச்சிதாநந்த மயமான பரமபத நிர்வாஹனவது.

சுக்லயஜுஸ் நிராலம்போபநிஷத்.

" ப்ராணேந்த்ர்யா அந்தகணர்ணகுணதேஹ
பாதாம் சத்சிதாநந்தமயம் ஸர்வசாக்ஷிஹம்
நித்ய மூர்த்தர் ப்ரஹ்மமஸ்தாநம் பரமபதம்"

என்று வாக்கு மனசுக்களாகிய ப்ராணேந்த்ரிய வியாபாரங்களுக்கு எட்டாததும், ப்ரம்மருத்ரேந்த்ராதி தேவர்களால் அரியத்தகாததும், த்ரிகாலத்தும் பரத்வநிலை பெற்றதும், சத், சித், ஆநந்தமயமானதும், சர்வசாக்ஷியமானதும், விஷ்வக்சேநாதி நித்தியர்களும், ஸ்ரீமந்நாரணனையே உபாயோபேயமாய் ஆஸ்ரயித்துய்யும் சடகோபாதி ஜீவந்முக்தர்களும், வர்த்திக்கும் பரப்ரஹ்மஸ்தானம் பரமபதம் என்றும்,

த்ருபாத்விபூதி மஹாநாராயணோபநிஷத்.

"ஸுத்தசத்வம் மயோலீலாக்ருஹித நிரதிசயா
னந்தலக்ஷணோமாயோபாதிகோ வைகுண்ட நாராயண:"

என்று சுத்தஸத்வமாயும், பஞ்சபிரளயானந்தரம் பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனின் வாஸஸ்தானமாயும், நிரதிசையானந்தமயமானதும், மாயையாதி சகல விகாரரஹிதமானதாயும், நித்யமானதாயும் விளங்கியது பரமபதம் என்றும்

அதர்வசிகை.

"யந்ந தேவாந்ந முநயோந ஸாஹந்ந ஸஸங்கரஹ
ஜாநந்தி பரமேஸ்ஸ்யா தத்விஷ்ணு: பரமம்பதம்"

என்று தெய்வசபையில் தானே பிரம்மா, யதார்த்த பிரசங்கிதமாக தேவர்களாலும், ஜனகாதி முனீஸ்வரர்களாலும், பிரம்மாவாகிய என்னாலும், சம்ஹார கர்த்தாவாகிய சங்கரனாலும், பரமேஸ்வரனாய் விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணனது நிரதிசையானந்த மயமான பரமபதத்தை அறியமுடியாது என்றும்,

யஜுர்மண்டல ப்ராம்மோபநிஷத்.

"தந்மனோவி லயம்யாதி தத்விஷ்ணு: பரமம்பதம்"

என்று மஹம்மேருவை ஆதாரமாய் கொண்ட கைலயாதி சத்யலோகம் முதலான லோகங்களும் பிரம்ம, சிவ, இந்த்ராதி சகல

தேவர்களும், கற்பக்ஷயத்தில் ஸ்ரீமந்நாராயணனால் ஹரிக்கப் பட்டு பின்னர் பரமபதநிர்வாஹநாய் விளங்குகிறானென்றும்

"பேதாபாவாத்யேத தேவபாமதத்வம்"

என்று சச்சிதாநந்த மயமானதும், நிர்விகாரமானதும், ஸ்வயம் பிரகாசமானதாயுமுள்ள, பரமபதமே பரமாத்மாவின் வாஸஸ் தானமான தென்றும், அப்பதமே மோக்ஷப்ரதான மென்றும் மிச்சுருதி ஆணையிட்டுரைத்து விட்டது.

ஸ்ரீ விஷ்ணுபுராணம் 6-ம் அம்சம்.

"தத்ப்ராஹமதத்பாந்தாமதத்த்யேயம் மோக்ஷகாங்க்ஷிபி:
ஸ்ருதிவாக்யோதிதம் ஸூக்ஷ்மம் தத்விஷ்ணு: பரமம்பதம்"

என்று யாதொருபரப்ரஹ்மம் இச்சராசர ப்ரபஞ்சங்களனைத்தை யும் உண்டுமிழ்ந்து அளந்தாண்டதுமான வியவஹாரங்களை ஒருங்குணர்ந்து நடத்தவல்லதோ அப்பரம்பொருளே பரந்தாம னென்று ஸ்ருதி ஸ்ம்ருதி இதிஹாசங்களும் ப்ரதிபாதிக் கின்றதோ அப்பொருளின் நிர்வாஹஸ்தானமே மோக்ஷஸ்தான பரமபதம் என கண்டிதமாயுரைத்து விட்டபடியால் ஸ்ரீமந்நாரா யணனே பரமபத நிர்வாஹனென குறையில்லையிறே ஆகை யாலேயிறே ஜகஜ்ஜன்மாதிகாரணபூதனும், சர்வாந்தர்யாமியும், த்ரிகுண அதிதமானவனும், சர்வவேதப்ரதிபாத்யனும், ஜீவோ த்பதியும், சச்சிதாநந்தமயமான பரமபத நிர்வாஹனுமான ஸ்ரீமந் நாராயணனே சகலநிர்வாஹனென்றும், ப்ரஹ்மசப்த ப்ரதிபாத்யனென்றும், பரமேஸ்வரனென்றும், ஸர்வ ஸேஷி என்றும், வேதவேதாந்தாதிகள் பன்முறை முறையிடுகின்றன.

நீலகண்ட சிவாச்சாரியரும், சிற் சில சாஸ்த்ரபயிர்ச்சி யுள்ளோராயினும், தாம் ஓர் பாஷ்யம் செய்யவல்லோராயினும், வேத யதார்த்தம் விளங்காததினாலோ, அர்த்தமறியாமையி னாலோ, சைவ அபிமானத்தினாலோ வேத தாத்பர்யங்களுக்கு

சிவபரமாய் வியாக்யானம்செய்யப் புகுந்தகாலத்தும் மஹோப நிஷதாதி ஸ்ருதிகள் இடங்கொடாமையால் கேவல நிமித்தகாரணம் சிவனென்கிற சைவவாதத்துக்கு நேர்விருத்தமாய் ஜகத்துக்கு உபாதான காரணமும் நிமித்தகாரணமும் ப்ரஹ்மமென்று தமது நீலகண்ட பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறாரு யினும் இவரது பாஷ்யத்தை ஸ்ருதியாதி ஸாஸ்த்ரங்களும், யதார்த்தவாதிகளும், பாஷ்யகாரரென சரஸ்வதியால் பட்டப்பெயர் தரித்து மிஸ்ர வைதிக வைதிக மதங்களில்சிறந்த ஸ்ரீமத் பரம வைதிக சுத்த சத்வகுண விசிஷ்டாத்வைத மதத்தை நிலைநாட்டிய ஸ்ரீமத் ராமாநுஜாசாரியரும், இன்னும் இதர பாஷ்யகாரரும் சம்மதியாராகையால் இவரது பாஷ்யம் கண்டிக்கத்தக்கதே.

ப்ரஹ்மசப்த ப்ரதிபாத்யனுவது.

அதர்வண முண்டகோபநிஷத்.

" யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வ வித்யஸ்யஜ்ஞாநமயம்தப:
தஸ்மாதேதத் ப்ரம்ஹநாமரூப மந்நம்சஜாயதே"

என்று யாதொரு பரமேஸ்வரன் அநந்தங்கோடி பிரம்மாண்டங்களையும் தனது வக்ஷஸ்தலத்தில் லயிக்கவல்லவனுயும், த்ரிகுண பிரதானியாயும், சர்வஞ்யத்வாதி கல்யாணகுண பரிபூரணனுயுமுள்ளான்யாவனே அவனே ப்ரஹ்மசப்தப்ரதிபாத்யனென்றும்,

" யதேதத்பரம்ப்ரம்ஹ: வேதவேதேஷு
பக்ஷயதே ஸதேவ: புண்டரீகாக்ஷ: ஸ்வயம் நாராயணப்ரபு:"

என்று த்விதீயமான பரப்ரஹ்மமாயும், சர்வவேத ப்ரதிபாத்யனுயும், பரதேவதையாயும், செந்தாமரை புஷ்பமொத்த நேத்ரங்களையுடையவனும், ப்ரபுவுமான ஸ்ரீமந் நாராயணனே ப்ரஹ்மசப்த ப்ரதிபாத்யனென்றும்,

சாமவேத மஹோபநிஷத்.

" நாராயணபரப்ரஹ்ம தத்வம்நாராயணபர:"

என்று நாராயண சப்த வாச்சியனான ஸ்ரீமந்நாராயணனே ப்ரஹ்ம சப்தப்ரதிபாத்யனென ஸ்ருதிகளும் ஊர்ஜிதப்படுத்திவிட்டன.

திரிபாத்விபூதி மஹா நாராயணோபநிஷத்.

" நாராயணபரப்ரஹ்மா தத்வம்நாராயணபர :
நாராயணபரோஜோதி ஆத்மாநாராயணபர :"

என்று ஸ்ரீமந் நாராயணனே பரப்ரஹ்மமென்றும், பரமாத்மா வென்றும், அந்நாராயணனே பரஞ்ஜோதிமய ப்ரஹ்ம சப்த ப்ரதிபாத்யனென நிலைநாட்டப்பட்டது.

ஷை உபநிஷத்

" திசச்சநாராயண : காலச்சநாராயண :
கர்மாலகிலஞ்சநாராயண : காரணாத்மகம்ஸர்வம்
கார்யாத்மகம்ஸகலம்நாராயண : நாராயணபர
ப்ரஹ்ம நாராயணநமோஸ்துதே"

என்று சர்வ அண்டங்களும், அதிலுள்ள சராசர சமூஹங்களும், ஸர்வதிசைகளும், த்ரிகாலங்களும், நாராயணன், வேதாத்யயனகருமங்களும் தத்தத் பலன்களும், தத்கருமதேவதைகளும், தத்கருமத்தை செய்பவனும் நாராயணன் சகல காரணங்களும், சகல காரியங்களும் நாராயணனே அப்பரப்ரஹ்ம ஸ்வரூபனும், பரமாத்மாவுமான ஸ்ரீமந் நாராயணனை நமஸ்கரிக்கின்றேனென்று ஸ்ருதி உத்கோஷிக்கின்றது.

" அதகஸ்மாதுச்சீதே ...கோநாராயணபரப்ரஹ்ம :"

என்று ப்ரஹ்மசப்த ப்ரதிபாத்யனான நாராயணனுக்கு சகல ப்ரம்மாண்டங்களும், ப்ரம்மாதி பிபீலிகாந்தமுள்ள தேவ, மநுஷ்ய, திரியக், ஸ்தாவராதி பூத பௌதிக சராசர சமூகங்களும் த்ரணீகரிக்குமாரு வரம்பிடப்போகாத ஒத்தார் மிக்காரில்லை யெனக் கண்டிதமா யுறைத்துவிட்டது.

" நநாராயணசமோநாந்யஸர்வலோகேஷு வித்யதே".

என்று போதாயனரும் தமது சூத்ரத்தில் அவ்வாறே ச

அண்டங்களும், சர்வதேவர்களிலும் ஸ்ரீமந் நாராயணனுக்கு மேரு த்ரணதியென வரம்பிடப் போகாத அளவிறந்த வேற்றத்தையுடைய பரப்ரஹ்மமென்று அறுதியிட்டனர்.

இத்யாதி ப்ரஹ்ம சப்த்தப்ரதிபாத்யனும், ஜீவோத்பதியும், ஜகஜ்ஜன்மாதி காரணபூதனும், சச்சிதாநந்தமய பரமபத நிர்வகனுமாய் நின்றவன் ஸ்ரீமந்நாராயணனென்று வேதவேதாந்தாதிகள் ஏககண்டமாய் ஊர்ஜிதப்படுத்திவிட்டன.

இத்யாதி பரமாத்மா ஸ்ரீமந்நாராயணனேயாய் ப்ரம்மாதி பிபீலிகாந்தமுள்ள சகலதேவ மநுஷ்பாதி வர்க்கங்களனைத்தும் ஜீவாத்மாக்களேயாயினும்,

சிவபிரான் பக்த சிரேஷ்டனெனல்

சுக்லயஜுர் ப்ராஹதாரண்யோப நிஷத்

“ யச்ரமாத்தப ஸோபிஜா தோவித்யப்ரவித் ”

என்று ருத்ரன் செய்ததவங்கள் செய்து சிவனாயினன் என்றும்.

க்ருஷ்ணோபநிஷத்

“ ருத்ரேபக்தேப்ரஹ் மணி ”

என்று ருத்ரனன சிவன் ப்ரஹ்மஞ்ஞானியான மஹாபக்தனென இச்சுருதி கூறுகையாலும்,

க்ருஷ்ணயஜுஸ்சுவேதாஸ்வதர உபநிஷத்

3-ம் அத்தியாயம் 4-வது மந்த்ரம்

“ விஸ்வாதி கோருத்ரோ மஹருஷி :”

என்று சிவபிரான் இப்பிரபஞ்சத்தில் சிரேஷ்டமான தபசியாய் விளங்குகிறானென்றும்.

ருத்ரகீதை அகஸ்தியசம்ஹிதை, பிரம்ம புராணம்

“ சாம்பேயபுஷ்ப ஸஹஸ்ரை: ஆநர்ச்சசங்கரோ ஹரிம் ”

என்று சிவபிரானது பக்தியின் மிகுதியாலே ஆயிரம் சண்பக ஷ்பங்களினால் பரமாத்மாவான ஹரியை அற்சித்து பக்தி ருக்கைப் பிரசித்தப்படுத்தினாரென்றும்.

பாத்மோத்ர காண்டம்

"கைலாஸசிகரோம்யே விஷ்ணுமாராத் தயசங்கர :
உபவிஷ்டத்ததோ போக்தும் பார்வதீம் சங்கரோப்ரவீத்"

என்று கைலாய சிகரத்தை ஸ்தானமாய்க் கொண்டு இங்நிக்ருஷ்டமான சம்ஹாரத் தொழிலினின்றும் விடுபட்டு பரப்ரஹ்ம சாயுஜ்யமான பரமபதத்திற்சென்று பரமாத்மா வைபவாநந்தத்தை அனுபவிக்க வேண்டியே நான் ஸ்ரீ மாஹாவிஷ்ணுவை இடைவிடாது தியாநிக்கிறேனென்று தனது பத்நியும், பர்வதராஜனின் புத்ரியுமான பார்வதியுடனே சிவபிரான் பரமாத்மாவினிடம் தனக்குள்ள அந்தரங்க பக்தியை வெளியிட்டன ரென்றும்.

இதியாச பாகவதத்தில் ஸ்ரீ வேதவ்யாஸ பகவான்

"ஹஸ்தேக்ஷமாலா ஹ்ருதய ராமதத்வம் ஜிஹ்
வாக்ரபாகேவராம மந்த்ரம் ஸமஸ்த்தகே
கேசவ பாததீர்த்தம் ஸிவம் மஹாபாகவதம் ஸ்மராமி"

என்று சிவனது ஹ்ருதயத்தில் ஸ்ரீ ராமபிரானே ஜகத்காரணவஸ்து என்ற தியானமும், நாவில் அம் மஹாமந்த்ரமே உச்சரிப்பும், கரத்தில் அம்மந்த்ர ப்ரதானனென விளக்கப்படும் ஜப மாலிகையும், அப்பரமாத்மாவின் ஸ்ரீபாததீர்த்தத்தாலலங்கிருதமான சிரசும், அப்புருஷோத்தமனுக்கே தான் அந்தரங்க பக்தனென வெளிப்படையாய் விளக்கிக் காட்டவல்ல ஜடையாதி சின்னங்களாகையால் சிவன் மஹா பக்தனே என்று நிச்சயிக்கப்பட்டது.

"ஸிவாக்ருதி: பஸ்மவிகிதகாத்ரே சர்மாம்பரம்
பிரம்மகபால மாலாத்ருதாக்ஷ மாலாபித்ருகாந
நஸ்த ஜடாதராதி வசனுகிமேயம்

என்று சிவபிரானது பக்தியின் நிலைமை, திரேகமெல்லாம் பஸ்மத்தாலலங்கிருதமாயும், பிரம்மஹத்தியினலே தொத்தியமண்டையோடுடைய அஸ்தமும்,ஜபமாலிகையாதி ஜடைமுடி தரித்த

சிரசும், புலித்தோலுடைய ஸ்மஷான நிர்வாணிஸ்வரூபமமையப் பெற்றதுமான பக்தியின்பெருக்கை நிரூபிக்க வல்லவனென்றும்.

இத்யாதி சகல ப்ரமாணங்களாலும் சிவன் பக்தசிரேஷ்ட னென்றே நிரூபித்து விட்டன.

இதற்கிணங்கியே வேதபுருஷனாய் விளங்கிய திவ்யகவி அழகிய மணவாளர் அருளிச் செய்த.

அஷ்ட பிரபந்தத்தில்

"புகலிராமனடி கொள்பாதுகையகலு முக்கண்ணன் காமதே
திங்கள்சூழ்திருச்சித்ர கூடமேவிய யெங்கள் கோவிந்தராஜர்க்கு
தினமுமே கூத்தாடியானவன் திருச்சிற்றம்பல வணனே" என்றும்,

"கானேந்து தாமரைவாவியுளானை காவினயர்ந்
தூனேந்துமூல மென்றோதியநாட் சென்றுதவுகையால்
தேனேந்து சோலையரங்கனல்லாற் றெய்வமில்லை யென்றே
மானேந்துகையன் மழுவேந்தினனிந்த மாநிலத்தே" என்றும்,

சர்வசாஸ்திர நிபுணரும் வேத யதார்த்தம் நன்குணர வல்லவரு மான ஸ்ரீமாந் ராமாநுஜநாவலரும் தமது வைராக்ய சூர்யோதய மென்னும் சாத்விக க்ரந்தத்தில், பதித பாவனனான அப்பரமாத் மாவினுடைய ஸதா ஸ்ரீபாததீர்த்த மாலாலங்காரண சேகரராம்.

"காத்திலுறுஞ் சபவடத்தை யகற்றே னென்னைக் காணு
மகக்கண்ண தனைக்களையே யென்றும் சிறத்தை யுறச்
சீராமநமவோ மென்னுஞ் செந்நாவை யெந்
நாளுந் தெரிந்து நீக்கேல்"

என்கிறபடியே ஸ்ரீராம ராம ராமா வென்று வாய்நிறைந்து குளிர டைய, உடலம்புளகிக்க, ஜபமாலிகையோடு அவனது திருநாமத் தைச் சொல்லிக்கொண்டு ஸ்ரீராமாநந்தத் தாண்டவஞ் செய்து வர்த்தித்துவருதலில் சாம்பசிவ நடேசமஹாப்பிரபுவைபோலே யிருக்கவேண்டும் பக்தியின் மிகுதியென்றும்,

க்ருஷ்ணயஜுஸ் சுவேதாஸ்வதர உபநிஷத் பெருக்காரன ஸ்வாமி விவேகாநந்தர் தமது உபன்னியாசத்தில்

நமது நண்பர்களே! சீதை, சாவித்திரி, தமயந்தி, என்பவர்கள் ஸ்திரீகளின் லக்ஷணங்கள் முழுதுமமையப் பெற்றவர்களென்றும், ருஷிகளுக்குள் மஹாருஷியென்னும் அபிதானமுற்ற உமா காந்தராகிய சங்கரர் அகோசரமான பக்தி பெருக்கமைந்த மஹாருஷி என்றும் சத்தியமா எண்ணுங்களென்றும்,

1901-வருஷம் ஜுன் மாதத்து இந்தியன் ரிவியு பத்திரிக்கையில் 283-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்ட அனிபிசண்டம்மாளின் உபன்னியாச மாவது

மனிதர்கள் தங்கள் மனங்களை இப்பிரபஞ்சத்தி னின்றும் தரும்படி செய்து இப்பிரபஞ்சத்திலுள்ள அசாசுவதமான விஷயங்களின் சந்தோஷங்களாலும், இன்பங்களாலும், துன்பங்களாலும், அலுத்தவர்களாருங்காலத்தே சிவபிரானின் பக்தியின் பெருக்கான தபோரூபமழகாய் தோன்றி அவ்வாறே பரமாத்மாவினிடம் ஒவ்வொருவரும் பக்தி பெருக முன்வரவேண்டு மென்றும்,

பாம்பன் குமரகுரு தாஸனேன்பான் வரைந்துள்ள தனது சைவ சமய சரபம் என்னும் சுவடியில் 221-பக்கத்தில் திருமூர்த்திகளில் ஒருவராய் மஹாருஷியாய் விளங்கும் சிவனை வணங்கத் தடை யாதுமிரா்து என்றும், இத்தகய அநந்தமான ஸ்ருதி ஸ்ம்ருதி இதிகாசாதி சகல பிராமணங்களாலும் பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனுக்கு பிரசித்தமான பக்தனே சிவபிரான் என்று கண்டித்துரைத்து விட்டன இவரது பிரபலமானதும், புகழக்கூடியது மானதத் பக்திக்கு பரமாத்மா பிரசன்னராகியும், குறைகளைத் தலைக்கட்டினதாலும் இவர் இப்பிரபஞ்சத்தில் சிறந்த பக்தனே என ஸ்பஷ்டமாய் விளக்கப்பட்டது.

சிவனது பக்தியும் பரமாத்மாவின் பிரசன்னமும்

பாத்மபுராணம் 37-வது அத்தியாயம்.

"அச்யுதாநந்த கோவிந்தம் மந்த்ர மானுஷ்டு
பம்சுபம் ஓங்நமஸ்ஸம் புடீருத்வாஜபங் விஷதரோஹர :
என்று திருப்பாற் கடைந்தகிநின்றும் பெருகிய விஷத்தைப் பார்த்து திடுக்கிட்டு பயந்து தன்னல் நிவர்த்திக்க சக்தியற்ற காலத்து (அச்சுதாநந்த கோவிந்த) வென்ற திருநாமத்தை பக்தி புரஸ்சரமாகத்யாநிக்க, அபயஸ்தமானதும் அநந்யார ஹமானது மான தத்பக்திக்கு பரமாத்மா பிரசன்னராகி

ருக்வேதம் 8-ம் அத்தியாயம் 23-ம் வர்க்கம்

"கேச்யாக்நிம் கேசி விஷம் கேசிபிபர்த்தி
ரோதவீகெசி விஷஸ்யபாத்ரேனயத் ருத்ரேண பிபத்ஸஹ"
என்று ருத்ரனுகிய அச்சிபிரானின் பீதிபடங்கத் தான் அவ் விஷத்தைப்பக்ஷித்து உம்மையும் ரக்ஷிக்கிறேன் பயப்படாதே யென்று கேசியான ஸ்ரீமந்நாராயணன் பீதியடைந்த பிள்ளைக்கு, எவ்வஸ்துவால் அப்பிள்ளைக்குப் பீதி ஏற்பட்டதோ அவ்வஸ்து வைக்கொண்டே அப்பிள்ளையின் பீதியைப் போக்குமாப் போலே சிவபிரானை பீதியடையச் செய்த அவ்விஷத்தை அச்சிவனின் கரத்தையே அவ்விஷத்திற்குப் பாத்திரமாகக்கொண்டு விஷத் தைத் தான் பானம் செய்து ரக்ஷித்தன ரென்றும்,

ஸ்ரீ விஷ்ணுபுராணம் 5-ம் அம்சம் 33 ம் அத்தியாயம்

"க்ருஷ்ணக்ருஷ்ண ஜகந்நாத ஜாநேவாம்
புருஷோத்தமம் பரேசம்பரமாத்மாத்மநாதிநித நம்ஹரிம்
தேவதிர்யங் மநுஷ்யேஷு சரீரக்ரஹணுத்மிகா
லீலேயம் ஸர்வபூதஸ்ய தவசேஷ்டோபலக்ஷண"
என்று சிவபிரான்தன்னை சரணமடைந்தவாணு ஸுரனை நலே மயிர் பூவாடாமல் ரக்ஷிக்கிறேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணித் தன்னை தொழுத கைகளைத் தன்முன்னே கள்ளிக்காட்டைச்

சித்தாற்போல் ஸ்ரீகண்ணபிரான் சிக்கக்கண்டு உயிரோடிருந்தால் உப்பு மாறியேனும் பிழைக்கலாமென்றெண்ணி நடுங்கி, குடும்பத்தோடு நெற்றிக்கண்ணை புதைத்துக்கொண்டு ஸர்வ சரண்யனை க்ருஷ்ணனை அஞ்சலியஸ்தனாய், ஓக்ருஷ்ண பரமாத்மா, புருஷோத்தமா, பரமேஸ்வரா, ஆதியந்த மில்லாதவனே, லோக ரக்ஷணார்த்தம் அவதரித்தவா, இவ்வமயம் தேவரீர் மநுஷ்ய சரீரத்தை அவலம்பித்ததை அடியேனறியேன் இச்சமயம் அடியேனை ரக்ஷித்தாண்டருள வேணுமென்று பிரார்தித்து சரணமடைந்த அப்பக்திக்கிறங்கி ரக்ஷித்தனரென்றும்,

பாத்மபுராணம் உத்ரபாகம் மஹாமஹாத்மீயம் 20-ம் அத்யாயம்.

"ப்ரக்ருதம்ச்ருணுராஜேந்த்ர கபாலபாணி
நாதத்லோகேக பாவீபிக்ஷார்த்திபிக்ஷமடதி சங்கர :"

என்று சிவன் பிரம்மஹத்தியினால் தொத்திய மண்டையோட்டுடன் லஜ்ஜையுற்றவனாய் க்ஷேத்திரங்கள் தோறும் பிக்ஷை யாசிக்கப்பட்டும், தமது பிரம்மஹத்தியை நிவர்திக்துக்கொள்ள யாதொரு உபாயமும் காணப்பெறாமல் வருந்தினவனாய் ராமேஸ்வரமே தமக்குப் பிரதானக்ஷேத்ரமெனக்கருதி

பாத்மோத்திரத்தில்.

"ஸ்ரீராம ராமராமேதிரமேராமேமநோரமே
ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராமநாமவராநநே"

தனது தாரகமந்தரமாயுமுள்ள, ஸ்ரீராமமஹா மந்த்ராதி ஜப மாலிகையுடன் ஸ்ரீராமாநந்தத் தாண்டவஞ்செய்து வர்த்தித்து வரும் தத்பக்தியை,

யஜுர் ராமோபநிஷத் 22-ம் ஸ்காந்தம்

"வேதவேத்யேபரேபும்ஸி ஜாதேதஸராதாத்மஜே"

என்று பரமாத்மாவும், வேத ப்ரதிபாத்ய பரமபுருஷன் சக்ரவர்த்தித் திருமகனாயவதரித்தவனுமான ஸ்ரீ புருஷோத்தமன்

ராமோபநிஷத்

"பக்த்யமந்த்ரேணநேநமாம்ஸிவப்ரஹ்ம
ஹத்தியாதிபாபேப்யோமோக்ஷயிஷ்யாமிமாசுஸ:" என்று.

சிவபிரானினது அகோசரமான பக்திக்குப் பிரசன்னராக சந்தோஷித்து இக்ஷேத்திரத்தில் ராம தாரக மந்திரங்களினாலே உண்மையான பக்தியுடன் என்னை தியானித்தீராகையால் யாம் க்ருதார்த்தரானோம். உமது பிரம்மஹத்தியாதி பாபங்களினின்றும் விடுவிக்கிறோம். க்ரம க்ரமாந்திரத்தில் என்னுடைய சாயுஜ்யமாகிய பரமபதத்தைக் கொடுக்கிறோம். ஓய் சிவனே பயப்படாதேயென்று அபயஸ்தம் கொடுத்து பிரம்மஹத்தியைப் போக்கியக்ஷேத்திரமே ராமேஸ்வரமென்றும்

பிரயாகைமஹாத்மியம்

"தத்ரநாராயண: ஸ்ரீமாந் மயாபிக்ஷாம் ப்ராயவித:
விஷ்ணுப்ரஸாதாத்ஸுச்ரோணிகபாலம்
தத்ஸஹஸ்ரதா ஸ்புடிதம்பஹுதாயாதம் ஸவப்நலப்தம்தநம்யதா"

என்று பர்வதராஜன்புத்ரியும், எனது பத்நியுமான பார்வதியே என்னுடைய பிரம்மஹத்தியைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று என்னால் ஸ்ரீமந் நாராயணனிடம் பிக்ஷையாசிக்கப்பட்டு அப்பரமாத்மாவின் ப்ரசாதத்தினால் யென் கையிலொட்டிய பிரம்ம கபாலமானது ஆயிரம் சுக்கலாய் தூளியாய் ஸ்வப்னத்தில் கண்ட தனமானது விழித்துப்பார்க்குமளவில் காணாதாப்போல் பறந்துபோயிற்றென்றீ உமாதேவிக்கு யதார்த்தத்தைவெளியிட்டதுமான க்ஷேத்திரமே ராமேஸ்வரமாய்நிற்க, அதைச் சார்ந்த பாம்பன்கிராமத்தில் வசிக்கும் **குமரகுரு தாஸனென்பானல் வரையப்பட்டுள்ள சைவசமய சரபமென்னும்** த்வேஷப் பண்டாரச்சுவடியில்,

தனது பூரண பாண்டித்வத்தைக் காட்டும்பொருட்டோ, நான் சங்கரனுக்கே அறத்தீர்ந்த பக்தனென பிரர்மெச்சும்

பொருட்டோ, அல்லது சைவ எல்லப்பநாவலன், துறைமங்கலம் சிவப்பிரகாசன், கச்சியப்ப சிவாச்சாரி முதலானவர்களைப்போல் தாமும் பண்டார சமயாச்சாரியாக வேணுமென்னும் ஆவலுள்ளவனும், தன்னைத்தானே புகழ்ந்தவனுமாய்த் தான் 35 நாள் சிவ நிஷ்டையிலிருந்ததாயும், அந்நிஷ்டை முடிந்தவுடன் பசி, தாகாதி, சோகங்களினால் இந்திரிய மாருதலினாலோ, பித்த அபிவிர்த்தியினால் திகைத்த நினைவினாலோ, தாமஸகுணமான சிவ நிஷ்டையினாலேற்பட்ட தாமஸத்தினாலோ, அல்லது அறிவின்மையினாலோ, அப் பண்டாரத்தூஷணச்சுவடியை வரைந்தனனென்றும், தாம் 108 உபநிஷத்துக்களையும், 18 ஸ்ம்ருதி, 18 புராணங்களையும் நன்குணர்ந்தவனென்றும், இவ்வாறு மேல் குறித்த யாவும் கறதலமலமாக நன் குணர்ந்தோனாகையால், அவைகளிலுள்ள அசாரங்களைத் தள்ளி சாரங்களை தாமாகக் கருதி உபநிஷத்துக்களில் 109 ஆவதாகவும் ஸ்ம்ருதிகளில் 19, ஆவதாகவும், புராணங்களில் 19, ஆவதாகவும், தனது சைவ சமய சரபமென்னும் தூஷணப் பண்டாரச்சுவடியை கல்பித்துத் தாமும், தம்மைச்சார்ந்தவர்களும், மற்றயாவரும் மதிக்கத் தக்கதென அபிப்பிராயமேற்படுவதாலும், தமதுச் சுவடியில் ஆதியந்தமென்னும் புத்தகரூபகோட்பாடில்லாமையாலும், வீண் நிந்தகமே புத்தகரூபமாயிருப்பதாலும், புரட்டுகளும், அனர்த்தங்களும், அஹங்காரங்களுமான க்ரூரவசனங்களால் நிந்தித்துத் திரியும் த்ரோஹியாயிருப்பதாலும், வேத வேதாந்தாதி சகல ப்ரமாணங்களாலும், தத்வேத யதார்த்தங்களாலும், அகிலபாஷ்யங்களுக்கிணங்கியும், சகலஜன சம்மதமாயும், இவனதுச் சுவடியின், புரட்டுகளை வெளிப்படையாய் கண்டிக்கவும், அனர்த்தங்களை நிராகரித்து யதார்த்தங்களை ஸ்தாபிக்கவும், அஹங்கார க்ரூரவசனங்களை வெட்டியடியோடொழிக்கவும்,

சகல வேத வேதாந்தப் பிரதிபாத்தியமான மிஸ்ரவைதிக வைதிக மதங்களில் சிறந்த ஸ்ரீமத் பரமவைதிப சுத்த ஸத்வ குண விசிஷ்டாத்வைத மதமே சத்யமென நிலைநாட்டவுமேயாம் முன்வந்தோம்.

1-வது குமரகுருதாஸ னென்போனது ஞானசூன்யத்தால் ஸ்ருதியாதி ப்ரமாணத்திருட்டும், புரட்டேளும்: அனர்த்தங்களுமாகிய குருட்டுயுக்திகளால் சிவனுக்கு உயர்வுகூறுதல்

யோகசிகோபநிஷத்.

" சதுரச்ரம்தரண்யாதௌ ப்ரஹ்மாத்தாதிதேவதா
அர்த்தசந்ராக்ருதிஜலம் விஷ்ணுஸ்தஸ்யாதிதேவதா
த்ரிகோணமண்டலம்வஹ்நீ ருத்ரஸ் தஸ்யாதிதேவதா
வாயோர்பிம்பந்தஷட்கோண மீஸ்வரோஸ்யாதிதேவதா
ஆகாசமண்டலம்வ்ருதம் தேவதாஸ்யஸதாசிவ :"

என்று ப்ருதிவிமண்டத்திற்கு அதிதேவதை பிரம்மாவென்றும், ஜலமண்டலத்திற்கு விஷ்ணுவென்றும், அக்நிமண்டலத்திற்கு ருத்ரனென்றும், வாயுமண்டலத்திற்கு ஈஸ்வரனென்றும், ஆகாசமண்டலத்திற்கு சதாசிவனென்றும், இவ்வாறு இச்சுருதிமண்டல அதிதேவதைகளை பிரித்துக்கூறுவதே இதன் யதார்த்தம்.

இச்சுருதிக்கு இவனது குருட்டு யுக்திகள்.

ப்ருதிவிமண்டல தேவதையான பிரம்மா பாதஸ்தானமென்றும், ஜலமண்டலதேவதையான விஷ்ணு முழங்கால்ஸ்தானமென்றும், அக்நிமண்டலதேவதையான ருத்ரன் வயிற்றுஸ்தானமென்றும், வாயுமண்டல தேவதையான ஈஸ்வரன் கண்டஸ்தானமென்றும், ஆகாசமண்டலதேவதையான சதாசிவன் சிரசுஸ்தானமென்றும், மண்டல அதிதேவதைகளை, அவயவஸ்தானங்களாக நிர்மித்து அதில் சிரசே பிரதானமாகையால் சதாசிவனே உயர்ந்தவனென்றும், இதற்கு த்ருஷ்டாந்தமாக இவன் கூறுவது.

ஸ்ருஷ்டிக்கிரமத்தைக்கூறும்

சுக்ல யஜுர்ஸுபாலோபநிஷத்

" ஆகாசாத்வாயுர் வாயோராக்நி ரக்நேராப அத்ப்ய : ப்ருதிவீ "

என்று பஞ்சபூதக் கிரமமான ஆகாயத்திநின்றும், வாயுவும், அதிநின்றும் அக்நியும், அதிநின்று ஜலமும், அதிநின்றும் ப்ருதிவியும், தோன்றினதே இச்சுருதியின் யதார்த்தம்

இவனது புரட்டுகள்

இச்சுருதி ஸ்ருஷ்டிக்கிரமத்தை ஆதியோடந்தமாய் விளக்கி நிற்க, இவன் தனது புரட்டுகளுக்குத் தக்கவாறு எவ்வளவு வேண்டுமோ அதை மாத்திரம் பிரித்தெடுத்துக் கொண்டு மேல் குறித்தவாறே ஆகாய மண்டல தேவதையான சதா சிவனிடத்தி லிருந்து மற்ற தேவதைகளான விஷ்ணு பிரம்ம, ருத்ராதிதேவர்கள் உண்டாயின ரென்றும் வரைந்தனன்.

இவனால் த்ருஷ்டாந்தமாய்கூறும் 2-வது அனர்த்தமும் புரட்டும்

சுக்ல யஜுர் ஸுபாலோப நிஷத்

" ப்ருதிவியப்ஸுப்ரலீயதா ஆபஸ்தேஜஸிப்ரலீயந்தே
தேஜோவாயுவிலீயதே வாயுராகாசேலீயத "

என்றுலயமாகுங் காலத்தில், ப்ருதிவி அப்சுநிடத்தும், அப்சு தேயசுநிடத்தும், தேஜசு வாயு நிடத்தும், வாயு ஆகாயநிடத்தும் லயமாவ தென்பதே இச்சுருதியின் யதார்த்தம

இதற்கு இவனது புரட்டுகள்.

மேலே குருட்டுயுக்திகளால் வரைந்துள்ள, மண்டல தேவதைகளை உதாரணமாக வைத்துக் கொண்டு, ப்ருதிவி மண்டல தேவதையான பிரம்மா அப்சில் லயப்பட்டு, அப்சுமண்டல தேவதையான விஷ்ணு தேஜஸில் லயப்பட்டு. தேஜஸ் மண்டல தேவதையான ருத்ரன் வாயுவில் லயப்பட்டு, வாயு

மண்டல தேவதையான ஈஸ்வரன் ஆகாயத்தில் லயப்பட்டு, அவ் வாசக மண்டலதேவதையான சதாசிவனே, பரம் பொருளென் றும், சாஸ்வத மானவனென்றும் ஸ்தாபித்து வரைந்தனன்.

ஆனல் ஈஸ, கேன, ப்ரஸ்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்ரீய, சாந்தோக்ய, ப்ரஹதாரண்ய, ஸ்வேதாஸ்வதர, ஐத ரேய, சுபால, காண்டவ, மாதியந்தின, ந்ாராயணாதி மஹோப நிஷதாதிகளிலேயுள்ள, ஸத்வித்யா, அந்தராதித்ய வித்யா, அக்ஷிவித்யா, ப்ரதர்தன வித்யா, சம்வர்க வித்யா, பூமவித்யா, வைஸ்வானரவித்யா, உபகோசலவித்யா, சாண்டில்ய வித்யா, முதலான 32 வித்தைகளிலும், இன்னும் இதற்கு புறம்பான ஸ்ருதி ஸ்ம்ருதியாதி சகல ப்ரமாணங்களிலும், ஸ்ரீமந்நாரா யணனே பரப்ரஹ்மமென்றும், அவனிடத் திருந்தே அநந் தங்கோடி பிரமாண்டங்களும் உண்டாயின வென்றும், அவ னலே அவை யாவும் நிலைபெற்று நிற்கின்றன வென்றும், பின் னர் கற்ப க்ஷயத்தில் அவையாவும் அப் பரமாத்மாவினலேயே ஹரிக்கப் படுகின்றன வென்றும், பன்முறை உத்கோஷிக்க இத்யாதி ப்ரமாணங்களிலும் இவனது மனதிற் சிசைந்தவாரு அர்த்தம் கொடாமையாலும், தமது பண்டாரச் சமய அபிமா னத்தினல் தனக்கொரு வரம்புகட்டி அதனல் தான் கியாதி யடைய வேணுமென்னு மபிலாஷையினாலும் யோகசிகோப நிஷத்தில் காட்டும் மண்டல அதிதேவதையை உதாரணமாகக் கொண்டு, ஸ்ருஷ்டி, லயங்களை விவரிக்கும் சுக்ல யஜுஸ்சுபா லோபநிஷத் ப்ரமாணங்களை முன் பின் தள்ளி தனது அபிப்பி ராயத்திற்குத் தக்கவாறு பிரித்து, குத்ருஷ்டியான அர்த்தங் களால் சிவனிடத்திநின்றும், பிரம்ம, விஷ்ணுவாதி தேவர்கள் உண்டாயினரென்றும், பின்னர் அவ்வாறே அச்சிவனிடத்தில் லயித்தனரென்றும், தனது சுவடியில் வரைந்தனன்.

1-வதில் கூறிய இவனது ப்ரமாணத் திருட்டுகளை வெளிப்படுத்துவதும், புரட்டுகளை நிராகரிப்பதும்.

சுக்ல யஜுர் சுபாலோபநிஷத்

"ஸஹோவாசா நஸந்நஸந்ந ஸதாஸதிதீ தஸ்மாத் தமஸ்ஸக்ஞ்யாயதே சதமஸோ பூதாதி : புதாதேராகா சம்ராகாசாத்வாயுர் வாயுரக்நி ரக்நேராப அப்ய : ப்ருதிவீத் தண்டம் ஸஹபவது"

என்று பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனின் சங்கல்ப மாத்திரத்தில் நின்றும் அவ்யக்தம் தோன்றி அதில் நின்றும் அஹஸகாரமும், அதில் நின்றும் தன் மாத்திரைகளும் அதில் நின்றும் இந்திரியங்களும், அதில் நின்றும் ஆகாசமும், அதில் நின்றும் வாயுவும், அதில் நின்றும் அக்நியும், அதில் நின்றும் அப்பும், அதில் நின்றும் ப்ருதிவியும் இவ்வாறு கிரமேண அநந்தங்கோடி அண்டங்களின் ஸ்ருஷ்டியைக் கூறுவதே இச்சுருதியின் யதார்த்தம்.

இதில் இக்குமரகுருதாச னென்பான் (ஆகாசாத்வாயுர் முதல் ப்ருதிவி) வரைக்கும் தமது புரளிக்குத் தக்கவாறும முன்னம் அதிதேவதைகளை உதாரணமாக ஆகாசதேவதை சிவனைக் கொண்டு அவனிடத்தில்நின்றும் மற்ற யாவரும் உண்டாயின ரென்றும் தான் நிர்ணயித்த புரளியின் கோர்வைக்கிணங்கவும் எடுத்துக் கொண்டு மிகுதிநின்ற யாவையும் மறைத்து அனர்த்தம் செய்து ஸ்தாபித்து வரைந்தனன். இதனால் இவனது புரளியே ஸ்ருதிவாக்யமாய் நிற்கு மென்னும் அஞ்ஞானத்தினலோ அல்லது தம்மைவிட மற்ற யாவரும் யாதுமறியாதவர்க வென்னும் உணர்வினலோ இவ்வனர்த்தங்களை வரைந்தனன்.

அவ்வாறு அவ்வனர்த்தங்களுக்கிணங்கி, ஆகாசமண்டல தேவனான சிவனையே, பரமாய் வைத்துயோசிக்குங்கால், ப்ருதி

வ்யாதி பஞ்சபூதங்களுக்கு மேல் ஸ்ருஷ்டிப்பதும் இல்லையாய் விடும், இல்லையாகட்டுமே யெனில், ஸ்ருதிஸ்ம்ருதியாதி வேதங்களும் அசத்தியமாய் விடுமாகையால் பரமாத்மாவின் அசாதாரண க்ருத்யங்களை மற்ற ஜீவாத்மாக்களில் பொருந்தப்பார்க்கில் எவ்வாறு பொருந்தும் பெருந்தாததினுல் வீண் புரளிகளை கல்பித்து அனர்த்தங்களை வரைந்து அதனுல் தமக்கொருமேன்மையையும், பட்டப்பெயரையும் இச்சித்துத்திரியாநின்றனன்.

2-வதில் கூறிய இவனது ப்ரமாணத்திருட்டுகளை வெளிப்படுத்துவதும், புரட்டுகளை நிராகரிப்பதும்

சுக்ல யஜுர் ஸுபாலோபநிஷத்.

"ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயத ஆபஸ்தேஜஸிப்ரலீயந்தே தேஜோவாயௌவிலீயதே வாயுராகாசேவிலீயத ஆகாசமிந்த்ரியேஷு யிந்த்ர்யாணிதன்மாத்ரேஷு தன்மாத்ராணிஹு தாதௌலீயந்தே ஹுதாதிமஹதிலீயதே மஹாஅவ்யக்தேலீயத அவ்யக்தே மக்ஷரேலீயதே அக்ஷரமஸிலீயதே தமஹ பரதேவயேகீபவதி"

என்று கற்பக்ஷய காலத்தில் ப்ருதிவிமண்டலம் அப்பில்லயப்பட்டு, அப்பு அக்நியிலும், அக்நிவாயுவிலும், வாயு ஆகாயத்திலும், ஆகாயம் இந்திர்யங்களிலும், இந்திர்யம் தன் மாத்திரைகளிலும், தன்மாத்திரை அஹங்காரத்திலும், அஹங்காரம் மஹத்திலும், மஹத் அவ்யக்தத்திலும், அவ்யக்தம் அக்ஷரத்திலும், அக்ஷரம்மஸீயிலும், அம்மஸீ பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனின் ஸ்தானமேயாகையாலும் அந்நாராயணனே அழிவற்றவனுயும், பரம்பொருளாயு மிருக்குமவனென்று இச்சுருதி நிருபித்து விட்டதே இதன் யதார்த்தம்.

இதில் குமாரகுருதாசனென்பான் (ப்ருதிவியப்ஸு ப்ரலீயதாமுதல் வாயுராகாசேலீயதே) வரைக்கும் எடுத்துக்கொண்டு, முன்னம் இவனுல் வரைந்துள்ள அதிதேவதையே

உதாரணமாக வைத்துக்கொண்டு ஆகாசதேவதையான சிவனிடத்தில் மற்றப்ருதிவ்யாதிகளும் மற்றதேவதைகளும், லயமாகின்றனரென்று உயர்வு கூறினன், ஸ்ருதியிலுள்ள மற்ற ஆகாசமுதல், அக்ஷரம் வரைக்குமுள்ள மண்டலங்களையும், எல்லா தேவதைகளையும், பண்டாரச்சமய அபிலாஷையுள்ள இக்குமரகுருதாசனென்பான் விழுங்கிவிடுவதா, யாதுகாரணமோ குருட்டுத்தனத்தினுல் விட்டனனே. அல்லது ஸ்ருதியை நன்குணராமல், பிரரிடம், "ப்ருதிவி முதல் ஆகாயம்" வரைக்குமுள்ள இச்சிரு பாகத்தை மாத்திரம் கற்றறிந்து இதற்குள் தனக்கு முந்தனவர்யாருமிலரென்று கண்டபடி பொய்களை பிதற்ற முன்வந்தனன். இத்தால் இவனது ப்ரமாணத்திருட்டுகளை வெளிப்படுத்தியும் அனர்த்தங்களை, யதார்த்தங்களால் கண்டிக்கின்றோம்.

ஸுக்லயஜுர் பைங்களோபநிஷத்.

"விராட்சைதந்யமாவிஸ்த் ஸததபிமாநீ ஸ்பஷ்ட வபுஸ் ஸர்வஸ்தூல பாலகோ விஷ்ணு: ப்ரதாநபுருஷோபவதி தஸ்மாத் ததாத்மந ஆகாஸாத் ஸமுத்பூதஹ ஆகாஸாத்வாயு: வாயோரக்நி: அக்நேராப: அத்யப்யஹ. ப்ருதிவி"

என்று விராட்புருஷனும், சகல ஜீவகோடிகளையும் ஸ்ருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், பின்னர் ஹரிக்கவும், ப்ரதான புருஷனுமான மஹாவிஷ்ணுவினிடத்திலிருந்து ஆகாசமண்டலமும் அதினின்றும் வாயுவாதி ப்ருதிவிவரைக்குமுள்ள பஞ்சபூதங்களும் க்ரமேண உண்டாயிற்றென்றும் ஸ்ருஷ்டிலயங்களுக்குப் பிரதான புருஷன் அவனே யென்றும் கூறுகிறது குமாரகுருதாசனென்பானது பண்டாரசமய அபிப்பிராயத்திற்கிணங்கியே விராட் புருஷனான ஸ்ரீமந்நாராயணனிடத்திலிருந்தே ஆகாயமண்டலமும், அம்மண்டல தேவதையான சதாசிவனும் மற்ற இதர

எல்லாமண்டலங்களும், அம்மண்டல தேவதைகளும் உண்டாயினரென்றும்,

மநுஸ்ம்ருதி.

“ தத்ஸ்வயம்பூர்பகவான் அவ்யக்தோ அவ்யயம் ஜயந்திதம்,
மஹாபூதாதி, மிருதௌஜாஹ ப்ராது ராவீத்தமோநுத:”

என்று ஸ்வரணமயமானதும், ஸ்வயம்பிரகாசமானதுமான திருமேனியையுடைய பகவான் ஸ்ரீமந்நாராயணனது சங்கல்பமாத்ரத்தில் அவ்யக்தாதி ப்ருதிவிவரைக்குமுள்ள அநந்தங்கோடி பிரம்மாண்டங்களும் உண்டாயின வென்றும் கூறுகிறது இதில் குமரகுருதாச னென்பானது குருட்டு யுக்திகளுக் கிணங்கி ஆகாச மண்டல தேவனை சதாசிவனேயே பரமாய் வைத்துப் பார்க்குமளவில் அவ்வாகாசத்திற்குமேல் அவ்யக்த்தம் வரைக்கும் 5-தத்துவ மிருக்கையால் அவைகளுக்கு அதி தேவதையும், அதிலும் சிரசுஸ்தான முள்ளோன் யாவனென்னும் புரட்டுகளை இனி இவனால் ஸ்தாபிக்க வேண்டியதே யாயினும் முன்னம் பிதற்றியுள்ள இவனது ஆகாச மண்டலமும், அம்மண்டல தேவனை சதாசிவனும், ப்ருதிவிமுதல் அக்ஷரம் வரையில் லயிக்கக்கூடிய நாராயணனிடத்தில் லயமாய் விட்டது இத்தால் குமரகுரு தாசனென்பான் வரைந்துள்ள 1-வது புரளியை ப்ரமாண யதார்த்தங்களால் கண்டித்தாயிற்று.

யதார்த்தமாய் வேதசாஸ்திரங்களால் மூறையிடப்படும் ஸ்ருஷ்டிக் கிரமம்.

ஸாமவேதம் சாந்தோக்ய உபநிஷத் 6-வது ப்ரபாடகம்
2-வது காண்டம் 3-வது வாக்யம்.

“ ததைக்ஷத பஹூஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோஸ்ருஜத ”

என்று பரமபத நிர்வாஹனை ஸ்ரீமந்நாராயணன் பரமபதத்தை விட்டு மூலப்ரக்ருதியை யடைந்து அநந்தங்கோடி ப்ரம்மாண்டங்களையும் சங்கல்ப்பித்தார், அச்சங்கல்ப மாத்திரத்திலே

அவ்வியக்த்தமுதல் ப்ருதிவி வரைக்குமுள்ள தத்துவங்களா லலங்கிருதமான அநந்தங்கோடிப்ரம்மாண்டங்களுமுண்டாயின

ருக்வேதம் நாராயணோபநிஷத்.

"ஹரி ஓம் ஹதபுருஷோஹவை நாராயணோ காமயத ப்ரஜாஸ்ருஜே யேதி நாராயணாத் ப்ராணோஜாயதே, மநஸ்ஸர்வேந்திரியாணிச கம் வாயுர்ஜ்யோதி ராபப்ரதிவீ விச்வஸ்யதாரிணீ நாராயணாத் ப்ப்ஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோஜாயதே, நாராயணாதிந்த்ரோஜாயதே, நாராயணாத் வாதசாதித்ய ருத்ராவஸவஸ்ஸர் வாணிசந்தாம்வி நாராயணாத் தேவாஸ்முத்பத்யந்தே, நாராயணாத்ப்ரவர்த்தந்தே, நாராயணாத் ப்ரலீயந்தே,"

வென்றும், என்று ஆதியந்தரகிதனான ஸ்ரீமந்நாராயணனது சங் கல்ப மாத்திரத்திலேயே சகல ஜீவாத்மகோடிகளும் ஸ்ருஷ்டி யாயி அவனிடத்திலிருந்தே மனஸ் ஸர்வேந்திரியங்களும், ஆகா சம் தொடக்க மானப்ருதிவி வரைக்குமுள்ள அநந்தங்கோடி ப்ரம்மாண்டங்களும் பிரம்ம, ருத்ர, இந்த்ர, த்வாதசாதித்ய, ஏகாதசருத்ர, அஷ்ட வசுக்களுமான தேவர்களும், சகலமும் உண்டாயினவென்று, அவனாலேயே அவையாவும் ஜீவித்திருக் கின்றன வென்றும், பின்னர் அவனாலேயே யாவும் ஹரிக்கப்படு கின்றன வென்றும் ஸ்ருதிகள் முறை யிடுகையாலும்,

மஹா நாராயணோப நிஷத்.

"ஹதபுருஷோஹவை நாராயணஸ் ஸோகாமயதப்ரஜாஸ்ஸ்ருஜேயேதி ஆஸ்ருஜன் நாராயணாத் ப்ரம்மாஜாயதே நாராயணாத் ருத்ரோஜாயதே, நாராயணாதிந்தரோஜாயதே, நாராயணாத்வாதஸாதித்யா ருத்ர: வஸவ: ருஷய: ப்ரஜாதயச்சபூர்வே தேவாஸ்ஸமுத்பத்யந்தே"

என்று பரமபுருஷனான ஸ்ரீமந்நாராயண னிடத்திருந்தே ப்ரம் மன், சிவன் இந்த்ரன், த்வாதசாதித்யர் ஏகாதசருத்ரர்கள் அஷ் டவசுக்கள் ஸப்தருஷிகள், நவப்ராஜாபதிகள் முதலானோர் உண்டாயின ரென்றும்.

யஜுர்வேதம்

" யதோர்ணநாபீஸ் ஸ்ருஜதேக்ருஹ்ணதேச ததாப்ருதிவ்யா ஓஷதயஸ்
ஸம் பவந்தி யோசௌச யஜீதோ விஷ்ணுஸ் ஸத்வ குண
ப்ராணீதோபவத் தஸ்யநாபேரஜோத்மா ஸ்வயம்பூ : ததாதஸ்
யப்ருவோந்த ராலாத் தமோருத்ர : "

என்று ஊர்நாபி என்கிற சிலந்திப் பூச்சியானது எவ்வளவு காலத்தில் நூலை ஸ்ருஷ்டித்து பின்பு கிரஹிக்கின்றதோ அவ்வாறே பரமாத்மா ப்ருதிவ்யாதி சகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டித்தன்றே கிரஹிக்கின்றுனென்றும் அன்றே என்கையாலே, அவனது நித்யத்தைச் சொன்னபடியாலும் சுத்த சத்வ குணனென்றும், அவன் தன்னை யொழிந்த சர்வராலும் தொழப்படுகிறுனென்றும் அவனுடைய நாபிக் கமலத்திலிருந்து ராஜஸகுணனை ப்ரம்மா பிறந்தானென்றும், அப்பிரம்மாவின் நெற்றிப் பிரதேசத்திலிருந்து தாமசகுணனை சிவன் பிறந்தானென்றும், கூறுகையாலும்,

அதர்வண மூண்டகோபநிஷத்

" யதோர்ண நாபிஸ்ருஜதே க்ருஹ்ணதேச ததாப்ருதிவ்யா
வோஷதயஸ்ஸம்பவந்தி யதாஸத: புருஷாத்கேஸ லோமாநி
ததாக்ஷராத் ஸம்பவதீஹவிஸ்வம் "

என்று சிலந்திப்பூச்சியானது நூலை ஸ்ருஷ்டிக்கவும், பின்பு ஹரிக்கவுமான ஜாலத்தை செய்யவல்லதோ, அவ்வாறே விராட் புருஷனை நாராயணன் அனந்தங்கோடி பிரம்மாண்டமும், பிரம்ம, சிவ, இந்த்ராதி சகல சேதனு சேதனங்களனைத்தையும் ஸ்ருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், பின்னர் ஹரிப்பதுமான அசாதாரண க்ருத்தியங்களை செய்யவல்லோனென்றும்,

யஜுர்வேதம்.

'' ஸப்ராஜாபதிரேக: புஷ்கரபர்னேஸமபவத் லலாடாத்க்ரோதஜோ
ருத்ர: தரயக்ஷ: கண்டபரசு: வாஜ்ஜநத் ஸம்வத்ஸரோஜாயத இந்
த்ரோவருண: ஸோமேோருத்ர: பர்ஜந்யோயம: ப்ராம்ஹணபுத்ரா
யஜ்யேஷ்டாய ச்ரேட்டாய புத்ராயருத்ராய''

என்று ப்ரம்மா ஒருவனே பரமாத்மாவின் நாபிக்கமலத்திலிருந்து உண்டாயினனென்றும், மற்றருத்ர, இந்த்ராதிதேவர்களனைத்தும் ப்ரம்மனால் படைக்கப்பட்டவர்களே யென்றும், ஆயினும் சிவனே ப்ரம்மாவின் ஸ்ரேஷ்டப்புத்திரனென்று இச்சுருதி கூறுகையாலும்,

யஜுர்வேதத்தில் 24 மந்திரங்கொண்ட தகாவித்தை.

" தஸ்மாத் விராடஜாயதா விராஜோஹதிபுருஷ:
ஸஜாதோஹத்யரிச்சதா பத்ஸ்யாபூமிமதோபுர:"

என்று விராட்புருஷனான அநிருத்த நாராயணனின் நாபிக்கமலத்திலிருந்து ஸ்வயம் பிரகாசமானதாயும், ஸ்வர்ணமயமானதாயுமுள்ள ப்ரம்மாண்ட முண்டாகி அதில் சதுர்முகப் பிரம்மா உண்டாயினர் ப்ரம்மாண்டத்தை சரீரமாயுடைய அநிருத்த நாராயணனுடைய நாபிக்கமலத்திலுண்டான சதுர்முகப்பிரம்மா பெரிய தேஹத்தையுடையவராய் ஸ்ருஷ்டியாதிக்ரமங்களில் ப்ரவேசித்தாரென்றும்,

ஸாமவேதம் மஹோபநிஷத்

" ருத்ரச்சஸர்வாவா பூதஜாதய: நாசமேவா
நுதாவந்திலி ஸலாநீவபாடபம்."

என்று வேதப்ரதிபாத்யனான நாராயணன், ப்ரம்ம, ருத்ர, இந்த்ராதிதேவர்களையும், பூதங்களையும் ஸ்ருஷ்டித்தனரென்றும்,

மநுஸ்ம்ருதி.

" ஸோபித்யாயசரீராத் ஸ்வத்ஸ்ஸ்ரு ஸூர்விவிதாப்ரஜ:

என்று பகவத்சப்த ப்ரதிபாத்யனான ஸ்ரீமந்நாராயணன் தன் திருமேனியிலிருந்து வேருபட்ட ஆத்மாக்களின் தத்தத் கர்மானுகுண சரீரங்களை சங்கல்ப்பித்தவராய் ஜலத்தைத் தோற்றுவித்து அதில் அண்டத்தை நிர்மித்து தன் நாபிக்கமலத்தில் நின்றும் சதுர்முகனை ஸ்ருஷ்டித்து அப்பிரம்மனால் அவ்வாத்மாக்களை ஸ்ருஷ்டிக்க நியமித்தனரென்றும், மநுஸ்

ம்ருதியிலும் ஸ்பஷ்டமாய் விளக்கப்பட்டிருக்கையாலும், இத்யாதி ஸ்ருதி ஸ்ம்ருதியாதி சகலப்ரமாணங்களாலும் ஸ்ரீமந் நாராயணனிடத்திலிருந்தே பிரம்ம, சிவாதிதேவர்களும், அனந்தமான பிரம்மாண்டங்களும் உண்டாயின வென்று நிர்ணயித்து விட்டன.

பஞ்சப்ரளய கால சம்ஹாரக்ரமம்.

ஸாமவேதம் மஹோபநிஷத்.

“ஏகோஹவைநாராயண ஆஸீத் நப்ரஹ்மா
நஈசாந: நஹிமேப்ருதிவ்யாந நக்ஷத்ராணி”

என்று பஞ்சபூதப் பரப்பாலலங்க்ருதமான அகிலாண்டங்களும், ஒவ்வோரண்டங்களிலுமுள்ள பிரம்ம, சிவன் முதலான தேவர்களும் பஞ்சப்ரளய காலத்தில் தன் சங்கல்பாதீனமாக சம்ஹரிக்கப்பட்டு பின்பு நாராயணனொருவனே யிருக்கின்றானென்றும்,

ஆங்கீரஸ உபநிஷத்.

“ஏகோஹவைநாராயணஆஸீத்நப்ரஹ்மா நசங்கர: ஸமுநிர் பூத்வாஸமசிந்தயத் தத ஏதேத்யாநாஜ்ஜாயந்தே விஸ்வோஹிரண்ய கர்ப்போக்நி, யம, வருண, ருத்ர, இந்த்ர:

என்று பிரம்ம, ருத்ர, ஈசான்ய ப்ருதிவ்யாதிப்பதார்த்தங்களனைத்தும், கற்பக்ஷயத்திலழிந்து, நாராயணனொருவனே முடிவிலிருக்கின்றானென்றும், பின்பு அழிந்தயாவும் அந்நாராயணனிடத்திலிருந்தே உண்டாகின்றனவென்று மிச்சுருதிகூறுகையாலும்,

கடி உபநிஷத்.

“யஸ்யப்ரஹ்மச க்ஷத்ரம்சோபேபவத ஓதநம்”

என்று நாராயணனுக்கு ப்ரளயகாலத்தில், ப்ரம்மனும், குரோதசாானருத்ரனும் இரண்டுகவள அன்னஸ்தான மாகிறார்களென்றும்,

கடி உபநிஷத்.

“ம்ருதயுர்ஸ்யோபஸேசநம்”

என்று பரமாத்மாவான நாராயணனுக்கு, கற்பக்ஷயத்தில் அநந்தங்கோடி ப்ரம்மாண்டங்களும், அதிலடங்கிய தேவ, மநுஷ்ய, திரியக்ஸ்தாவராதி சகல பதார்த்தங்களும் அன்னஸ்தானமும் பிரம்ம, ருத்ரர், ஊர்க்காய்ஸ்தானமுமாகின்றனவென்றும்.

நாராயணோபநிஷத்

"நாராயணாத் ப்ரலீயந்தே"

என்கையாலே நாராயண னிடத்திலேயே, சகல அண்டங்களும், ப்ரம்மாதி பிபீலிகாநந்தமுள்ள யாவும் லயிக்கின்றனவென்றும்.

ஸ்ரீ விஷ்ணுபுராணம் 1-ம் அம்சம் 2-ம் அத்தியாயத்தில் ஸ்ரீமந்நாராயணன் காலாக்கினி ருத்ரனைப்போலே பிரளயகாலத்தில் மேகமண்டலத்தை பெருக்காற்றடித்ததுபோலச் சம்ஹாரம்செய்கிறானென்றும்.

சிவ ரகசியத்தில் 3-ம் அம்சம் 1-வது காண்டம் 12-வது சர்க்கத்தில் ஸ்ரீமந்நாராயணன் ப்ரளயகாலத்தில் ஜலத்தைப் பெருகும்படிச் செய்து காலாக்கினி ருத்ரனைப்போலே சர்வத்தையும் சம்ஹாரம் செய்கிறானென்றும்.

இத்யாதி வேத வேதாந்தங்களிலுள்ள ஸ்ருதிஸ்ம்ருதி, இதிஹாச புராணங்களாலும், சகலாண்டங்களும், பிரம்ம ருத்ராதி தேவர்களும், ஸ்ரீமந் நாராயணனிடத்திலிருந்தே உண்டாயின வென்றும், பின்பு அவனாலேயே ஹரிக்கப்படுகின்றனவென்றும், நிச்சயிக்கப்பட்டிருக்க, **குமரகுருதாச னென்பான்** தனக்கியன்ற வாறு, 5-மண்டலங்கள் தானுண்டென்றும், அதிலும் ஆகாச மண்டலமே பிரதான மென்றும், அதற்கு தேவன் சிவனென்றும், அச்சிவனாலேயே யாவு முண்டாகவும், அழியவும் நேரிடுகிறதென்றும், கல்டனைச்சடைதகளைப் புத்தக ரூபமாக யதார்த்த மறிந்தோரைத்திடுக்கிடவும், மற்ற யாவரை

யும் ப்ரம்மிக்கவுமான ஊழல்களை வரைந்துள்ளோனுகையால் சகல சாஸ்த்ர யதார்த்தங் களாலும் இவனது சுவடியில் வரைந்துள்ள ஸ்ருதிவாக்யத் திருட்டுத்தனமான மோச வழிகளை விளக்கிக் காட்டியும், வேதங்களின் தாத்பர்யங்களுக்கிணங்கவும் சகல சாஸ்த்ர சம்மதமாயும், ஸ்ருஷ்டி ஸ்திதி, சம்ஹாரங்களுக்குக் காரண பூதனுயும், நிகிலாண்ட, நிகில பூதஜாலங்களை யெல்லாம் தன்னுள்கிடக்கவிட்டுள்ளோனுதலால் ஹிரண்ய கர்ப்பனுயும், விளங்கா நின்றவன் ஸ்ரீமந் நாராயணனே யென்று மற்ற ஆபாசங்களனைத்தையும் கண்டித்து நிச்சயிக்கப்பட்டது.

3-வது சிவ சம்பு சப்தங்களின் யதார்த்தம்.

வேத யதார்த்த மறிய வேண்டுமாயின் மீமாம்சா சாஸ்திரங்களின்றி அறிய முடியாததால்-சுருதிகளில் வரும் சிவ சம்பு சப்தங்களுக்கு, சிவனைத் தான் பொருந்து மென அபிமானத்தினுல் அவைதிகபரமாய் அனர்த்தம் செய்து கௌரவமடைவதே ஆண்மைத்தன மெனக் கருதிச் சுவடிகளில் வரைந்துத்திரியுமவர்களுக்கும், அவர்களி லொருவனு மான **குமரகுருதாச** னேன்பானுக்கு ஓர்யதார்த்த எச்சரிக்கை.

அதர்வசிகோபநிஷத்.

" ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேஸ்வரச் சம்புராகாச மத்யே "

என்று தியானிக்கப் படும் தியேயனும் ஸர்வேஸ்வரனும் சம்புவும், சர்வாந்தர்யாமியும் ஆகாச மத்தியில் வியாபித்துள்ளோனுமானவன் ஸ்ரீமந் நாராயணன் என்பதே இச்சுருதியின்கருத்து.

ஷை ஸ்ருதிக்கு அவனது அனர்த்தம்.

சம்புஎன்னும் சப்தமிருப்பதால் அச்சப்த வாசியனும் மேல்கூறிய குணங்களோடு பொருந்தின வனும் சிவனே யென்று தமது சுவடியில் வரைந்தனன்.

எமது யதார்த்தம்.

மஹாநாராயணோபநிஷத்.

“ ஸஹஸ்ரவீரிஷம் தேவம் விஸ்வாக்ஷம் விஸ்வ
சம்புவும் விஸ்வம்நாராயணம தேவம் அக்ஷரம்
பரமப்ரபும் விஸ்வதஹ பரமாம் நித்யம் விஸ்வம் நாராயணோ ஹரி:”

என்று இச்சுருதியில் சம்பு சப்தத்தைச் சொல்லி யிருப்பதால் ஸ்ரீமந்நாராயணனது குணங்களையும், லக்ஷணங்களையும், குறிக்கும் சமயங்களில் இச்சப்தங்களின் அர்த்தங்களைப் பொருந்து மிடங்களி லெல்லாம் பொருந்துமாறு அலங்கார ரூபமாய் சுருதிகள் கூறுகையாலும் அர்த்த மறியாமல் அவைதிகமாய் அனர்த்தம் செய்வதத்தனைப்போக்கி யதார்த்தமாகாதென்றுணர்வீராக.

ஸ்ருதிகளிலுள்ள சிவசப்தத்தை தனியாகத் தமது புறளிக்குத் தக்கவாறு ஒரு சிறு பாகத்தை யெடுத்துக் கொண்டு சிவபதத்துடன் சேர்த்து அவைதிகமான அர்த்தங்களால் மேன்மைக் கூறி அதனால் சிவனுக்கு உயர்வுகளை கல்பித்து சிரு பண்டாரங்களுக்குத் தான் பெரிய பண்டாரமாகவேணுமென்னு மாவலுள்ளவனைப் தமது சுவடியில் கல்பனைகளை வரைந்தனன்.

மைத்திராயண்ணியுபநிஷத், 7-வது பிரபாடகம்.

“ அவித்யா மஸ்ரஜத்யா சிவ மசிவ மித்யூத்தி ”

அவித்தையாகிய, கருமகாண்டத்தில், சொல்லும், மோசடியான சாஸ்திரத்தை அஞ்ஞானிகள் நம்பி மங்களத்தை அமங்களமென்றும், அமங்களத்தை, மங்களமென்றும் நம்பி நரகத்துக்கு ஆளாகிறார்களென்று இச்சுருதி கூறுகிறது. ஆதலால், இச்சுருதி “சிவ” யென்கிற சப்தத்திற்கு மங்களமென்றும், “மசிவ,” அமங்களமென்றும், அர்த்தம் கூறுகிற வடமொழி பதங்களுக்கோர் பட்டம்கட்டி, ருத்ரபரமாக, அர்த்தம் செய்யும் பாஷண்ட வேஷதாரிகளை இச்சுருதி கண்டித்துவிட்டது. இதன் விவ

ரத்தை சர்வதெரிசன சங்கிரகத்தில், சார்வாக மதத்தைப்பற்றி சொல்லியிருக்கிற பிரகஸ்பதி வாக்கியத்தில் காணலாம்.

மஹா நாராயணேபநிஷத்

"விஸ்வ மேவேதம்புருஷஸ்தத் விஸ்வமுபஜீவதிபதிம் விஸ்வஸ் யாத்மேஸ்வரம் ஸாஸ்வதம் சிவ அச்சுதம் நாராயணமஹாங்யேயம் விஸ்வாத்மானம்பராயணம் நாராயணபரப்ரஹ்மா தத்வம்நாராயணபர:"

என்று இச்சுருதியில் பலவிடங்களிலும், மேஸ்வரம், சிவ முதலான சப்தங்களால் ஸ்ரீமந் நாராயணனுடைய குண முதலான பரமாத்ம லக்ஷணங்களை அலங்கார ரூபமாய் உத்கோஷியா நிற்க" அதாவது மேஸ்வரம் பரமேஸ்வரனுய், ஸாஸ்வதம்—அழிவற்றவனுய், சிவம்—மங்களமானவனுமாய், அச்சுதம்—ஆஸ்ரிதரை நழுவ விடாதவனுய், நாராயண மஹாங்யேயம் நாராயண சப்த ப்ரதிபாத்யனுயும் விளங்கிய பரப்ரஹ்மம் நாரா யண னென்று பொருள்தரும் ஸ்ருதிகளில் சம்பு முதலான சப்தங்களுக்கோர் பட்டங்கட்டி உயர்வுகூறி பிறரை பிரமிக்கச் செய்வதால் யாது மறியாதவனையொக்கு மிவனு மிவனது சுவடிகளு மென்று கண்டிதமா யுரைக்கின்றனம்.

சிவனுக்கு வேதத்தில் யாதொரு ப்ரமாணமும் கிடையாது ஆனுல் சில பாகங்களில் சிவ, சம்புவாதி சப்தங்க ளிருக்கையால் அவைகளுக்குத் தனித்தனியாகவும். ஸ்ருதியின் கருத்திற் கிசையாமலும், அபிமானத்தினுல் அவைதிகபரமாயும் அர்த்தம் பண்ணக்கூடாதென்றும். அவைகள் நாராயணனின் மங்களாதி திருநாமங்களை கூறுகின்றதாலும் நாராயண பரமாகவே அர்த்தம் பண்ண வேண்டும். இரண்டு மூன்று அக்ஷரமுள்ள அச்சப்தங் களுக்குத் தங்கள் முயற்சியால் எவ்வளவும் சாக்ஷாத்கரித்து பட்டங்கட்டி பரத்வ நிர்ணயம் செய்தாலும் வேத யதார்த்தத்திற்கு மாறுபட்டதாகவும், சகல ஜன சம்மத

ரஹிதமாயும். எள்ளளவேனும் பொருந்தாவாம். இக்கருத்தையே ஸ்ரீமத் ராமாநுஜாச்சாரியரும், சங்கராச் சாரியரும், மத்வாச்சாரியரும், வித்தியாரண்யரும், தங்கள் பாஷ்யங்களில் ஸ்பஷ்டமாய் விளக்கினர்.

அதாவது தங்கள் பாஷ்யங்களில், "முன்னனு வாகத்தில் தஹர வித்தையில் தியானிக்கப் படும் தேவதை நாராயணனென்றும் சொல்லப்பட்டது இந்த அனுவாகத்தில் எல்லா வித்தைகளிலும் சிவ, சம்பு, பரப்சஹ்ம, பரஞ்சோதி பரதத்வ பரமாத்மா முதலிய சப்தங்களால் தியானிக்கப் படும் தேவதை சொல்லப்பட் டிருப்பதால் அச்சப்தங் களுக்கும் நாராயணனே பொருளென்று ஸ்தாபித்தனர்.

ஆகமங்களில் கூறும் சிவசப்தங்களே சிவனை ப்ரதிபாதிக்கப்பட்டவை

அதர்வணம் நாரத பரிவ்ராஜகோபநிஷத்.

"ஸர்வாகம மயச் சிவ :"

என்று ஆகம சாஸ்திரங்களில் சொல்லப் பட்டவை சிவனேயென்றும், வேத ப்ரதிபாத்தியன் சிவனல்ல வென்றும.

அந்நபூர்ணோபநிஷத்.

"சிவச்சைவாகமஸ்தாநாம்"

என்று சைவ சமயமே ஆகமசமய மென்று நிச்சயிக்கப்பட்டது இத்யாதி ப்ரமாணங்களை உணராதவனாய் வேத ப்ரமாணங்களை தன்மனதிற் கிசைந்தவாறு முன் பின் தள்ளிக் கல்பனைக் கதைகளை புத்தக ரூபமாக வரைந்துத் திரியும் குமரகுருதாச னென் போனது ஆபாசப் பிதற்றல்களனைத்தும் பங்கப்படுவதேயாம்.

4-வது ஈஸ்வர, மஹேஸ்வரசப்தங்களின் யதார்த்தம்

ஸ்ருதிகளில் பலவிடங்களில் ஈஸ்வர, மஹேஸ்வர சப் தங்களிருப்பதால் அச்சப்தங்களுக்கு வியாக்யானம் செய்யுங்

கால் அச்சுருதிகளின் கருத்திற்கிசைந்தே செய்ய வேண்டும் சிவனது அகோசரமான தபோ மகிமையை யனுசரித்துக்கூறும் சுருதிகள் "செய்த தவங்கள் செய்து சிவனுயினனே யெய்த மகேஸ்வர னென்றேத்தல்" என்கிறபடியே சிவனது தபோமகிமையாலும் பக்தியின் பெருக்காலும், சிவனென்ற நாமமும், மஹேஸ்வராதி அகோசரமான பூஜைகளால் மஹேஸ்வர னென்ற நாமமும் பெற்றன னென்பதாக சுருதி ப்ரஹதாரண்யோபநிஷத்தும், மஹா பாகவதமும் கூறுகையா லதையனுசரித்துப் பேசும் சுருதிகளிலுள்ள ஈஸ்வர, மஹேஸ்வர சப்தங்களுக்கு ருத்ர, பரமாகவே அர்த்தம் செய்யவேண்டும் ஜகத்காரணதி வியாபாரங்களை விவரிக்கும் ஸ்வேதாஸ்வதரம் முதலிய ஸ்ருதிகளினுல் கூறும் ஈஸ்வர, மஹேஸ்வர சப்தங்களை கதிஸாமான்யாத் யென்கிற சூத்திரத்தாலே ஜகத்காரணன் ஸ்ரீமந்நாராயணனே யென்று சூத்திரக்காரர் நிச்சயிக்கையாலும், சரீர மீமாம்ஸா பிரதமாத் தியாயத்திலே ஷை கருத்தையே ஊர்ஜிதப் படுத்தினதாலும், சுருதியின் கருத்திற்கிசைந்தே அர்த்தம் செய்யவேண்டியதாலும், நாராயணபரமாகவே அர்த்தம் செய்ய வேண்டும்.

உதாரணமாக

கிருஷ்ண யஜுர் ஸ்வேதாஸ்வதர உபநிஷத்.

"ஈஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம்நதஸ்
மஸ்ஸாப்யதி கஸ்ஸத்துர்சயதே"

என்று ஜகத்காரணனை மஹேஸ்வரனுக்கு ஒத்தார் மிக்காரில்லை யென்றும்

"யத்வேதாதௌஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தேச ப்ரதிஸ்டித:
தஸ்யபிரக்ருதி லீனஸ்ய: பரஸ்ய மஹேஸ்வர:

என்று வேதங்களின் ஆதியிலும், அந்தத்திலும் சொல்லப் படுகின்ற பிரணவமெதுவோ அதன் பிரப்பிடமாகிய அகாரத்தி

லீனமாயிருப்பவனெவனோ அவனே பரனும் மஹேஸ்வரனுமான பரப்ரஹ்மமென்றும் கூறுகையாலே ப்ரணவப்ரதிபாத்தியனும் அகாரத்திலீனமாயிருப்பவனுமான ஸ்ரீமந்நாராயணனே மஹேஸ்வர சப்த பிரதிபாத்தியனெனத்தட்டில்லே.

மஹா நாராயணோபநிஷத்

"அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாம்"

என்று மேலேவிளக்கப்பட்ட சுருதியில் கூறிய அகாரம் நாராயணனின் பிரதான திருநாமமென்றும்,

நாராயணோபநிஷத்

"ஓமிதி சர்வபூதஸ்தமேகம் நாராயணம் காரணரூப அகாரம்"

என்று சர்வவேத ப்ரதிபாத்தியமாயுள்ள ப்ரணவம் சர்வபூதங்களுக்கும் த்யாதாவாயும், அப்பிரணவத்தின் பிறப்பிடமாகிய அகாரம் நாராயணனின் பிரதான திருநாமமாயும் விளங்குகின்றது என்றும்,

தியாநபிந்தூபநிஷத்

"அகாரேதுலயம் ப்ராப்தே ப்ரதமே ப்ரணவாம்சகே
அந்தரிக்ஷம் யஜுர்வாயுர்புவோ விஷ்ணுர்ஜநார்த்தந:"

என்று ப்ரணவத்தின் பிறப்பிடமாகிய அகாரத்திலீனமாயிருப்பவன் யாவனோ அவனே ஜநார்த்தனனென்றும் த்ரயீயென்கிற வேதங்கள் உத்கோஷிக்கையாலும்,

முண்டகோபநிஷத்

"ப்ரணவோ தநு:"

என்று பிரணவமானது நாராயணனது திருக்கரத்திலுள்ள ஸ்ரீ பாஞ்சசன்னியமே யென்றும்,

"ஓங்காரோ பகவான்விஷ்ணு: த்ரயீனவசநாம்பதி:
தஸ்யோ சாரமாத்ரேண பரப்ரஹ்மாதி கச்சதி:"

என்று ஓங்காரத்திற்கு ப்ரதிபாத்தியன் விஷ்ணு ஒருவனேயென்றும் அவன் த்ரயீயென்கிற வேதங்களுக்கு நாயகனென்றும் ஜீவர்கள் ஓங்காரத்தை உச்சரித்தமாத்திரத்திலவனேயே

யடைகிறார்களென்றும், அவ்வோங்காரத்தின் பிரப்பிடமாகிய அகாரம் அவனுடைய பிரதான திருநாமமென்றும்,

"அகாரோவிஷ்ணு : பிரதமநாமோச்சயதே"

என்று அகாரமானது நாராயணனின் பிரதான திருநாமமென்றும்

நாராயணோபநிஷத்

"ஓம் பிரதிகாநந்தம் ப்ரம்மபுருஷம் ப்ரணவஸ்வரூபம்" என்றும்,

ஆத்மபோதோபநிஷத்

"ஓம் பிரதிகானந்தம் ப்ரஹ்மபுருஷம் ப்ரணவஸ்வரூபம்
அகார, உகார, மகார, இதிதானே கதாசம்பவத் ததேததோமிதி
யமுத்வாமுச்சயதே யோகீஜென்ம சமசாரபந்தனுத்
ஓம் நமோநாராயணாய இதிமந்த்ரோபச :"

என்று சர்வாந்தர்யாமியாயும், ப்ரஹ்ம புருஷனையும், ப்ரணவ ஸ்வரூபனையும், யோகிகளின் சம்சாரபந்தத்தைத் திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தாலே போக்குமவனையும் விளங்கிய ஸ்ரீமந்நாராயணனே இச்சுருதிதியானிக்கையாலும்,

கீதோபநிஷத்து

"அக்ஷராணா அகாரோக்ஷரம்"

என்று அக்ஷரங்களில் அகாரம் நானாகிறேனென்று கண்ணன் கீதையில் கூறுகையாலும்.

இத்யாதி சகல பிரமாணங்களிலும் சிவ, சம்பு, மஹேஸ்வராதி நாமங்களனைத்தும் நாராயணனது கல்யாண குணங்களை காண்பிக்கும் பொருட்டே சுருதிகள் அச்சப்தங்களால் வர்ணித்துரைக்கின்றமையாலும், வேத வேதாந்தாதிகளிலுள்ள ஸர்வாக்ஷரங்களும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களாக விருக்கு மன்றிக்கே இதரமானவர்களைச் சொன்னதேயில்லை சொல்லிய போதிலும் விஸ்வரூபனான நாராயணனுடைய சரீரங்களாக விருக்குந்தேவதைகளைச் சொன்ன வாசகங்களுக்கெல்லாம் வாச்சியபூதன் ஸ்ரீயப்பதியேயாவன், கபாலியான கிரீ

சனுக்குச் சிவ, சம்பு, ருத்ர, மஹேஸ்வரனென்றும் சொல்லு வது என்னெனில் அவைகள் ஒவ்வொரு அவசரத்தில் வந் தேறிகளாகவிருக்கும், அப்பேர்களுக்கும் பொருள்கள் வெவ் வேறு பட்டிருக்கும் "சீதானுர்த்திருத்தாணீர்க்கும், சிவை யென வந்தது வதுவென்சிரமிருந்த மங்களத்தாற் சீவன்மாறிச் சிவனென நற்பெயரடைந்தேன். திருமாலினடியார் தம்மிற் சிரேஷ்டனுனேன், என்று சிற்சிலக் காரணங்களாலடைந்த நாம மேயாம். ஆதலால் எல்லா சப்தங்களுக்கும் வாச்சிய பூதனும் பேரு மோராயிரம் பிறபலவுடைய வெம்பெருமானென்றும், சொல்லப்படுகிருனிறே ஸ்ரீமந்நாராயணன் இத்தால் குமரகுரு தாசனென்பான் தமது குருட்டுச்சுவடியில் வரைந்த ஆபாசப் பிதற்றல்களைக் கண்டிக்கப்பட்டது.

குமரகுருதாசனென்போனது 5 வது புரட்டை நிராகரித்தல்

ஸ்ரீமந்நாராயணனது அகடிதகடனுசாமர்த்தியமமயப்பெற்ற சர்வஜாலத்தையுமவலிம்பித்த மூலப்ரக்ருதி யென்னும் மஹா மாய்கையை, சங்கரன் பத்னியும், பர்வதராஜன் புத்ரியுமான பார்வதியே அப்ரக்ருதி மஹாமாய்கையென்று சிற்சில வாகமச் செய்யுள்களால் ஸ்தாபித்துத் தமது சுவடியில் வரைந்தனன்.

ஆனுல் மஹா மாய்கையென்றும், பராசத்தியென்றும், இச்சாசத்தி யென்றும் கிரியாசத்தி யென்றும், தேவி, மஹா லக்ஷிமியென்றும், வேதங்களால், முறையிடப்பட்ட திருநாமத் தை அவலிம்பித்தவளாயும், ஆதியந்த ரஹிதமாயும், தாய், தந்தை, யென்கிற சம்சார பந்தமற்றவளுமாயும், யெவ்வுயிரும் பிறக்கும் பொன்வயிற்றன்னையாயுமீறே மூலப்ரக்ருதியும், மஹா மாய்கையுமாகிய பராசத்தியிருப்பது.

தைத்ராவருண சாகை, பஹ்வ்ருசோபநிஷத்து, ஸ்வேதா ஸ்வதாம், திருபுரந்தாபிநி, தேவியோபநிஷத்து, தேவீபாகவதம்

முதலிய ஸ்ருதிகளால் கூறப்படும் தேவீ, மஹாலக்ஷ்மி யென்கிற திருநாமத்தை அவலம்பித்த பராசத்தியானவள் இப்பர்வத ராஜன் புத்ரியாகிய பார்வதி யென சுருதிகள் சம்மதிக்கவில்லை. ஆனால் குமாரகுரு தாசனென்போன் தமது புரளியே பிரதான மெனக்கருதி சுருதி வாக்யங்களனைத்தையு மறியாமையினாலோ, அல்லது அறிந்துமபிமானத்தினாலோ, தமது புறளியை நிலை நாட்டவேணு மென்னு மஹங்காரத்தினாலோ, தாமடயவிருக்கு மேம்பாட்டின் கருத்தினாலோ பார்வதியே பராசத்தியெனத் தமதுச் சுவடியில் வரைந்தனன். அவ்வாறு இவனது கொள்கையே பிரதானமாக வைத்து ஆராயுமளவில், யாதொரு சுருதி ஸ்ம்ருதி, இதிகாசாதி சகல ப்ரமாணங்களிலும், பராசத்தி யென்றும், தேவீ, மஹாலக்ஷ்மி யென்றும், இப்பார்வதி பரமாக ஒரக்ஷரமாகினு முறைக்கவில்லை.

வால்மீகிராமாயணம் ஆரண்யகாண்டம் 16-ம் சர்க்கத்தில்

"க்ருதாபிஷேகோ கிரிராஜ புத்ர்யாருத்ரஸ்ஸந்தீ பகவாநிவேச:"

என்று ஸ்ரீவால்மீகி பகவான் ருத்ரனைப்பற்றி கூறுகையில், ருத்ரனுடைய பத்னியும், பர்வதராஜப் புத்ரியுமாகிய பார்வதியைக்கேவல ராஜபுத்ரி யென்றே நிச்சயிக்கையாலும்,

பாத்மோத்ரத்தில்

"உபவஷ்டஸ்ததோ போக்தும் பார்வதீம் சங்கரோ ப்ரவித்"

என்று சங்கரன் பத்னியும், பர்வதராஜப் புத்ரியுமாகிய பார்வதியுடன் யென்கையாலே பர்வதராஜன் புத்ரியே பார்வதியென்றும்

லிங்கபுராணம் பூர்வகாண்டம் 20-ம் அத்தியாயத்தில்

"மலைமகள் கொழுநன்"

என்று சங்கரனது ஆண் குரியான லிங்கத்திற்கு உயர்வு கூறும் லிங்கபுராணமும் கேவலப்பர்வதராஜன் புத்ரியே பார்வதி யென்று கூறுகையாலும்,

பராம்ம விவேகத்தில்

"மலைமடந்தைத் தன்கழுத்தில் மங்கள நாணேதோ"

என்று பார்வதி கேவலம் பர்வதராஜன் புத்ரியே யென்றும் இன்னும் பிரிங்கிமஹருஷிச் சரித்திரத்திலும் பரக்கக்காணலாம்.

இத்யாதி சகல ப்ரமாணங்களாலும் பார்வதி பர்வதராஜன் புத்ரியே யென்று நிச்சயிக்கப்பட்டது. இன்னும் இவனது கொள்கையையே யாராய்ந்து பார்க்குமளவில் (பஹ்வ்ருசோப நிஷத்து, தைத்ராவர்ணசாகை, தேவீபாகவதமுதலியவைகளில்

"ருத்ரோ அஜீஜநத் ஸைஷா பராசத்தி:"

என்கையாலே பார்வதியே பராசத்தி யானல். அப்பார்வதி யினலேயே ருத்ரனுகிய சிவனைப் படைக்கப்பட்டுத் தாயானத் தான் புத்ரனுகியச் சிவனைக் கணவானுகக் கருதுவதே பொருளாகுமாதலாலும், சிவன் மோகினியுடன் கொண்டப் புணர்ச்சியினல் வுண்டான வியர்வையே கண்டக நதியாயும், அவனது வீரியமே, வீரம், பூரம் முதலியன வுண்டானதாகவும், தனது பத்னியுடன் கொண்ட புணர்ச்சியினு லருப்புண்ட யோனி, ஆண் குரிகளே லோகப்பிரசித்த லிங்கமாயும், இத்யாதி கேவல ஹேயகுண சமூகங்களே யுடையவர்களாயும் அக்குணங்களை கூறும் ஸ்காந்த லிங்கபுராண முதலிய தாமஸநூல்கள் ப்ரமாண மாக மாட்டாதென்றும் சாத்விக நூலாகிய மாத்ஸ்ய புராணம் 54-வது அத்தியாயத்தில், ஸ்ரீ விஷ்ணுபுராணங்கள் சாத்விக நூல்களாதலால் மோக்ஷ ஹேதுக்களென்றும், சிவ புராணங் கள் தாமச நூல்களாதலால் நரக ஹேதுக்களென்றும், கூறி யுள்ள படியால் அப்புராணங்களிலுள்ள யாவும், அப்ரமாணமே யென்றும், அவைகளால் துதித்துக் கொண்டாடப்படும் ஹேய குணசமூகங்களையுடைய சிவனையும் பார்வதியையும் பரப்ர ஹ்ம மென்றும் பராசத்தி யென்றும் அளவிறந்த வேற்றங்க

ளால் பட்டங்கட்டி புத்தக ரூபமாய் வரைந்துத் திரியும் குமா குருதாச னென்போனது விருப்பங்களும் நசியுமாரவ்வேற் றங்களைக் கண்டிக்கப்பட்டது.

எமது யதார்த்தப் பாரசத்திஸ்தாபனம்.

"ப்ரஹ்மருத்ர தயாஸ்ஸகலாதேவ: மநுஷ்ய: பசவஸ்த்தா
விஷ்ணுமாயா மஹாவர்த்தே மோஹாந்தமஸாவ்ருத:"

என்று பிரம்ம, ருத்ராதி சகல தேவர்களும், மநுஷ்யத்திரியக் காதி சகலமும் பரமாத்மாவின், மஹா மாய்கையில் கட்டுப்பட்டவைகளே யாயினும். பிரம்மா உலகத்தில் கோயிலிழந்ததை யும் சிவன் அம்மாய்கையின் கொடுமையால் பீடிக்கப் பட்டுத் தமது வீர்யம் துடைவழி யிரங்கக் காலின் கட்டைவிரலில் பிர வேசித்து சாஸ்தாவைப் பெற்றதின் விவரம் ஆக்நேய புராணம் வாய வீயத்திலும், தெளிவாய் கூறுவதையும், தமதுப் பத் னியும், பர்வதராஜன் புத்ரியுமாகிய பார்வதியுடனம்மாய்கை வலையில் சிக்குண்டவர்களாய், உபயருடையச் சின்னங்களு மரு ப்புண்டு, பின்புச் சிவன் தமதுபக்தியின் பெருக்கால் ஹரியை அர்ச்சித்துச் சின்னங்களைப் பெற்றதும், அருப்புண்டச் சின்ன ங்களை லிங்கமென லோகப் பிறசித்த மென்னும் விர்த்தாந்தங் களை பிரம்ம புராணம், அகஸ்திப சம்ஹிதைகளில் பரக்கக் கூறுவதையும், த்ரோணச்சாரியின் பத்னியிடம் தாம் கொண்ட வியாமோகத்தால் வெளிப்பட்ட வீர்யத்தைக் குதிரையால் பக்ஷிக்கப்பட்டு அஸ்வத்தாமன் பிறந்த விவரத்தை மஹாபார தம் கலக்கமறத் தெளிவிக்கையாலும், எமதருட்பெருங் கருணை யப்பனை ஸ்ரீமந் நாராயணனது மாய்கை எவ்வாறிருக்கு மெனில் அரனு நான்முகனும் பல தேவருநினது மாயையெனுங் கடல் வீழ்ந்தன ரடியனேனு மழுந்தினனுலிதிற் சரியாவோம் என்றும், இம்பரம் பரத்துள் வாழு மெண் கண் முக்கண்களார்ந்த

178143

உம்பர்களாதியோரை யுற்றவண் பாசங்கொண்டே எம்பரக் கரங்களாலே யிவ்வண மியக்க லென்றப் பம்பரந்தனைப்பாசத் தாற் பற்ற விட்டாட்டிக் காட்டும். என்றும் அனைத்துயிருமாயை யெனு மரும்பாசத்தசைந்தாட்டும் என்றும் தெரிய வரியதாந்த னது மாமாயை என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானது இச்சாரூபமான மாமாயையினால் பிரம்மச் சிவ இந்த்ராதி தேவர் களே கட்டுண்டு வெட்க்கித் திகைத்து ஏங்கித்திரிவ தென் றால் நம்போலியர்களைக் கூற கிம்புனர்நியாய சித்தமிறே.

தேவீபாகவதம்

"மாயாப்ரக்ருதிரேவைஷ சதாபுருஷசங்கத பிரம்மாண்டம்
தரிஷ்யதேஷா சித்வாவை பரமாத்மநே தத்சைஷா காரணம்
சர்வம் மாயாசர்வேஸ்வரி"

என்று சர்வேஸ்வரனது ஆணையின்படியே அம்மாயை பிரம் மாண்டங்களில் பிரவேசித்து பிரம்மாதி பிபீலிகாநந்தம் ஆண் பெண்ணென்னும் வியாமோஹத்தை யுண்டுபண்ணி விர்த்தி யடையச் செய்கிறாளென்றும்,

பஹ்வ்ருசோப நிஷத்.

"ஓம் தேவீஹ் யேகாகர ஆஸீத் ஸைவஜகதண்டமஸ்ருஜத
தஸ்யாஏவ ப்ரஹ்மா அஜீஜநத்"

என்று கிரியாசத்தி ஸ்ரீமந்நாராயணனது ஆஜ்ஞாபனையின்படியே அண்டங்களை நிர்மித்து அதில் ஸ்ருஷ்டிக்கர்த்தர்களான பிரம் மாதிகளை உண்டாக்கினளென்றும்.

தேவீ பாகவதம்

"யேஷாஸம் ஹ்ருத்யாசகலம் விஷ்வம்கிரடதி ஷம்ஷயே
லிங்காநி சர்வஜீவானும் ஸ்வசரீரேநீவேஷ்யஷா"

என்று சராசர பிரபஞ்சங்களிலுள்ள தேவமநுஷ்யாதி சகல ஜீவ கோடிகளிலும் ஸ்திரி, புருஷரூபேண போகாதி புணர்ச்சியை யுண்டுபண்ணிச் சின்னங்களின் த்வாரா ஸ்தூல சரீரத்தைப் பெற்று விர்த்தியடையச் செய்கிறாளென்றும்.

ஸ்ரீ ஸூக்தம்

" காம்ஸோஸ்மிதாம் ஹிரண்யப்ராகாரமாத்ராஜ்வலந்தீம்
த்ருப்தாம் தர்பயந்தீம் பத்மேஸ்திதாம் பத்மவர்ணாம்
தவாமிஹோபஹ்வயே ஸ்ரியம்"

என்று ப்ரஹ்ம ஸ்வரூபிணியாய், அவாங்மனோ கோசரனியாய் புன்சிரிப்புடனமர்ந்த அழகியத்திருமுக மண்டலத்தையுடையவளாய், க்ஷீரசமுத்திரத்தி னம்ருதத்தினோடு சங்கல்ப்பித்த விகாரமற்ற அப்ராக்ருத தேஜோமய திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவளாய், சகல ஐஸ்வர்யானந்தங்களையும் கொடுக்கப்படுமவளாய், தாமரைக்கமலத்தை ஆசனமாயுடையவளுமான மோக்ஷலக்ஷ்மியைத் தியானிக்கிறேனென்று மிச்சுருதிகூறுகையாலும்,

தேவீ பாகவதம்

" ஷாஷமாயா பரேதத்வே ஸம்வித்ரூபே அஸ்திசர்வத:
ததோமாயாவிஷிஸ்டாந்தம் சம்விதம் பரமேஸ்வரிம்
மஹேஸ்வரிம் பகவதிம் சத்சித் ஆனந்தரூபிநிம்த்யேதத்"

என்று பரமேஸ்வரியாயும், மஹேஸ்வரியாயும், பகவதியாயும், சத்சித் ஆனந்தமயமே திருவடிவமாய் பெற்றவளாயும், ஸ்ரீமந்நாராயணனது சர்வஞ்சத்வத்தையும், சர்வஜாலத்தையுமவலம்பித்தவளுமான மாமாயையே பரதத்வமென்றும், அழிவற்றவளென்று மித்தேவீ பாகவதமுறையிடுகையாலும்,

ஸ்ரீ ஸூக்தம்

" ஹிரண்யவர்ணாம் ஹரணீம் ஸுவர்ணரஜதஸ்ரஜாம் சந்த்ராம்
ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோம மமாவஹ' என்றும்,

தேவீ உபநிஷத்

" மஹாகாருண்யரூபிணீம் மந்த்ராணா மாத்ருகாதேவீ சப்தாநாம்
ஜ்ஞானரூபிணீம் ஞானானாம் சிந்மயாதீதா சூந்யாநாம் சூண்யஸாக்ஷிணீ
யஸ்ய: பரதரம்நாஸ்திஸைஷா" என்றும்,

மஹாலக்ஷ்மி காயத்திரி

" மஹாலக்ஷ்மீஸ வித்மஹேஸர்வஸித்தீசதீமஹீ
தந்நோதேவி: ப்ரசோதயாத்' என்றும்,

திரிபுராதாபிந்யோபநிஷத்

"தநுர்பாணதாரிணீம் வாக்விஜ்ரும்பிணீம் சந்த்ரமண்டலமத்ய
வர்த்திநீம் திருநேத்ராம் விசிந்த்யதேவீம் மஹாலக்ஷ்மீ ஸர்வலக்ஷ்மீ
மயீக் ஸர்வலக்ஷண ஸம்பந்நாம் ஹ்ருதயே சைதந்யரூபிணீம்
நிரஞ்ஜநாம் சர்வஸுபகரம் மஹாகுண்டலீம்"

என்று ஸர்வலோக சுந்தரியும், ஸர்வாங்கஸுந்தர ஸுகாநந்த ரூபியும், சந்திரமண்டலத்தையே ஆசனமாயுடையவளுமான மஹா லக்ஷ்மி, ஸ்ரீமந்நாராயணனுக்கு வல்லபையாய், பரமதயா பத்னியாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வாமினியாய், நிருபாதிக மாதாவாய், அந்த பரமேஸ்வரனோடே நித்ய ஸம்யுக்தையா யிருக்கின்ற இந்தத் தேவ தேவ திவ்யமஹிஷியான பெரிய பிராட்டியாரின் சக்திலேச ப்ரபாவத்தினாலன்றோ? ஸகலபூத பௌதிக தத்வக்கூட்டங்களும், அநந்தங்கோடி யண்டங்களும், அவற்றில்வாழும் சராசர ஸமூஹங்களும் வர்த்தித்து இருக்கின்றன. இக்காருண்ய ரூபையான லோகமாதாவின் கடாக்ஷலேசத்தினாலன்றோ? அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்டங்களும் வரைகடவாது நிலைகொண்டு நிற்கின்றன. அவைகளில் வாசம்பண்ணுகின்றுள்ள பிரம்ம ருத்ரேந்த்ரா க்னியாதித்ய வருணவாயுவிய மாஸ்வனி மருத்வாதியான ஸுராஸுர முனிகண மநுஷ்யகண பசுபக்ஷிகண ஸ்தாவராதி களும், மங்களகரமான ஸுகாநுபவங்களை பண்ணிக்கொண்டு வருகின்றனவாதலாலே ஸர்வேஸ்வரனது இச்சா சத்தியும், க்ரியாசத்தியுமான மஹாலக்ஷ்மியினது கடாக்ஷத்தினாலேயாவும் சுகமே வர்த்தித்து வாழ்கின்றனவென்றும்,

தேவீ பாகவதம்

"யேஷாம் பகவதிதேவீ சர்வேஷாம் காரணம்ஹிந:
மஹாவித்யா மஹாமாயா பூரணப்பிரக்ருதிம்ரவயயா"

என்று பகவத்சப்த ப்ரதிபாத்யனை ஸ்ரீமந்நாராயணனுக்க

பின்னயான இவளது சக்திலேசப்ரபாவத்தினுல் அநந்தகோடி அண்டங்களையும் ஸ்ருஷ்டிக்குமவளாயும், சர்வஜகத்காரணியாயும், மாமாயையாயும், மூலப்ரக்ருதியாயும், விளங்குபவளான பெருந்தேவியை த்யாகிக்கிறேனென்று கூறுகையாலும், இத்யாதி ஸர்வாந்தர்யாமியான ஸர்வேஸ்வரனேடு தானும் அபின்னபூதையாய் நின்று ஸ்ருஷ்டியாதி வ்யவஹாரங்களை ஒருங்குணர்ந்து நடத்துபவளாயும், பிரம்மாதி சராசர சமூஹங்களும் தத்தமக்கு விதித்தநாள் சுகமே வர்தித்துவாழ அருட்புரியும் அருட்சசத்தியாயுமிறே எமது திருத்தாயாரான மஹாலக்ஷ்மி இருப்பது "இவளருளொழிந்தாற் பூத மிருக்குமோ விருந்தபோதும், திவளுறும் சத்தமாதி திகழுமோ திகழ்ந்தபோதும், துவளுறும் பொறிகளேக்கத்தோன்றுமோ தோன்றும்போதும், கவளமாக்கொளுமோ உள்ளூர்கரணமுமுயிருமாதோ" என்றும் "தொல்லை யெவ்வுயிரும் பிறக்கும் பொன் வயிற்றன்னை என்றும்" மடற்கமலநறும் பொகுட்டிலரசிருக்குஞ் செந்துவர் வாய்மயிலே யுன்றன், கடைக்கணருள் பெற்றன்றே கார்வண்ணனுலகமெல்லாங் காவல்பூண்டான், படைத்தனனன் முகக்கிழவன் பசுங்குழவி மதிபுனைந்த பரமன்றுனும், துடைத்தனன்" என்று பிறருங்கொண்டாடவல்லளாய் இருப்பாளன்றே இலக்ஷ்மிதேவி,

ஸ்ரீகீதோபநிஷத்

"பூமி ஆபோ ஆனலோபாவாயு: கம்மனேபுத்திரேவச
அஹங்காராயிதியம்மே பின்னபிரக்ருதிரஸ்டத:" என்றும்,
"அங்யாகப்ரக்ருதிம்விதிமேபாரம் ஜீவபூதாம்
மஹாபஹோயயேதம் தாரியதேஜகத்து"

என்று ஓ அர்ஜுனு! மூலப்பிரக்ருதியான மஹாமாயையும், அம்மாய்கையிகிடமிருந்துண்டான எட்டு தத்வங்களும், என்னிட

மிருந்தே பின்னமாயிற்றென்றும் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா கீதையில் கூறியுள்ள படியாலும்,

கீதோபநிஷத்

"ப்ராமயந் சர்வபூதாநி யந்த்ராரூட நிமாயயா"

என்று பிரபஞ்சங்களிலுள்ள சராசர பூதங்களேயும், யந்திரத்திலகப்பட்ட தான்யமெவ்வாறு சுழன்று முடிவில் ரூபமின்றி பஸ்மமாகுமோ அவ்வாறே எமது மாமாயையால் சுழற்றப்பட்டு முடிவில்லயமாகிறதென்று கண்ணன் கீதையில்கூறியுள்ளபடியாலும்,

தேவீ பாகவதம்

"யிச்சாபரமாத்மந: காமம் நித்யா அநித்ய ஸ்வரூபிணீ
வேதகர்பாம் வேதவல்லி சர்வேஷாம் ஆதிரீஸ்வரீ"

என்று பரமாத்மாவினது இச்சா சத்தியாயும், நித்ய அநித்ய காரணியாயும், கற்பக்ஷயத்தில் வேதங்களேத்தமது கற்பத்தில் வைத்துக்கொண்டிருப்பவளாயும்சர்வேஸ்வரியாயும்பராசத்தியாயுமுள்ள ஸ்ரீவேதவல்லித்தாயாரைத் தியானிக்கிறேனென்றும்,

கீதோபநிஷத்

"ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தயஸ்ஸம் பவந்திய:
தாஸாம் ப்ரஹ்ம மமஹத்யோநி ரஹம்பீஜப்ரத: பித"

என்று கௌந்தேயா! சகல பிரபஞ்சங்களிலும் பிறக்கும் பிரம்ம, ருத்ர, சராசர பூதங்களுக்கும், பிரக்ருதியான மஹா மாயைத் தாய்ப்போன்றது பரப்ரஹ்ம ஸ்வரூபியான நான் விதைப்போடும் தந்தையாவன் என்று ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா ஸ்பஷ்டமாய் விளக்கினர்,

பைங்களோபநிஷத்

"ஸஸ்வாதீநமாயஸ் ஸர்வஜ்ஞஸ் ஸ்ருஷ்டி திதி லயா
நாமாதிகர்த்தா ஜகதங்குரரூபோபவதி"

என்று அநந்தகோடி பிரம்மாண்டங்களின் ஸ்ருஷ்டி, திதி, லயங்களுக்குக்காரண பூதனை ஸ்ரீமந்நாராயணன் தனது இச்சா

சத்தியாலுண்டான மாஹாமாயையாகிய மூலப்பிரக்ருதியை ஸ்வாதீனமாயுடையவனாய், அம்மாயயைக்கொண்டே சகல ஜகத்தையும் படைத்தனன் என்றும்,

மஹா நாராயணோபநிஷத்

“ஸுத்தஸத்வமயோ லீலாக்ருஹீத நிரதிசயாநந்த
லக்ஷ்மீணோமாயோபாதிகோ நாராயண ஆஸீத்”

என்று கற்பக்ஷயத்தில் அம்மஹா மாயையான மஹாலக்ஷ்மிக்கு வாசஸ்தானமானதும், அம்மாயையின் ஸ்வாதீனனான நாராயணனது விகாரமற்றதும், சுத்த சத்வமயமானதுமான பரமபதம் என்றும்,

ஸ்ரீ ஸூக்தம்

“அஸ்வபூர்வாம் ரதமத்யாம் ஹஸ்திநாதப்ரபோதநீம்
ஸ்ரியம்தேவீ மூபாஹ்வய ஸ்ரீமா ர்தேவீஜுஷதாம்”

என்று சராசர பிரபஞ்சங்களையும் தமது ஜாலத்தாலே நிக்ரஹிக்கவும், ஹரிக்கமுடைய ஜாலமே குதிரைகளாகவும், அப்பிரம்மாண்ட ஸ்ருஷ்டி சம்ஹாரக்கர்த்தர்களை ரதமாகவும் கொண்டு ஜகத்காரணங்களை நடத்துபவளாயும், யாவற்றிற்கும் நாயகியாயும், ஜகந்நாயகனான ஸ்ரீமந்நாராயணனின் திருமார்பையே வாஸஸ்தானமாய், அந்த பரமேஸ்வரனோடே நித்ய ஸம்யுக்தையாய், “பூதநாயகன் புவிமகணயகன் பொருவில், வேத நாயகன் மார்பகத்தினது வீற்றிருந்த ஆதி நாயகி” என்றும் “உலகம் யாவையு மீன்றளித் தழித்திடு மொருவன் இலக மார்பகத்திருந் துயிர்யாவையுமீன்ற, திலகவாணுதல்” என்றும் “ஏகநாயகன் மார்பகத்தினது வீற்றிருக்கும் ஆதி நாயகி” என்றும் மலரில் மணமும், கல்லில் ஒளியும் போலே ஸர்வ லோகநாதனுடைய வக்ஷஸ்தலத்தில் நிரந்தரம் அநபாயினியாய் வாஸம் பண்ணிப் போருமவளென்றும், அவ்வாறிருக்கக் கருத்தே தென்னில், எம்பெருமான் தண்டதாரணதலாலே இவ்வாத

மாக்களோ, எந்நாளும் அபராதமே வடிவமாய் அவ்வெம்பெருமான் பக்கல் நன்றியற்ற பாவிகளா யிருச்கு மிவ்வாத்மகோடிகளினது குற்றங்களை நற்றமாகக் கொண்டருள் புரிய வேண்டியும், சதுர்முக, பசுபதி, மகபதி முதலானோர் கேட்டுக் கொண்டபடியும், அவனது திருமார்பை விட்டகலாதவளாயுமிறே சர்வலோக சுந்தரியான எமதரும் கருணைத் தாயாரிருப்பது.

ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில்

"க்யாநாதயோகுணரூபம் லக்ஷ்மிர்நித்யாநபாயிநி பூமி நீளா தயோ தேவ்யா சேநேசாத்யாசசூர்ய: த்தாமபரம் காலஹ புருஷஸ் ப்ரகுருதிஸ்ததா மஹதாதிதராந்தா நிசப்தசாவரணான்யபி பிரம்ம மந்தம் ததந்தஸ்தாலோகஸ்வஸ சராஸராஹ யேவமந்தாங்யநந்தாநி தத்சர்வம் நாராயணமுச்சதே"

என்று ஸ்ரீமந் நாராயணனுடைய நித்ய மானஜ்ஞாநசக்த்யாதி திவ்யாத்ம குணங்களும், குணப்ரகாசமான திவ்யமங்கள விக்ரஹமும், அவ்விக்ரஹகுணமான ஸௌந்தர்யாதிகளும், அச்சௌந்தர்யாதிகளோபாதி சாத்தின கிரீடமகுடாதி திவ்யாபரணங்களும், அவ்வாபரணங்களோடே விகல்ப்பிக்கலாம்படியான சங்கச்சக்ராதி திவ்யாயுதங்களும், இவ்வளவிருந்த வேற்றத்தையுடைய பரவாசுதேவனை, காட்டிலெரித்த நிலாவாகாதபடி அருகே யிருந்தநுபவிக்கிற மாமாயையாகிய மஹாலக்ஷ்மியும், மஹருஷிவர்க்கங்களும், அச்சேர்த்தியிலே அடிமை செய்கிற அநந்தக் கருட விஷ்வக்ஸேந ப்ரமுகரான நித்யஸூரி ஸங்கமும், அவர்களோபாதி அடிமைசெய்கிற முக்தரும், அவ்வடிமைக்கு ப்ரவர்த்தகமாய் பஞ்சோப நிஷண்மயமான பரமபதமும், குணத்ரயாத்மகமான மூலப்ரக்ருதி மண்டலமும், புருஷ ஸமஷ்டியும் அஹோராத்ராதி விபாகயுக்தமான காலதத்வமும் ப்ரவாஹரூபேண நித்யமான மஹதாதிகளும், தத்கார்யமான அண்டங்

களும், அண்டாந்தர்வர்த்திகளான தேவ, மநுஷ்ய, திர்யக், ஸ்தாவரங்களுமாக ஸ்ரீமந் நாராயணன் மஹா மாய்கையை ஸ்வாதீனமாகக்கொண்டு அண்டாதிஜகத்காரணத்தை யாதொரு குறைவுமின்றியே நடத்துகிறனென்றும், இத்யாதிபடியே மாமாயை என்றும், பராசத்தி என்றும், இச்சாசத்தி என்றும், க்ரியாசத்தி என்றும், தேவீ என்றும், மஹா லக்ஷ்மி என்றும், வேத வேதாந்தாதிகளால் முறையிடா நின்ற நமது தீனதயாளச் செல்வியார் ஸர்வாந்தர்யாமியான ஸர்வேஸ்வரனோடே தானும் அபின்ன பூதையா யவனைவிடாது நிற்கின்றபடியால் அகாரத்திற் சொல்லுகின்ற ஸர்வரக்ஷகத்வ, ஸர்வசேஷித்வ, ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வாதிகளுக்கெல்லாம் ஆதார பூதையாய், ஸ்ரீ ஸூக்தப்ரதி பாத்யையான பெரிய பிராட்டியாருடைய நித்ய ஸம்பந்தமுள்ளதன்றோ? அந்த ப்ரஹ்மமென்று வேதங்களும், வேதோபப்ருஹ்மணங்களும் வாயோலையிட்டுவைத்த காரணத்தாலிறே, ஸ்ரீய: பதியான முகுந்தனுக்கன்றி ப்ரஹ்மசப்த வாச்சியனுந்தன்மை மற்றையாருக்குமில்லையாயிற்று, இவ்வளவேற்றமுடைய மஹாலக்ஷ்மியாராற்றான் எந்தப்பதவிகளினு மிருக்கின்ற தேவதைகளுக்கும், அவர்கள் தொண்டர்களுக்கும் மங்களமுண்டாகவேண்டியது இவர்தாம் அதைக்கொடுக்கவேண்டியது எந்தமதாந்தர காமரானவர்களும் நமது லக்ஷ்மிகடாக்ஷம் வேண்டுமென்றே கோருவார்களேயன்றி, இவருக்கெதிர்த்திட்டான ஜ்யேஷ்டையினுடைய கடாக்ஷத்தைக்கோரமாட்டார்கள் இந்த ஸாது ஸேவ்யை யாரது கடைக்கண்ணினின்றுங் கொட்டுண்டு கிடக்கப்பட்டதிறே அணிமாதி அஷ்டசித்திகளும், அஷ்டைஸ்வர்யங்களும், ஸர்வாங்க ஸுந்தர ஸுகாநந்த ரூபியான இவா கடாக்ஷமற்றகாலத்தில் விதி சிவ சதமகாதி சராசரங்

கள் பட்ட கஷ்டங்கள் ஸகலவித்யா ஸமூஹங்களெல்லாவற்றி னும் கண்டுகொள்ளலாம். இத்தாயார் கடாக்ஷித்தால் நாம் எப்போதும் ஸுமங்கலிகளாய் நமது மகிழ்நரோடு கூடி அமங் கலிகளென்னாது ஸகலபாக்ய ஸுகத்தோடும் வாழலாமே யென் றன்றோ? ஸதாகாலமும் பாரதி, பார்வதி, சசி, அருந்ததி முத லான தேவ, மநுஷ்ய, பந்நகாதி ஸமஸ்தமான ஸ்திரீகளும், மஹா விஸ்வாஸத்தோடு சுக்ரவார முதலான தினங்களில் அதி நியமனமான வ்ரதமிருந்து நோன்பெடுப்பது, ஸ்ரீவரலக்ஷ்மி வ்ரத சரித்ரத்தைக் கேட்டறிவர்களாயின் பார்வதிநோற்ற நோன்பு விசதமாகும் இவ்வாறு பராசக்தியும், ஸ்ரீமந் நாராயண னின் வல்லபையுமான மஹா லக்ஷ்மியின் ஸர்வசக்த்யாதி சகல கல்யாணகுண சமூஹங்களையும் அநந்த ப்ரமாணங்களாலும் வெளிப்படையாய் விளக்கப்பட்டிருக்க, குமரகுருதாஸனென் பான் மஹாலக்ஷ்மி என்று ஸ்ருதிகளால் கூறப்பட் டிருப்பதால் அவையாவும் பார்வதியைச் சொன்னதேயென்று தமதுச் சுவடி யில் பிதற்றினன் யித்தால் இவனது கக்ஷியை நிரசிக்கப்பட்டு எமது ஸர்வவேத தாத்பர்யமான யதார்த்தத்தை ஸ்தாபித்தனம்.

6-வது புரட்டு க்ருஷ்ணன் ஸிவோகம்பாவனையால் கீதையை வெளியிட்டானென்பதின் கண்டனம்

“ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்யேசேர்ஜுநதிஷ்டதி”

என்று க்ருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு, ஈஸ்வரன் சர்வ ஜீவன்களுக்குள்ளும் வியாபித்துளன், என்றருளிச் செய்த னர். இதற்கு குமரகுருதாசனென்பான், க்ருஷ்ணன் முதலில் சகல ஜகத்காரணமும் ஈஸ்வரபரமாய்ச்சொல்லிப் பிறகு சகல ஜகத் காரணமும் நானே என்று கூறுவதின் காரணம் ஸிவோ கம்பாவனையால் கூறினதே என்று தமது சைவ சமயசரப மென்னும் சுவடியில் வரைந்தனன்.

க்ருஷ்ணன், அர்ஜுனனுக்கு முதலில் பரமாத்மாவின் ஸ்வரூப, ரூப, குணச் சேஷ்டிதங்களைத் தெளிவாக வுறைத்து பிறகு அப்பரமாத்மா தானேயென சூசிப்பித்தனர். ஏனெனில், அர்ஜுனன் வேதார்த்தங்களை யறியாதவனுதலாலும், தர்மநந்தன சகாதேவர்களைப்போல் க்ருஷ்ணனது அவதாரச் சேஷ்டிதங்களை யுணராதவனுதலாலும், ஸ்நேகனென்றும், மாமனென்றும் இத்யாதி முறைகளைக்கொண்டே க்ருஷ்ணனிடம் நேசிப்போனுதலாலும், தமது பராக்ரமமுதலிய சிற்சில சேஷ்டைகளையே அஹங்காரரூபமாய்க் கொண்டுள்ளோனுதலாலும் அவ்வர்ஜுனனது சகல அஹங்கார முதலிய துற்குண சமூஹங்களையும் நிவர்த்திக்கும் பொருட்டே அவித்யாதி கருமகாண்டங்களை யுபதேசித்து அதில் அருசியை யுண்டுபண்ணிப் பிறகு ஞானகாண்டங்களை போதித்து பரப்ரஹ்மப் பரதத்வாதி விலக்ஷணாநந்தங்களை யுபதேசித்து அதில் ருசியைப் பிரப்பிக்கச்செய்து அனந்தரம் தமது விஸ்வரூபத்தையும் தாமே ஜெகஜ்ஜன்மாதி காரணபூதனென்னு மேற்றங்களையுமுணர்த்தவல்ல அநந்தகோடி பிரம்மாண்டங்களையும் பிரம்ம, ருத்ர முதலான சராசரங்களையும் தன்னுள்ளடக்கி விஸ்வரூபமயமாய் ஸ்தாபித்து நின்றனன்.

கீதோபநிஷத்து

"மந்நாபிபங்கஜாஜ்ஜாத: பத்மயோனி: பிதாமஹ:
தல்லலாடோத்பவோருத்ரஸ் தஸ்மாஜ்ஜாதஷ்ஷடாநந:"

என்று அர்ஜுனா! என்னுடைய நாபிக்கமலத்தி லிருந்து பிரம்மாவும், அவனுடைய நெற்றியிலிருந்து சிவனும், அவனிடத்திலிருந்து அறுமுகனுமாகப் பிறந்தானென்று க்ருஷ்ணன் கூறியுள்ளபடியால் ஸிவோகம்பாவனை யென்னுமிவனதுக்கூறியே ப்ரதான மாகவைத்து ஆராயுமளவில், முன்னம் க்ருஷ்ணனல்

கூறப்பட்ட ஈஸ்வரகப்த ப்ரதிபாத்யன் சிவனைப் வைத்து க்ருஷ்ணன் ஸிவோகம்பாவனையால் யாவும் தானே யென்றதாயும், பரமாத்மா சிவனே யென்றும் பிதற்றிய இவனது புரளியின்படி ஸிவோகம்பாவனையானல், யாவும் தானே என்பானேயன்றி பிரம்மச்சிவ முதலானவர் ஜீவ கோடிகளே என்றும் என்னல் படைக்கப்பட்டவர்களென்றும் வேதங்களால் மூறையிடும் குறைகள் தீரவே தாம் உதாரணமாக ஸ்தாபித்து நின்றனரே யன்றி ஸிவோகம்பாவனை என்பது முழுதும் கண்டிக்கத்தக்கது.

கீதோபநிஷத்

" ப்ரஹ்மாண நீலகண்டஞ் சயச்சாந்யாதேவதாஸ்ம்ருதா:
ப்ரதிபுத்தாஃஸேவ்யந்தே யஸ்மாத்பரிமிதம்பலம்"

என்று குந்திபுத்ரா! பிரம்மா, நீலகண்டன் முதலிய தேவர்களை அறிவுடையோர் செவியாரென்றும், அவர்களால் கொடுக்கப்பட்ட பலன்கள்யாவும் அழியப் பட்டவைகளே என்றும்,

"ருத்ரம் ஸமாச்ரிதேதேவா ருத்ரோப்ரஹ்மாணமாச்ரித:
ப்ரஹ்மாமாச்ரிதே ராஜந்நாஹம்கிஞ்சிதுபாச்சரித:"

என்று தேவர்களால் ஆஸ்ரிக்கப் படுமவன் சிவனென்றும், அச்சிவனல் ஆஸ்ரிக்கப்படுமவன் பிரம்மாவென்றும், அப்பிரம்மனல் ஆஸ்ரிக்கப்படுமவன் யானே என்றும், யாம் என்னை யொழிந்த சர்வராலும் தொழப்படுமவனென்றும் கூறுகையாலும், இக்கருத்திற்கிசைந்தே அப்பய்ய தீக்ஷிதரும் தமது பாரததாத்பர்யஸங்க்ரகத்திலும் தெளிவாய்க் கூறியுள்ள படியாலும்,

கீதோபநிஷத்

"வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஸ்மி பாண்டவானாந் தநஞ்சயஹ"

என்று தாம் தற்போது யாதவகுலத்தில் வசுதேவ புத்ரனுயும், பாண்டவ தநஞ்சயனுயுமிருக்கும் தமது ஸௌலப்யத்தை கூறுகையாலும்,

ஸ்ரீதோபநிஷத்

"ஜந்மகர்ம சயோதிவ்யமேவம்யோவேத்திதத்வத :
த்யக்த்வாதேஹம் புநர்ஜந்மநைதிமாமேதிஸோர்ஜுந"

என்று அர்ஜுநா! லோகோஜ்ஜீவனார்த்தமாக அவதரித்த எனது திவ்ய அவதாரங்களையும், எனது அசாதாரண செய்கைகளையும், எவன் உண்மையாக வறிகிருனே அவனே இச்சம்சார பந்தத்தினின்றும் விடுபட்டு மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைபவனென்றும்,

"அவஜாயந்திமாம்மூடா மாநுஷீந்தநுமாஸ்ரிதம்
பரம்பாவமஜாநந்தோ மமபூதமஹேச்வரம்"

என்று பரமோத்க்ருஷ்டமாய்ப் பஞ்சோப நிஷண்மயமான மஹா ஜாலங்களையுடைய என் தத்வத்தையும், எனது அவதாரச் சேஷ்டிதங்களையும் நிந்தித்துக் குறைகூறுபவர்கள், ஜனன மரண, நரகாதிகளினின்றும் எத்தனைக் கல்பங்களாயினும் மீள்வதில்லை என்றும் க்ருஷ்ணன் எதிர்காலத்தைக் கணித்தே இப் பாஷண்டச் சண்டாள த்ரோகிகளின் பதவிகளையும் முன்னமே ஸ்தாபித்து விட்டனர். இத்யாதி வாக்யங்களின்படியே க்ருஷ்ணன தாமே பரமாத்மா வென்று நிரூபித்தும், பிரம்ம, சிவ இந்த்ராதி முதலான தேவ, மநுஷ்ய, த்ரியக், ஸ்தாவராதி சராசர ஸமூகங்களும், சகல அண்டங்களும், ஸ்ருஷ்டி லயாதிக் கிரமங்களையும், வேததாத்பர்ய பரமாகவே கூறியுள்ளானுகையால் இச் சாஸ்த்திரத்தை பரமோத்க்ருஷ்டமாகவும்,யாவற்றிற்கும் முதன்மையாகவும், பாஷ்ய நிர்வாகிகளும் மற்றையாவரும் கொண்டாடியிருக்க **குமரகுருதஸனென்பான்** தான் யாவருக்கும் மேன்மை வாய்ந்தநல்லவனெனத்தானேக் கருதித்தமதுச் சுவடிகளே பெரிய பாஷ்யங்களாயும், சுருதிகளாயும் நினைந்து க்ருஷ்ணன் ஸிவோகம் பாவனையால் கீதையை வெளியிட்டனனென்றுத்தாம் அந்தர்யாமியாய்நின்று க்ருஷ்ணனின் **ஸிவோகம்**

பாவனையைத் தெரிந்துக்கொண்டவன்போல் தமதுச்சுவடியில் வரைந்த ஆபாசப் பிதற்றல்களை அழுத்தமாய்க் கண்டித்தனம்.

ஸ்ரீ க்ருஷ்ணன் பரமாத்மாவே எனல்

ஸ்ரீ விஷ்ணுபுராணம் 5-ம் அம்சம்

"க்ருஷ்ண க்ருஷ்ண ஜகந்நாத ஜாநேத்வாம் புருஷோத்தமம்
பரேசம்பரமாத்மாநம் நாதிநிதஹரிம்
தேவதிர்யங்மநுஷ்யேஷு சரீரக்ரஹணாத்மிகாலியெம்"

என்று வாணாசுரவதத்தில், சிவன், க்ருஷ்ணனைப்பார்த்து, புருஷோத்தமா, பரமேஸ்வரா, ஜெகத்நாயகா, ஆதியந்த மில்லாதவா, லோகோஜ்ஜீவனார்த்தம் அவதரித்தவா, என்று பலவாராகத்துதித்துச் சரணமடைந்ததாலும்,

மஹா நாராயணோபநிஷத்

"தேவகீஸுத கோவிந்த வாஸுதேவஜகத்பதே"

என்று தேவகிபுத்ரனையும், கோகுல நிர்வாஹனையும், அவதரித்த வாசுதேவன் ஜகத்பதி என்று கூறுகையாலும்,

அதர்வண சிரசில்

"ப்ரஹ்மண்யோ தேவகிபுத்ரோ ப்ரஹ்மண்யமதுசூதந:

என்று தேவகிபுத்ரனுபவதரித்த மதுசூதனன் பரப்ரஹ்மமென்றும்,

ருக்வேதம் ஆத்மபோதோபநிஷத்

"வைகுண்டபுவனங்க மிஷ்யதி ததிதமபுண்டரீகம்
விஜ்ஞானகம்தஸ்மாத் தடிதாப: மாத்ரம்ப்ரஹ்மண்யோ
தேவகீபுத்ரோ ப்ரஹ்மண்ய மதுசூதந:"

என்று யோகிகளினது ஜனனத்தை அர்த்திக்கும் ஸ்ரீவைகுண்ட நாதனும், பரப்ரஹ்மமுமான மதுசூதனன் தேவகிபுத்ரனுயவதரித்தான் என்றும்,

யஜுர்வேதம் கலிசந்தாரணோபநிஷத்

"ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண ஹரே"

என்று இச்சுருதி க்ருஷ்ணபரமாத்மாவை தியானிக்கையாலும்,

இத்யாதி சகலப்பிரமாணங்களாலும் க்ருஷ்ணன் பரமாத்மாவே என்று நிச்சயிக்கப்பட்டது. கேவலபண்டாரங்களும், பாஷண்டர்களும், க்ருஷ்ணன் ஸ்திரீ கற்பத்திநின்றும் மனிதனைப் பிரந்தவனென்றும், க்ருஷ்ணன் ஸிவோகம்பாவனையால் கீதையை வெளியிட்டனனென்றும் தூஷண குதற்கங்களைக் கல்பித்துப் புத்தகரூபமாய் வரைவதே தொழிலாய் திரியுமிந் நாஸ்திகரால், பரமாத்மாவின் சகல சக்திகளும் குறைந்து ஜீவாத்மாவாயும், இவர்களால் ஊளையிடும் ஏற்றங்களால் ஜீவாத்மாவான சிவன் பரமாத்மாவாய் விடுவனென்றும், நினைவதினால் பயன்யாதுமின்றி, பரமாத்மா பரமாத்மாவேயாய், மற்றயாவும் ஜீவாத்மாவேயாய், ஊளையிடுமிவர்கள் ரௌரவாதி நரக அதோகதியாய்ப் போவார்களென சத்யமாய் ஸ்தாபித்தனம்.

7-வது குமரகுருதாசனென்போனால் திரவிடோபநிஷத்தையும் ஸ்ரீமத் சடகோபரையும் நிந்தித்துக் குறைவுபடுத்திய அக்குறைகளை நிவர்த்தித்து யதார்த்தத்தை ஸ்தாபித்தல்

பவிஷ்யபுராணத்தில்

" த்ரவிடாநாயநிரதம் யோநிம் ததிஸதுமம்திம்பிரம்ம:
பிரளயபறியந்தம் கும்பிபாகேசபச்யதே"

என்று ஸ்ரீமந் நாராயணனை உபாயோபேயமாய் ஆஸ்ரயித்து மோக்ஷ சாம்ராஜ்யமாகிய பரமபதத்தை யடையப்ராப்தமுள்ள சகல ஜீவன்களுமெளிதில்லுணரும்பொருட்டுத் தமது பரமக்ருபையால் (வியாஸ ரூபாய விஷ்ணுவே) என்றும் (விஸ்வக்சேநோ ஜநார்தந:) என்றும் (சடகோபாய விஸ்வக்சேந:) என்றுமித்யாதி வாக்கியங்களின்படியே வேதபதார்த்தங்களை ஸ்தாபிக்க வியாசரும், அவ்வேதார்த்தங்களை திரவிட வேதமாய் ஸ்தாபிக்கச் சடகோபருமாக, பகவான் அம்சாரூடராய் கல்பங்கள் தோறும் அவதரிக்கின்றபடியால் அவர்களிடத்தும்,

அவராருளிச் செய்த திரவிடோபநிஷத்தினிடத்தும் திரிகரணங்களாலும், அத்யந்த பிரீதியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், அவரையும் அவரருளிச்செயல்களையும் நிந்திப்பவர் பிரம்ம பிரளய பர்யந்தம் ரௌரவாதி நரகத்துன்புருவது திண்ணமென நிச்சயிக்கப்பட்டது.

ஸ்ரீ பாஞ்சராத்ரம்

" அதித்யாத்ரமிடாம் நாயம் ஸ்வசாகாத்யாயநாத்பரம்
ஸ்ரமந்ந குரத்தேந்ய த்ரசோபியாதி பராங்கதிம்"

என்று வேதத்தில் அவ்வித்தையாகிய கருமகாண்டத்தை நீக்கி வித்தையாகிய ஞான காண்டத்தின் ரசமே திரவிடோபநிஷத்தாக கல்பங்கள் தோறும் ஸ்ரீமத் சடகோபரால் ஸ்தாபிக்கப்பட்டு அத்திரவிடோப நிஷத்தைக் கொண்டே சகல திவ்ய தேசங்களிலும் க்ரஹங்களிலும் ஈஸ்வராரத்யயநம் செய்ய வேண்டியதென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

அனுருத்தசம்ஹிதா

"ஸ்வாசாக: த்ரமிடாம் நாமவ்விசித்வேதேத்ரி புருஷம்
யஸ்யதஸ்மிநாவாக்ஷாஸ்யாத்திரௌ ப்ராங்ஹம்நனுமிதிஸ்ருதிம்"

என்று யாதொரு பிரம்ம வித்துக்கள் மோக்ஷத்தை யடைந்தாலும் இந்த திராவிட ஸ்ருதியைக் கொண்டே ப்ராஹ்மமேதஸமஸ்காரம் செய்ய வேண்டியதென்றும் திரவிட ஸ்ருதி, வேதங்களால் ஸ்தாபிக்கக் கூடாத பரம புருஷார்த்தத்தை ஸ்தாபித்துள்ளபடியால் வேத அத்யயநத்திற்கு முன்செல்லவேண்டியதென்றும் மற்றை யாவையையும் கண்டித்து கூறுகையாலும்,

ஸ்ரீமந் நாதமுனிகளருளிச்செய்தது

" பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம் ஸர்வார்த்ததம்
ஸ்ரீ சடகோபவாங்மயம் ஸஹஸ்ர ஸாகோபநிஷத்ஸமாகம்
நமாம்யஹம் த்ராவிடவேதசாகரம்"

என்று 1180 ஸாகைகளை யுடைய வேதங்களின் சகல ரகஸ்யங்

களையும் விவரிக்க வல்லதாயும் அஹோபாஹ்யமாய் கம்பீரார்த்தமாய் அறுபதினாயிரப்படியெனவும், முப்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, ஆறாயிரப்படி, மூவாயிரப்படியென பிரம்மவித்துக்களால் வியாக்யான முடையதாயும், ஈஸ்வர ஸ்வரூப, ரூப குணச் சேஷ்டிதங்களையே நன்குணர்த்த வல்லதுமான திரவிட வேதமென்கிற மஹா சமுத்திரத்தை ஸ்ரீமத் சடகோபரால் அருளிசெய்யபட்டவை என்றும்,

திருக்குருகைப்பிரான்

" ஆய்ந்தபெருஞ் சீரார்சடகோபன்
செந்தமிழ்வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற" என்றும்,

மணவாளமாமுனிகள்

" ஏரார்வைகாசி விசாகத்தினேற்றத்தை பாரோரறியப்பகர்கின்றேன்
சீராரும் வேதம்தமிழ்செய்தமெய்யன் எழில்குருகை
நாதன் அவதரித்த நாள்" என்றும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர்கள்

" ஈயாடுவதோ கருடற்கெதிரே யிரவிக்கெதிர் மின்மினியாடுவதோ
நாயோடுவதோ வுருமிப்புலிமுன் நரகேசரிமுன் நடையாடுவதோ
பேயாடுவதோவழகூர்வசிமுன் பெருமானடிசேர் வகுளாபரணன்
ஓராயிரமாமறையின் தமிழி லொருசொற்பொருமோ வுலகிற்கவியே"

திருவள்ளுவர்

" குருமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்றும்,

" ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்-தண்குருகூர்ச்
சேய்மொழியதென்பர் சிலர்
யானிவ்வுலகின் றாய்மொழியதென்பன் நகைந்து" என்றும்,

ஔவையாரும்

" சேய்மொழியோ தாய்மொழியோ செப்பினிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாருமறையென்ப—வாய்மொழிபோல்

ஆய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின்
சாய்மொழிக ளென்பேன் றகைந்து" என்றும்,

இத்யாதி வேதங்களை யொத்த 108 சம்மிதைகளை யுடைய ஸ்ரீ பாஞ்சராத்ர முதலான சாஸ்திரங்களாலும், ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான ப்ரஹ்ம விதாக்ரேசர்களாலும், ஆத்மோஜ்ஜீவனார்த்த தாரகமே, திரவிடோப நிஷத்தென்று பரமோத்க்ருஷ்டமாய்க் கொண்டாடியுள்ளதாயும், சகல வேதங்களிலும் முற்பட்டதென்றும், கல்பங்கள் தோரும் இதன் ஏற்றங்களையே ப்ரதிபாதிக்கையாலும், இத் திரவிடோபநிஷத்திற்கு வொத்த சாஸ்திரங்களுமில்லை என்றும், இதை யருளிச் செய்த சடகோபருக்கு மேம்பட்ட பரமபுருஷன் எக்கல்பங்களிலும் கிடையாதெனக் கண்டிதமாய் சகலசாஸ்திரங்களாலும் ஆணைபிட்டுரைத்துவிட்டன, குமரகுரு தாஸனேன்பான் அவ்வருளிச் செயல்களையும் அவ...ரயும் நிந்தித்தும், அனார்த்தங்களைச் செய்தும் தமது சுவடியில் வரைந்ததின்காரணம், தான் அவ்வாழ்வாருக்கதிகப்பட்டவனென்றோ யாதுகாரணமோ. ஆழ்வார் பர்வதமாயும் மஹருஷிகள் பரமாணுவாயும் சாஸ்திரங்களால் வாசி கூறியிருக்க இவன்வாசி எவ்வளவுபெரும்! "யாம் படித்த உபநிஷத்துகளிலும்" என்று தன்சுவடியில் பிதற்றினன். ஆனால் பிரரிடம் 108 உபநிஷத்துகளென்றுசொல்ல தெரிந்துக் கொண்டனனே தவிர 10... உபநிஷத்துகளையும் வாசித்தவனாக இவனது சுவடியால் ஏற்ப...வில்லை. ஏனெனில் வேதங்கள் க்ருஷ்ணனைக் கூறுவதால் க்ருஷ்ணனுக்குப் பிறகு அவ்வேதம் ஏற்பட்டதென்றும் ஸ்ரீபாஞ்சராத்திரம் சடகோபரைக் கூறுகையால், அச்சடகோபருக்குப்பிறகு அப்பாஞ்சராத்திரம் ஏற்பட்டதென்றும், தமதுச் சுவடியில் வரைந்தனன் இதனால் இவனது கல்வித்திறமையையும் 108 உபநிஷத்துக்களையும் நன்குணர்ந்தவனென

றும் ஏற்படுகின்றன, விவரிக்குங்கால் இவன் (யாம் படித்த) என்னும் அஹங்கார மந்திரமே பரம்பொருளாய்ப் போற்றி வருகின்றனனென்றும், இவனால் படிக்கப்பட்ட 108 உபநிஷத்து களின் ரசங்களையும், அவை முக்கால நிகழ்ச்சியுள்ளவை யென் னும் ஏற்றங்களையுமுணரா சக்தியற்ற இவன் அவ்வுபநிஷத்துக் களை வாசிப்பதென்றால் பேதைகளும் நம்பாராதலால் (கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதைப்போல சடகோபரையும் திரவி டோபநிஷத்தையும் ஸ்ரீ பாஞ்சராத்ராதி சாஸ்திரங்களும், பிரம்ம வித்துக்களும் கொண்டாடுவர்கள் (முதுகாட்டில் காக்கை யுகக் கும் பிணம்) என்பதைப்போல் இவனையும் இவனதுச் சுவடி களையும் காகத்தை யொத்தப் பாஷண்டப் பண்டார த்ரோகிகளே கொண்டாடுவரே யன்றி சாஸ்த்ரோக்தமர்கள் ஸ்பரிசியாரென் பது திண்ணம்.

8-வது குரூரத்தனமான மூடபுத்தியுடன்

குமரகுரு தாஸனென்பான், ஸ்ரீமத்ராமாநுஜரையும், அவ ரது ஸ்ரீ பாஷ்யத்தையும் நிந்தித்தும் சிற்றறிவைக் கொண்டு பாஷ்யம் செய்தனரென்றும். நீலகண்ட பாஷ்யத்தைப் பார்த் துக்கொண்டே தான் பாஷ்யம் செய்துப் பட்டப்பெயர் பெற்றன ரென்றும் அநந்தமான தூஷணைச் சொற்களால் நிந்தித்துத்தமது சைவசமய சரபமென்னும்; மண்டூகச் சுவடியில் வரைந்தனன்.

நீலகண்ட சிவாச்சாரியும் தாம் 'கல்விப் பெருக் கமையப் பெற்றவரென்னு மேற்றங்களைப் பிறர் மெச்சும்பொருட்டோ அல்லது சிவ அபிமானத்தினாலோ, சூத்திரக்காரர் சாரீரகத் தில் இரண்டாவது ஆத்தியாயம், இரண்டாவது பாதம். பாசுப தாதி காரணத்தில், பத்யுரஸாமஞ்சஸ்யாத்யென்பது முதலான சூத்திரங் களாலே சைவ சமயம் அவைதிக மென்று நிச்சயித் திருக்க தாம் அச்சூத்ரங்களுக்கும் சூத்ரக்காரரான வேதவி

யாச, பராசர, நாரத, வஸிஷ்ட, விஸ்வாமித்ர, சுக, ஜைமினி யாதி பிரம்ம வித்துக்களுக்கும், நேர் விருத்தமாக ஜகத்கார ணத்தை சிவாதி சப்தங்களால் அனர்த்தம் செய்து அச்சைவ சமயம் வைதிக மென்றுத் தமது பாஷ்யத்தில் வரைந்தனர். ஆயினும் ஈஸ, கேன, ப்ரஸ்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்ரிய, சாந்தோக்ய, ப்ரஹ தாரண்ய, ஸ்வேதாச்வதர, ஐதரேய, சுபால நாராயணாதி மஹோப நிஷதங்களிலே ஜகத்காரணம் நாராயண சப்தங்களாலே ஸ்பஷ்டமாய் விளக்கியிருக்க அச்சுருதிகளுக் குத் தம் மதக் கொள்கையை யனுசரித்தே பரமேஸ்வர ப்ரம்ம சப்தங்களாலேத் தமது பாஷ்யத்தில் உரை வரைந்தனர். அதெங்கனே யெனில்,

சாந்தோக்ய உபநிஷத், பிரதம பிரபாடகம் 6-ம் காண்டம்

"நாராயணஸ்ஸரவிஜாஸந்நிவிஷ்ட: கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடிஹாரீ ஹிரண்மய வபுர்த்ருதசங்கசக்ர: தஸ்யயதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ"

என்று ஸ்ரீமந் நாராயணனுடைய லக்ஷணங்களைக் கூறுமிச் சுருதிக்குத் தாம் நாராயண சப்தங்களால் ஜகத்காரணத்தைச் சொல்ல, சைவ அபிமானத்தினால் லஜ்ஜையுடையவனாய்.

ஷை சுருதிக்கு நீலகண்டபாஷ்ய உரை

"கமுதகம் ரச்மிபி: பிபதீதி கபிராதித்ய: தேநாவிதம் விகஸிதம் புண்டரீகம் யதாஸ்புரதி ததாபரவேச்வரஸ்யலோசநத்வயம்"

என்று அச்சுருதி தெளிவாய் நாராயண பரத்தையே விளக்கி யிருக்க, அச்சப்த மாருதலாகத் தமது பாஷ்யத்தில் பரமேஸ் வர சப்தத்தால் உரை வரைந்தனர்.

ஆயினும், "யதா பரமேஸ்வர ஸப்தோயம் நாராயணே பிரதிஷ்டதே" என்றும்,

"பகவாநிதி சப்தோயம், யதாபரமேஸ்வரயித்யபீ நிருபாதி சர்வதேதே வாசுதேவே சநாதநே" என்றும்,

பகவத் சப்தம், பரமேஸ்வர சப்தம், ப்ரஹ்ம சப்தம் முதலான சகல சப்தங்களும் அந்நாராயண னொருவனை யுணர்த்துமே யன்றி மற்ற பாவரையும் கூறினதே யாகாது அவ்வாறு கூறியுள்ளனவாயின் போலியேயாம்.

பர்க்கசப்தத்திற்கு

"பர்கோதேவஸ்ய தீமஹித்யோயோந ப்ரசோதயாத்"

என்னும் பர்கசப்த வாக்யத்திற்கு வஸிஷ்டர் விஸ்வாமித்ரர் தங்கள் வியாகர்ண சூத்திரத்திலும் ஸ்ரீமத் ராமாநுஜர் சங்கரர், மத்வர் வித்யாரண்யர், குண்ணத்தூர் அய்யன் ஸ்வாமி, வைத்யநாதர், க்ருஷ்ணபட்டர், நாராயணசாமி முதலியனரும் தங்கள் பாஷ்யங்களில் பர்க்க சப்தத்திற்குப் பொருள் ஸ்ரீமந் நாராயணனே என்றும், நீலகண்ட சிவாச்சாரித் தமதுபாஷ்யத்தில் பர்க்க சப்தத்திற்குப்பொருள் சிவனென்றும் நேர் விருத்தமாய் உரைவரைந்தனர். இவ்வித விவரங்களை யுணர்ந்தே அப்பையதீக்ஷிதரும் பதஞ்சலிகளருளிச்செய்த மஹாபாஷ்யமும் சேஷாவதாரரான ஸ்ரீமத் ராமாநுஜரது ஸேஷ ஸேஷி பாவனைகளை நன்குயப்பிரித்துக் கூறவல்ல ஸ்ரீ பாஷ்யமுமே யான் சத்தியமான பாஷ்யமென்றுரைப்பேனென்றும், சிஷ்யாசார க்ரமமின்றியும் வேதயதார்த்தமின்றியும், வரைந்துள்ள, பாஸ்கரீயமென்னும் வைஷ்ணவாத்வைதபாஷ்யமும், சங்கரரென்னும் அத்வைத பாஷ்யமும். மத்வரென்னும் த்வைதபாஷ்யமும், நீலகண்டமென்னும் பசுபதிகாரண சைவ பாஷ்யமும், வித்யாரண்ய மென்னும் சமரசபாஷ்யமும் யாம் பாஷ்ய மென்றுரைக்கக் கடவோ மல்லோ மென்றும் வரைந்தனர். இப்பாஷ்யங்களையும் நீலகண்ட சிவாசாரியினது பாஷ்யத்தின் சில பிரிவுகளையும். மயூரந் தாலுகா ஆலங்காட்டில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் வேத வேதாந்த வர்த்தினியென்னும் பாடசாலையில் காணலாம். இத்யாதி காரணங்களால்

நீலகண்ட பாஷ்யம் அப்ரமாண மென்றே மஹோபநிஷத்துக்களால் அடிப்பட்டுப் போயிற்று. மீமாம்ஸகரும் இவரது பாஷ்யத்தைக் காது கொடுத்துக் கேளார் இவ்வாறுள்ள இப்பாஷ்யத்தைப் பார்த்தே **ஸ்ரீமத் ராமாநுஜர்** பாஷ்யம் செய்தன ரென்று குமாரகுரு தாசனென்பான் தமதுச் சுவடியில் வரைந்தனன். இவன் தமதுச் சுவடியை வரையப் பிரச்சுவடிகளைப் பார்த்துக் கிறுவதைப் போல் கருதினனே தவிர இவர்களது பாஷ்யங்களைக் கண்ணால் த்ருஷ்டித்தவனாக ஏற்படவில்லை. அவ்விரு பாஷ்யங்களையுமாராய்ந்திருப்பானாகில் அவைகளி னேற்றங்களை நன்குணர்ந்திருப்பன் அவ்வளவு கூர்மைவாய்ந்த அறிவுத் தமக்கில்லையாயினும் தாம் தூஷண நிந்தைகளைப் பிதற்றகற்றனாத லாலவைகளி னேற்றங்களின் சிலவற்றை கீழ்விவரிக்கிறோம்.

யஜுர்வேதத்தில், வராகோபநிஷத் ஜீவன்முக்தி லக்ஷணத்தில்

"யஸ்மஸ்தார்தஜாலேஷு வியவஹார்யபிலீதள:
பரார்தேஸ்வீவாபூர்ணாத்மா ஸஜீவன்முக்த உச்சயதே"

என்று ரிபு மஹாருஷியினிடம் வராகமூர்த்தி தமது க்ருபையால் கடாக்ஷித்து ஓ! முனியே எப்பொழுது சித்தத்திலுள்ள சகல கருமங்களையும்விட்டு ஜெகஜ்ஜன்மாதிகாரணபூதனை என்னையே உபாயோபேயமாகப் பற்றுகிறானோ அப்பொழுது தானவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுமென வெளியிட்டபடியாலும்.

யஜுர்வேதம் இராமோபநிஷத்

"பக்த்யா மந்த்ரேணநேக மாம்சிவ ப்ரஹ்மஹத்யாதி
பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச :"

என்று இராமதாரக மந்த்ரங்களாலே பக்தியுடன் தியானிக்கு முன்னை பிரஹ்ம ஹத்யாதி பாபங்களினின்றும் விடுவித்து க்ரம க்ரமாந்திரத்தில் என் சாயுஜ்யத்தைக் கொடுக்கிறேனென்று தமது பரம க்ருபையை வெளியிடுகையாலும்.

பகவத்கீதை

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம்விரஜ
அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுசா"

என்று அர்ஜுனா! சகல கருமங்களையும் அடியோடொழித்து அநந்தகோடி யண்டங்களுக்கும் நிர்வாஹனான என்னையே சரணமாக அடைவாயாக உன்னை சகல பாபங்களினின்றும் விடுவித்து என் சாயுஜ்யமாகிய பரம பதத்தைக் கொடுக்கிறேன். பயப்படாதே என்று ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா கீதையில் வெளியிட்ட படியாலும்,

இத்யாதி வராஹமூர்த்தி, ரிபுசம்வாதத்தால் வராகோபநிஷத்தும், ஸ்ரீராமபிரான் சிவன் சம்வாதத்தால் ராமோபநிஷத்தும், ஸ்ரீக்ருஷ்ணன், அர்ஜுன சம்வாதத்தால், கீதோபநிஷத்தும், ஆக இம்மூன்று சரமசுலோகங்களின் ரசங்களையும் அவைகளின் அங்கோபாங்கங்களான நியமங்களையுமே ஸ்ரீமத்ராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யத்தில் வெளியிட்டனர்,

தைத்திரீயோபநிஷத்

"ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி:
நராணம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணேபக்தி: ப்ரஜாயதே"

என்கிறபடியே பஹுதர ஜந்மங்களாக, அவித்தையாதி அஞ்ஞாந கருமஹோமாதிகளைச்செய்தே அநந்தமான ஜீவாத்மாக்கள் க்ஷீணதசையாகிய ஜனனமரணங்களை யடைவதால், அவித்தையாதி கருமங்களை முற்றும்விட்டு ஸ்ரீமந்நாராயணனையே உபாயோபேயமாக அடையும்பொருட்டே நியந்த்ருநியாம்ய பாவம், ஆதார ஆதேயபாவம், ஸேஷ ஸேஷி பாவமாகிற இம்மூன்று பாவங்களை அடைந்தே பரமபதசாயுஜ்யத்தைப் பெறவேணுமென்று மிச்சுருதி கூறுகையாலும், சுருதி, ஸ்ம்ருதி, சூத்ர, மீமாம்ஸா, பகவத்சாஸ்த்ராதிகளின் ரசங்களைத்திரட்டின

பரமபுருஷார்த்தத்தையே ஸ்ரீமத் ராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்தனர்.

ஸ்ரீமத் ராமாநுஜரது ஸ்ரீபாஷ்யம்

" தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வேஹ்யாத்மாந பரமாத்மந:
நாந்யதாலக்ஷணம் தேஷாம் பந்தேமோக்ஷததைவச"

என்று ஒருவனுக்கு க்ருஹக்ஷேத்ராதிகளும், ஸேஷமாய் ஸ்வசரீரமும், ஸேஷமாயிருக்கச் செய்தே, க்ருஹ க்ஷேத்ராதிகள் ப்ருதக்ஸித்யாதிகளுக்கு அர்ஹமாய், ஸரீரம் அவற்றிற்கு அநர்ஹமாயிருக்கக் காண்கையாலே, இவ்வாத்மாவானது ஈஸ்வரனுக்கு சேஷமா மென்னுமிடம் தட்டில்லையென்க,

" பரகதாதிஸயாதாநேச்சயோ பாதேயத்வமேவயஸ்
யஸ்வரூபம், ஸஸேஷ: பரஸ்ஸேஷி" என்றும்,

" இச்சயாயதுபாதேயம் யஸ்யாதிஸயவித்தயே உபயாநு
பயைகைகஜுஷாதௌ ஸேஷஸேஷிணௌ" என்றும்,

" அயமேவாத்ம ஸரீரபாவ: ப்ருதக்விதத்யநர்ஹா
தாராதேயபாவ: நியந்த்ருநியாம்யபாவ: ஸேஷஸேஷிபாவஸ்ச"

என்று ஸ்ரீமந்நாராயணனுக்கும், ஜீவாத்மாக்களுக்குமுள்ள நியந்த்ரு நியாம்யபாவம், ஆதார ஆதேயபாவம், ஸேஷ ஸேஷி பாவமாகிற சம்மந்தங்களால் ஜீவாத்மாக்களுர்ஜ்ஜீவிக்கவேணு மென்றும் அனாதியான இச்சம்மந்தங்களைக்கொண்டே உர்ஜ்ஜீவிப்பிக்கச் செய்கிறுனுகையால் ஸ்ரீமந்நாராயணனே ஜீவோத்பதி என்றும் தமது ஸ்ரீபாஷ்யத்தில் தெளிவாய் நிரூபித்தனர்.

ஸ்ரீ பாஷ்யம்

" யதேஷ்டவிநியோகார்ஹம் ஸேஷஸப்தே நகத்யதே
ஈஸ்வரேண ஜகத்சர்வம யதேஷ்டம் விநியுஜ்யதே"

என்று ஸேஷசப்தப் பொருள்களாகிய பிரம்மாதி பிபீலிகாந்தமுள்ள சகல சேதனுசேதனங்களும் ஸேஷிசப்தப் பிரதிபாத்யனை ஸ்ரீமந்நாராயணனுக்கு இஷ்ட விநியோஹார்ஹமென்று

ஸ்ரீபாஷ்யத்தில் மற்றயாவையும் கண்டித்துரைத்து விட்டனரிறே எதிகட்கிறைவனான எம்பிராமாநுஜன்,

பிரம்மாண்டபுராணம்

" மந்நியோகாத் பூதபுர்யாம் அஹீநாமீச்வர: கலௌ
ஸ்ரீ ராமாநுஜரூபேண ஜநிஷ்யதி ஸதாம்முதே"

என்று ஸ்ரீபத்ரிகாஸ்ரமத்திலே நாராயணனுக்கும் நரனுக்கும் நடந்த சம்வாதத்தில், ஓ நரா! என்னுடைய நியோகத்தால் ஸ்ரீ பெரும்பூதூரில் ஸர்பங்களுக்கெல்லாம் ராஜனான திருவநந்த ஆழ்வான் கலியுகத்தில் ஸ்ரீமத்ராமாநுஜரென்ற ரூபத்தாலே லோக உஜ்ஜீவனார்த்தமாக அவதரிக்கப் போகின்றாரென்று திருவாய் மலர்ந்தருளினராதலாலும்,

ஸ்ரீபாஞ்சராத்ரம்

" அநந்த: ப்ரதமம்ரூபம் லக்ஷ்மணச்சதத: பரம்"

என்று அநந்தனுடைய 4-வது அவதாரமே கலியுகத்தில் ஸ்ரீமத் ராமாநுஜ ரென்னுமோரவதார முண்டென்று கூறுகையாலும்,

தாடீபஞ்சகம்

" பாஷண்டத்ருமஷண்டதாவதஹநச் சார்வாக சைலாசநி:
பௌத்தத்வாந்த நிராஸவாஸரபதிர் ஜைநேபகண்டீரவ:
மாயாவாதி புஜங்கபங்ககருடஸ் த்ரைவித்ய சூடாமணி:
ஸ்ரீரங்கேச ஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம்முநி:"

" பாஷண்ட ஷண்ட கிரிகண்டந வஜ்ரதண்டா:
ப்ரச்ந்ந பௌத்த மகராலய மந்ததண்டா:
வேதாந்தஸார ஸுகதர்சந தீபதண்டா:
ராமாநுஜஸ்ய விலஸந்தி முநேஸ்த்ரிதண்டா:

என்கிறபடி அடர்ந்த ஆரண்யங்களைப்போன்ற வேதங்களின் ரசங்களையேத்திரட்டி ஸ்ரீபாஷ்யமாயும், இவ்வுலகிலுள்ள சாக்ய, உலூக்ய, அக்ஷபாத, க்ஷபண, கபில, பதஞ்சலிகளாகிய பாஹ்ய சமயங்களையும், சைவ, மாயாவாத, ந்யாய, வைசேஷிக, பாட்

டப்ரபாகராதிகளாகிய குத்ருஷ்டி சமயங்களையும், அடியோ டருத்தெரிந்துத் தமது சுத்த சத்வகுண விஸிஷ்டாத்வைத மதமே மிஸ்ரவைதிக வைதிகமதங்களில் சிறந்த பரமவைதிக மதமென திக்விஜயம் செய்து ஸ்தாபித்து த்ரிதண்டம் தரித்த வனிறே எதிராஜன்.

யதிராஜவிம்சதி

" ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயநித்யஸேவா ப்ரேமாவிலாசய
பராங்குசபாதபக்தம் காமாதிதோஷஹரமாத்மபதாச்ரிதாநாம்
ராமாநுஜஸ்யதிபதிம் ப்ரணமாமிமூர்த்நா"

என்று இப்பிரபஞ்ச முழுமையும் பேரின்பவெள்ளமான பரம பதத்தை பிரம்மா முதல், பிபீலிகாநந்தமுள்ள யாவும் கருத வல்ல ஞானங்களை ஊட்டிவளர்த்த எம்பிராமாநுஜனை, எதிகட் கிறைவனை தியானிக்கிறேனென்றும்,

" தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்ச்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் எம் இராமாநுசமுனி போர்ந்தபின்னே" என்றும்,

" பண்தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்களிராமாநுசமுனி வேழம் மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே" என்றும்,

" வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணிபெற்றது தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லரம்பதித்த குணத்தினற்கு
அந்நாழற்றது நம் இராமாநுஜன் தந்த ஞானத்திலே" என்றும்,

" சாருவாகமதம் நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக்கடலை வற்றுவித்துமிகு சாங்கியக்கிரி முறித்திட
மாறுசெய்திடு கணுதவாதியர்கள் வாய்தகர்த் தறமிகுத்துமேல்
வந்தபாசுபதர் சிந்தியோடும்வகை வாதுசெய்த எதிராஜனுர்" என்றும்

" எதிராஜோத் ஜகத்குரு" என்றும்,
" ராமாநுஜோ சதுரா சதுராக்ஷரி" என்றும்,
" ராமாநுஜாய நம:" என்றும்,

இத்யாதி அளவிறந்த ஏற்றங்களையுடையவராயும், இவ்வுலகமுதல் பரமபதம்வரை, ஸ்வாதீன முள்ளவராயும், மோக்ஷவதிகாரி யானாலும், இவரது கடாக்ஷம் பெற்றே மோக்ஷமடைய வேண்டியதாலும், ஸர்வாந்தர்யாமியாயும், ஸர்வேஸ்வரனுயும், ஸர்வ வேத ப்ரதிபாத்யனுயும், விளங்காநின்ற ஸ்ரீமந் நாராயணனல் சாக்ஷாத்கரித்துப் பட்டங்கட்டிய ஸர்வலோக ஸரண்ணியனுயும் விளங்கா நின்றுனிறே எம்பிராமாநுஜன் இவரது ஸ்ரீபாஷ்யத்தை ஏளனம் செய்தும், நீலகண்ட பாஷ்யத்தைப்பார்த்தே இவர் பாஷ்யம் செய்தனரென்றும் குமரகுருதாசனென்பான் வரைந்தனன், ஸ்ரீபாஷ்யத்திலுள்ள ஜகத்காரணத்வமும், ஸேஷ ஸேஷி, ஆதார ஆதேயமுதலான சப்தப்ரயோகம் இரண்டுமொக்க ஓரக்ஷரமாவது ஆதாரம் நீலகண்ட பாஷ்யத்தில் பிரயோஹமும் கிடையாதிருக்க இவன் சொற்கற்ற சோம்பனுதலால் தாறுமாருகப் பிதற்றினன். நீலகண்ட பாஷ்யம் கிடைக்கவில்லை என்றும், அக்காலத்திலேயே ராமாநுஜர் வேண்டிய த்ரவ்யங்களைச் செலவிட்டு அப்பாஷ்யங்களைத் தருவித்துத் தீக்கிரையாக்கினரென்றும் தமதுச் சுவடியில் கீறினன் இவனது இவ்வாபாசப் பிதற்றலை இவனைப்போன்ற சூனியவாதனேப்புகழ்ந்து ராமாநுஜரது சகல வேற்றங்களையும் குறைத்து அவ்வேற்றங்களை இவனுக்குப் பொருந்தச் செய்துச் சரித்திர முதலானகவிகளை வரைந்துப் போற்றுவர்களென்னும் பேராசையால் வரைந்த இவனது பேரவாவையும் இவனதுச் சுவடிகளையும் எமது மத்தகஜம் போன்ற ப்ரசண்ட வாதக்கண்டனங்களால் துவைத்தனம்.

குமரகுருதாசனேன்போனத 9-வது புரட்டின் கண்டனமும், யதார்த்த ஸ்தாபனமும்

சைவ புராணம் ஸூதசம்ஹிதையால், ஸ்ரீ வைஷ்ணவர்கள்

தரிக்கும் சக்ராங்கிதம் அவைதிக மென்பதான நிந்தைகளைத் தமது சுவடியில் வரைந்தனன்.

ஆயினும் சைவ புராணங்கள் தாமச புராணங்க ளாதலால் நரக ஹேதுக்களென்று மாத்ஸ்ய புராணம் 54-வது அத்தியாயத்தில் கண்டிக்கப்பட்டிருக்கையால் அச் சூதசம்ஹிதையும் கண்டிக்கப் பட்டவையே.

வேதங்களில் பூர்வ பாகத்தில் கருமங்களைக் கூறுகையால் அவைகளை அவித்தை எனவும், அர்த்தகாம குரூர வசனமெனவும் அவ்வேத உத்ரபாகமே கண்டிக்கப் படுகையாலும்,

விஷ்ணுஸ்ம்ருதி

"யதாச்மசாநகங்காவஷ்டமநர்ஹம் ஸர்வகர்மஸு; சங்க
சக்ராத்யங்கநம் சந்ருதய கீதாதிகம்ததா"

என்று ஞான ஹீனத்தால் அவித்தையாகிய யஜ்ஞாதி கருமங்களை அநுஷ்டிக்கும் கேவல கருமிகள் சக்ராங்கிதம் செய்துகொள்ளக் கூடாதென்று கண்டிக்கையாலும்,

ஸ்ரீமந்நாராயணனையே உபயோபேயமென்று சரணாகதியடையுமவர்களான பிரம்மவித்துக்களே சக்ராங்கிதம் செய்யக்கடவர்களென்றும் கடவல்லி கடகமென்னும் சுருதிகள் கூறுகையாலும்,

ருக்வேதம் 7-வது அஷ்டகம், 4 ம் அத்தியாயம் 8-ம் வர்க்கத்தில்

"பவித்ரந் தேவிததம் ப்ரஹ்மணஸ்பதே ப்ரபுர்காத்
ராணிபர்வேஷி விச்வத: அதப்ததநுர்நதாமோ
அச்நுதே தஸத்வஹம் தீயக்தழாநத:"

என்று தப்த சக்ராங்கிதமில்லாத சரீரம் பிணத்தை யொத்ததென்றும் சக்ராங்கிதம் தரித்த பிரம்ம வித்துக்கள் அச்சரீரத்தை த்ருஷ்டிக்கவும் கூடாதென கூறுகையாலும்,

மயித்ராவருணசாகையில்

"ஸாமவேதே ப்ரதிபாத்யதே ததாஹி பவித்ரமித்யக்நி:
அக்நிர்வைஸஹஸ்ரார: ஸஹஸ்ராரோநேமி: நேமிநாதப்ததநூ:
ப்ரஹ்மணஸ் ஸாயுஜ்யம் ஸலோகதாமாப்நோதி"

என்று அவித்தையாகிய கருமங்களை அடியோடொழித்தவராய் மோக்ஷத்தை ஆஸ்ரயிக்குமவர்களான சமஸ்த தேவர்களும் மநுஷ்யாதி ப்ரம்ம விதாக்ரேசர்களும் அக்னியில் தப்தமான சக்ராங்கிதம் தரிக்கக் கடவர்களென்றும்,

பரமோபநிஷத்

"நேமிநாதப்ததநு: ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம் ஸலோகதாமாப்நோதி"

என்று அக்னியில் தப்தமான சக்ராங்கிதத்தோடு கூடின சரீரத்தையுடைய பிரம்ம வித்துக்கள் பரமபதத்தை யடைகிறார்களென்றும்.

அதர்வண மஹோபநிஷத் பிரம்ம சூக்தத்தில்

"தக்ஷிணேது புஜேவிப்ரோ பிப்ருயாத்வைஸுதர்சனம்
ஸவ்யேதுசங்கம் பிப்ருயாதிதி ப்ரஹ்மவிதோவிது:

என்று முமுக்ஷுவானவன் வலது புஜத்தில் சுதர்சன மென்னும் சங்கத்தையும், இடது புஜத்தில் பாஞ்சிய சங்யமென்னும் சங்கத்தையும் தரிக்கக் கடவர்களென்று பிரம்மவித்துக்களறிவர்களென்று மிச்சுருதி நிரூபிக்கையாலும்,

மஹோபநிஷத் 4வது காண்டத்தில்

"தேவாஸோயேநவித்ருதேந பாஹுநா ஸுதர்சநேந ப்ரயாதம்
ஸ்வர்க்கமாயாந்தி தாமலோகவிஸ்ருஷ்டவீ தஸ்வயந்திப்ரஹ்ம
ணேளவேஸ்ஸர்வாவம்ஸர்வைதேவதாநாம், ஸர்வாவைவிப்ராணும்
ஸர்வாவை க்ஷத்ரியாணும் ஸர்வாவை வைச்யாநாம், சூத்ராணு
மித்யக்நிநாவைஹோத்ரா, தந்தம் சக்ரம் த்விபுஜேதார்யேதோர்த்வ
புண்ட்ரமாலிகேத் தஸ்மாத்விரேகம் பவதிபு நராகமநந்த
சேதி ப்ரஹ்மணஸ் ஸாயுஜ்யம் ஸலோகதாமாப்நோதி"

என்று பிரம்ம ருத்ரர்கள்முதல் சமஸ்த தேவர்களும், சமஸ்த பிராம்மணர்களும், சமஸ்த க்ஷத்திரியர்களும், சமஸ்த வைசியர்களும், சமஸ்த சூத்திரர்களும், அக்னியில் தப்தம் பண்ணின சக்ராங்கிதத்தை இரண்டு புஜங்களிலும் தரிக்கக் கடவர்க

ளென்றும் இடைவெளியோடு கூடின ஊர்த்வ புண்டரங்களை யும் தரிக்கக் கடவர்க ளென்றும், இவ்வநுஷ்டான முள்ள தேவர்கள் முதல் மநுஷ்யர்வரையிலும் பரமபத மென்னும் சாம்ராஜ்யத்தைப் பெறுவர்க ளென்றும் பிரம்மாவினுடைய சத்யலோகம் போலேயும், சிவனுடைய கைலாயம் போலேயும் மீண்டும் பிரப்பதில்லை என்றும், ருக்வேதம் வர்கசங்கிதை யிலும், யஜுர்வேதம் முதல் பிரசனத்திலும் சாமவேதம் 6-வது அத்தியாயத்திலும், சுக்ல யஜுர் வேதம் பிரஹ தாரணயோபநிஷத்திலும் கடவல்லிலும், கடகமென்கிற சுருதி யிலும், ஸ்பஷ்டமாய் காணலாம்.

"ஸக்ராதிதாரணம் பும்சாம் பரசம்மந்தநிவேதனம்
பதிவ்ரதாநிமித்தம்ஹி வளையாதிபூஷணம்"

இத்யாதி அநந்தப்ரமாணங்களாலும் முமுக்ஷுவான பரமபுரு ஷார்தத்தை பெருவதற்கே சக்ராங்கிதம் பிரதானச் சின்னமாகக் கூறு நிற்க குமரகுருதாசனென்பான் சக்ராங்கிதம் தரிப்பது அவைதிகமென்றும், தரித்தவரைத் தரிசிக்கவும் கூடாதெனவும் சில தாமச புராணவசனங்களாலும், கேவல கருமத்தை விவரிக்க வல்ல சிற்சில ஆபாசவசனங்களாலும் தமது **சைவசமய சரப மென்னும் பாஷண்டச் சுவடியில் கிறியுள்ளானுயினும்,** விவரிக் குங்கால் இவனது அறியாத்தனத்தைக் கருதவு மிடந்தரவில்லை யிவனது தூஷண நிந்தைகள். பெரியபுராண மென்று சொல்லு **கின்றதில், அப்பரேன்பான் பூதங்களாலிரண்டு புஜத்தினும் சூடேண்டதை யறியான்போலும்** இவ்வாறுன இவனது சமயத் தையே நன்குணர சக்தியற்று வீண்புரளிகளையும், குருட்டு யுக்தி களையும் புத்தகரூபமாய் வரைந்துத்திரியும் கேவல கரும பாஷண்டனுகிய இவனதுப் பிதற்றலானச் சுவடிகளை ஸர்வவேத வேதாந்தங்களின் யதார்த்தங்களாலும் பிரதிபாதியா நின்றுள்ள எமது சுதர்சனமென்னும் திருவாழியால் நிரஸித்தனம்,

10-வது புரட்டான நிந்தைகளின் எமது யதார்த்தக்கண்டன ஸ்தாபனம்.

குமாரகுருதாசனென்போன், ஸ்ரீவைஷ்ணவர்கள் தரிக்கும் ஊர்த்வபுண்டரம் அவைதிகமென்றும், மூதேவி புண்டரதாரிகளென்றும், அனேகக்குரூர அஹங்கார நிந்தைகளால் தூஷித்தும், தமது பஸ்மதாரணமே வைதிகமென்றும், சிற்சில ஆபாச ஏற்றங்களைக் கூறியும் தமதுச்சுவடியில் உளரினன்,

மைத்ராயணீ உபநிஷத் 7-வது பிரபாடகம்

"தூரமேதே விபரீதே விஷூசி அவித்யாயாசா வித்யேதி க்யாதா வித்யாபிப்ஸிதம் நசிகேதாஸம் மண்யேநாத்வா காமாபஹுலோலுபந்தே வித்யாஞ்சவித்யா சயஸ்துவாதோதோபயம் லஹ அவித்யாயாம்ருதீயூர்தீத்வா வித்யா அமுததஅஸ்னு தே அவித்யாயாமந்ரே வேஷ்ட்யமானாஹ ஸ்வயம்தீராஹா பண்டிதம்மந்யமாநாஹ தந்ரம்யமாணாஹ பரியந்தி மூடா அந்தேதேவநீயமாநாயதாந்தா"

என்று இச்சுருதி கூறுவதாவது வித்தை அவித்தை இவ்விரண்டிற்கும் பரஸ்பர விரோதமுள்ளது ஒன்றுக்கொன்று வெகுதூர பேதமுண்டு வேதத்தில் பூர்வபாகத்திற்கு (அவித்தை) கரும காண்டமென்று சொல்லப்படுமாகையால், பிரம்மாவை அசுரர்கள் தங்களுக்கு ஜீவன் முக்திநிலையை உபதேசிக்க வேண்டுமென்று பிரார்திக்க, பிரம்மதேவரானவர், பரமபாவனமான ஜீவன் முக்தியைப்பற்றித்தாமஸ அசுரர்களுக்கு உபதேசித்தல் கூடாதெனக்கருதி வேதத்தில் அவித்தையாகிய கரும காண்டத்தை உபதேசித்தனர் அவையாவது யஜ்ஞாதி நித்ய, நைமித்ய கருமங்களையும், அவ்வவ்யஜ்ஞாதிகளுக்குத்தக்க தேவதைகளையும், அவைகளைப்பற்றிய மந்த்ரங்களையும், தத்கருமங்களின் பலன்களையும், விளக்கினர் இவ்வாறு பிரம்மனால் போதிக்கப்பட்ட அவித்தையாகிய கரும காண்டமே யஜ்ஞயங்களின் கௌரவத்தையும், அவ்வெஜ்ஞ

பஸ்மகௌரவத்தையும், கூறுகையாலே இப்ரமாணம் அசுரர்களை மோஹிக்கும்படி செய்யப்பட்ட மோசப்ரமாணமேயாம், இதைக்கற்ற சோம்பரும், சூனியவாதருமான பாஷண்டர்கள், ஞான காண்டத்தில் விவரிக்கவல்ல சர்வேஸ்வரனை உபாசிக்கும் மார்க்கமாகிய சாங்கியயோகம், நிஷ்காம கருமயோகம், தபசு, ஸகுண நிர்குணப்ரஹ்மோபாசனுவிதி, ஆத்மலக்ஷணமும் இவைகளுக்கு அங்கோபாங்கமான விஷயங்களையும் ஸ்வவிஷயத்திற்கு வேண்டிய சின்னங்களான ஊர்த்வ புண்டராதி சக்ராங்கிதங்களையும் நிந்திக்கும் மூடர்கள் தாங்களே ஞானிகளென்றும், பண்டிதர்களென்றும், தங்கள் சமயமே வைதிகமென்றும், கண்டபடி பிதற்றியும், புத்தகரூபமாய் வரைந்தும் குருடனுக்குக்குருடன் வழிக்காட்டுமாப்போலேயும் மானைக்காட்டி மானைப்பிடிப்பாரைப் போலேயும், கேவலகருமிகளாகிய இவ்வஸுரர்கள் இவ்வுலகைப்ரமிக்கச் செய்து நாநாவித ஜனன மரணங்களுக்குள்ளாகிறார்களென்று மிச்சுருதியும், கடோபநிஷத்தும், ஈசாவாஸ்யம், ஸ்வேதாஸ்வதரம், பிரஹதாரண்யம், பஞ்ஜதசோபநிஷத்துக்களிலும் கூறுகையால் அப்பஸ்மத்தை புகழுவதும் ஊர்த்வ புண்டராதிகளை நிந்திப்பதுமான **சைவசமயம் அவைதிக மென்றே** சூத்ரக்காரர் "ஸாரீரகத்தில்" இரண்டாவது அத்யாயத்தில், இரண்டாவது பாதத்தில், பாசுபதாதிகாரணத்தில், பத்யுரஸாமஞ்சஸ்யாத் என்பது முதலான சூத்ரங்களாலே நிச்சயித்தருளினர் மீமாம்ஸகர் கோஷ்டிகளின் ப்ரதமாசாரியரான **ஸ்ரீமத்ராமாநுஜாசாரியரும்**, சங்கரரும், மத்வர் முதலான பாஷ்யக்காரர்கள், அச்சூத்ரக்காரர் திருவுள்ளத்தையனுசரித்தே **சைவசமயம் அவைதிக** மென்றே நிச்சயித்தார்கள் இத்தால் அவித்தையாகிய கருமகாண்டத்தில் விவரிக்கும் பஸ்மதாரணம் செய்யும் **சைவசமயம் அவைதிக** மென்று நிரூபிக்கப்பட்டது.

கௌதம தர்மசாஸ்த்ரம் 9-ம் அத்தியாயம்

"நபஸ்மகேசதுஷகரீஷகபாலாமேத்யாங்யதிதிஷ்டேத்"

என்றதில் அவைதிகரான சைவர்கள் தரிக்கவல்ல பஸ்மத்தையும், மயிரையும், உமியையும், (எரு) சாணசாம்பலாதிகளையும், (ஓடு) எலும்பாதி ஓடுகளையும், (அமேத்யம்) மலத்தையும் இவைகளைத் தீண்டேல் என்றும், தீண்டில் இத்தர்ம சாஸ்திரத்தில் கூறியுள்ள பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதென்றும், அப்பஸ்ம தாரணத்தை மலத்திற் கீடாகக் கூறுகையாலும் பஸ்மகௌரவமும் அமேத்யகௌரவமுமொன்றே என்றுணரக்கடவீர்.

ஊர்த்வபுண்டரமோவெனில்

அதர்வண நாரத பரிவியாஜோகோபநிஷத்தில்

"குடிச: சிஹ யெங்யோபவிதா தண்டகமண்டுலாதா: கௌபீணகந்தாதரா: பத்ருமாத்ரகுரு ஆராதனபர: பிடாகதி திருசக்யாதிமங்ரஸ்தனபரயேகத்ராநாதபர: ஸ்வேதோ ஊர்த்வபுண்டாதாரித்ரிதண்ட:"

என்று குடிசகன் என்ற விஸிஷ்டாத்வைத சங்நியாசி சிறுகுடிமை யுடையவனாய், கௌபீனத்துடன் ஒரு கந்தை வஸ்திரத்தை யுடையவனாய், ஞானனுஷ்டான முடைய குருவை ஆராதிக்குமவனாய், த்வய, திரு மந்த்ராதிகளை யிடைவிடாது தியானிக்குமவனாய், சிவந்த ஸ்ரீ சூரணமும் வெண்மைத் திருமண்ணும் தரிக்க வல்லவனாய், மூவட முடைய திருதண்ட தாரியாகவிறே விஸிஷ்டாத்வைத சங்யாசி யிருப்பதென்றும் இச்சுறுதி கூறுகையாலும்,

ஸாமவேதம் ஸந்நியாசோபநிஷத்

"ச்வேதோர்த்வபுண்டரதாரீ த்ரிதண்ட:"

என்று சிவந்த ஸ்ரீ சூரணமும், வெண்மைத் திருமண்ணும், சந்நியாசி தரிக்கக்கடவ னென்று விதித்திருக்கையாலும்.

சுக்லயஜுர் துரியாதீத அவதூதோபநிஷத்

"க்ஷௌராப்யங்கஸ்நாநோர்த்வபுண்ட்ராதிகம்" என்றும்,

ஸாமவேதம் வாஸுதேவோபநிஷத்

"விஷ்ணு ஸ்த்ரீணிபதேநி மந்த்ரைர் வைஷ்ணவ காயத்ர்யா ப்ராணவே
நோத்தூளநம்குர்யத் எவம்விதிநாகோபீசந்தநஞ்சதாரயேத்"

என்று விப்ரநாகிலும் எதியாகிலும், ஊர்த்வ புண்டரமணிந்து ப்ரணவத்தோடே ஸ்ரீ மஹாவிஷ்ணு காயத்ரி மந்த்ரத்தை தியாநிக்கவேண்டுமென்று திட்டம் கூறுகையாலும்,

அதர்வணம் மஹோபநிஷத்தில் 4-வது காண்டத்தில்

"தப்தம் சக்ரம் த்விபுஜேதார்யே தோர்த்வபுண்ட்ரமாலிகேத்
தஸ்மாத் விரேகம் பவதிபு நராநமகந்ந சேதி ப்ரஹ்மஸ்ஸாயுஜ்யம்
ஸலோகதாமாப்நோதி"

என்று சமஸ்த தேவர்களும், மநுஷ்யர்களும், அக்னியிலே தப்தமான சக்ராங்கிதத்தை இரண்டு புஜங்களிலும் தரித்து இடைவெளியோடு கூடின ஊர்த்வபுண்டர மணிபக் கடவர்களென்றும் இவ்வனுஷ்டான முள்ள தேவர்கள் முதல் மநுஷ்யர்கள் வரை பரமபதமென்னும் மஹா சாயுஜ்யத்தை யடைகிறார்களென்று பிச்சுருதியில் நிரூபிக்கையாலும்,

ஸாமவேதம் காத்ராயணோபநிஷத்

"தியாநித்யா ஊர்த்வந் புண்டாம் பிப்ருயாத்மந்ரை கேசவாதீனும்
தத்ரஹிதம் கர்மவிபலம் ரக்ஷாம்விக்ரஹிர்நயம் ததேவமப்யு: கிதம்
பவதி நாசாதிகேசந்தமூர்த்வந் புண்ரம் விஷ்ஷோதி தஸ்யசரணத்
வாயாக்ருக்: ஏகாங்குலம் பாதம்தரோதஸ்யமூலம் தஸ்துபங்நேத்வே
ஷஸகேததைவஸம்யாவா காசோதுவீரம் குலாதந்யுநம்ஸம்
ஸ்ரீ ப்ரதிஷ்டாயைத்ராயதோ ஹரிம்"

என்று ஸ்ரீமந் நாராயணனே உபாயோபேயமாயாஸ்ரயிக்குமவர்களணியும் ஊர்த்வ புண்டரத்தை ருக், யஜுர், சாமவேதங்களில் விதிக்கப்பட்ட கேசவாதி பன்னிரண்டு மந்த்ரங்களாலே யணியவேண்டுமென்றும், அவர்கள் சகல கருமங்களிலும் விபலமாகத் தட்டில்லை என்றும், அவ்வூர்த்தவ புண்டரம் நாசாதி கேசாந்த மணியக்கடவ தென்றும், அவை செந்தாமரை மல

ரின்மேல் ஸ்ரீ ஹரியை ப்ரதிஷ்டிப்பதுபோல் லலாடத்தில் தரிக்கக்கடவ னென்று மிச்சுருதி விதித்திருக்க, கேவல அவித்தை யாகிய கருமத்தை யனுஷ்டிப்ப வரும் க்ராதகரும், (ஈஸ்வரசர்வ பூதாநாம் ஹித்யே சோ்ஜனுஷ்டதி) என்னுமர்த்தமரியாத வரும், (ஈஸ்வர சர்வபூதாநாம் பிரஹ்மாதி பதிர்ப்ரஹ்ணோதி பதிர்) என்று தைத்ராவர்ண சாகை, நாராயணுதி சுருதிப்ரமாண மரியாதவரும், "ஈஸ்வரசரீர பூதங்களான சேதனு சேதனங்களோடே ராகத்வேஷம் நடையாடிற்ருகில் நாரசப்தார்த்தம் நெஞ்சில் பட்டதில்லை யாகக் கடவது" என்பது முதலான தாத்பர்யங்கள் முற்றிலுமரியாதச் சண்டாளர்கள் வேதங்களால் ப்ரதிபாதியாநின்ற சுத்தசத்வப் பரமவைதிக விஸிஷ்டாத்வைதத்திற்கு குத்ருஷ்டியாக தேன்ஞசாரியப்ரபாவ கண்டன மென்னும் புத்தகத்தை வரைந்து அதில் கற்பனே காத்ராயணேப நிஷத்தென்று பிதற்றி யுள்ளாராயினும் ஒரு சிறு பதத்திற்கே தாத்பர்யமறிய சக்தியற்றவர்கள் தாம் இவ்வாறு சுருதிஸ்ம்ருதியாதிகளை நிந்தை கூறுவது 1000 சாகைகளையுடைய சாமவேதத்தில் காத்ராயண சாகையென்று பிரம்மனுல் காத்ராயணருக்குப் போதிக்கப் பட்ட சுருதிக்குக் காத்தராயண சாகையென்றும், அக்காத்ராயணர் யதார்த்தத்தால் வெளியிட்டதே காத்ராயண ஸ்ம்ருதி என்றும் விளங்கியதை யரியார் போலும் எப்படிப் பட்டவையுாயினும் தமது மனதிற் கிசைத்தவாறு நிந்தை கூறுவதே தொழிலாய்த் திரியுமித் திரோகிகளினது நிந்தையையே ஆதாரமாய்க் கொண்டு குமரகுருதாசனென் போனும் தமது பாஷண்டச் சுவடியில் கற்பனே காத்ராயணேப நிஷத்தென்று வரைந்துள்ளான் இவனுமிவ்வுபநிஷத்தை யரியாஞதலால் யான் படித்த 108 உபநிஷத்து 18 ஸ்ம்ருதி 18 புராணங்களிலு மென்றும் தானே சகல ஸாத்ர நிபுண

னென்பதாகத் தன்னைத் தானே வீண் டம்பங்களால் புகழா நின்று வேதயதார்த்தங்களை யறியாதவனாய் வீண் புரளிகளைக் கல்பித்துத் திரிகின்றனன்,

ஸ்ரீ பாஞ்சராத்ரம் பாராசரசம்ஹிதை

"விஷ்ணவர்ப்பிதம் ரக்தவர்ணம் ஹரித்ராசூர்ண முக்தமம்
லக்ஷ்மீ நிவாஸ வித்யர்த்தம் தீபாகாரந்து சூக்ஷ்மகம்
ஊர்த்வபுண்டரஸ்ய மத்யேது லலாடே தாரயேத்விஜ:"

என்று ஏப்ராஹ்மண ஸ்ரீமந் நாராயணனுக்கு சமர்ப்பித்ததாய்ச் சிவந்த நிறமுள்ள உயர்ந்த ஸ்ரீ சூரணத்தைப் பிராட்டி நிலைபெறுகைக்காக தீபாகாரம் போலே மெல்லியதாய்த் திருமண்காப்பி. நடுவில் நெற்றியில் தரிக்க வேண்டுமென்று கூறுகையாலும்,

ஸ்ரீ பாஞ்சராத்ரம் பாத்மசம்ஹிதை

"நாஸாத்வியங்குலம் பாத்ம் மத்யம் ஸார்த்தாங்குளம் பவேத்
பார்ச்வ மங்குள மாத்ரந்து ஸூஸ்ஸ்பஷ்டம் தாரயேத்விஜ:"

என்று இரண்டங்குலம் பாதமும் நடுவிலொன்னறை யங்குலமிடமும், விட்டு இருபக்கங்களிலும்ஒரங்குலமுமுள்ள ஊர்த்வ புண்டரம் தரிக்க வேண்டியதென்றும் கூறுகையாலும்,

பாத்மபுராணம்

"ஊர்த்வபுண்டரம் யதாபூர்வ மநுஷ்டாநம் ஸமாசரேத்"

என்று ஆசமனத்திற்குப் பிறகு ஊர்த்வ புண்டரந்தரித்துக் கொண்டு சந்தியாவந்தன முதலிய வனுஷ்டானங்களை முடிக்கக் கடவனென்றும்,

பிரம்மாண்டபுராணம்

"ஊர்த்வபுண்டரம் ம்ருதாபூர்வ மநுஷ்டாய ஸமாசரேத்"

என்று பூர்வத்தில் ஊர்த்வ புண்டரம் தரித்துக்கொண்ட பிறகு அனுஷ்டானம் செய்யக்கடவனென்றும், கூறுகையாலும், இத்யாதி ப்ரமாணங்களாலும் மோக்ஷகாமியானவன் சக்ராங்கித ஊர்த்வ புண்டராதிகளைத் தரிக்கக்கடவனென்றும், இவ்வுலக வாழ்க்கையாகிய சம்சார ஜனனமரணாதிகளை இச்சிக்குமவர்கள்

பஸ்மாதி திரியக்புண்டரங்களை யணியக்கடவரென்றும் ஸ்ருதியாதிஸாஸ்த்ரங்களாலும் கூறுநிற்க முன்னுளில் நமது ஸர்வேஸ்வரனுடைய பரத்வ ஸௌலப்யாதி ஸத்குண மஹாத்மியங்களை யாரேனு மெடுத்துக்கூறினுல் அவைகளைக்கேட்க முடியாது புழுங்கி, வெந்து, வேர்த்து, மூர்ச்சித்து, முகங்கறுத்து, கோபித்துச்சீறி, வைது, வாடி, இறந்துபோன ஹிரண்யன், ராவணன், துர்யோதனன், கம்ஸன், தந்தவக்ரன், சிசுபாலன், க்ருமிகண்டசோழன், காடுவெட்டிச்சோழன், கண்டாகர்ணன் முதலான அஸுர ராக்ஷஸ பைஸாச ஸமூஹங்களே இக்கலிகாலத்தில் மனுஷ்யராக ப்ரவேசித்தார்களாக்கு மிப்பாஷண்டர்களென்னலாம்படி நிந்திப்பதும், தூஷிப்பதுமாகத் திரியுமவர்களிலொருவனுன குமரகுருதாசனென்போனும், எமதருட்பெருங்கருணையப்பனேயும், அவனது தாஸபூதரையும், தம்மாலியன்றவரையிலும் நிந்தித்தும் அவர்களணியும் சங்கசக்ராங்கிதங்களையும், ஊர்த்வ புண்டரங்களையும், அவைதிகமென்றும், மூதேவி புண்டரமென்றும் (வேதத்தில் சொல்வது வெண்மண்ணு வெண்துயர் தீர்ப்பதுமஞ்சளா) வென்றும், ஞான ஈனத்தால் கண்டபடித்தமதுச் சுவடியில் பிதற்றிவரைந்தனன் கேவல கருமிகளாகிய பஸ்மதாரணுதி த்ரியக் புண்டாதாரிகளே, த்ருஷ்டித்தலும், தொடுதலும். சம்பாஷித்தலும், இடையில் செல்வதும், நினேவதும், கூடாதெனவும், அவ்வாறு நிகழில் மைத்ராயண்யோபநிஷத்திலுள்ளபடி ப்ராய்ச்சித்தம் செய்யவேண்டுமென்றும், கூறுகையால் இவனது புரட்டுகளை எமது சுதர்சனம போன்ற யதார்த்தங்களால் துவைத்துத் துவைத்து அதம் செய்தனம்.

11-வது புரட்டான குருட்டு யுக்தியாவது.

குமரகுரு தாசனேன்பான் உலகில் பாகவதங்கள் இரண்டுதான் உண்டென்றும் அவை தேவீபாகவதம், சுகரால் செய்யப்

பட்ட பாகவதம், இவை இரண்டினும் தேவீபாகவதமே இதிகாச பாகவதமெனவும், சுகரால் செய்யப்பட்டது நாராயண பரத்தை யே சூசிப்பிக்கையால் அதை பாகவதமென கருதத்தக்கதன் றெனவும், தன்னால் கற்பிக்கப்பட்ட பிரசண்டோபநிஷத்தினு மவ்வாறே கற்பித்ததினிமித்தம் அச்சுகரை அளவற்ற நிந்தைக ளான தூஷண வசனங்களால் தமது சைவ சமய சரபமென்னும் க்ராதகச் சுவடியில் பிதற்றியுள்ளானுதலால் எமது யதார்த்தங் களால் இவன் பாகவதமே முற்றினு மறியானென்றும், உலகத் தில் பாகவதங்கள் எட்டு உள்ளனவென்றும் அவைகளில் இவ னுல் கூறப்பட்ட தேவிபாகவதம் நிற்க, இவனறியாத ஏழுபாகவ தங்களையும், அவைகளினேற்றங்களையும் கீழ்விவரிக்கிறோம். அவை இதிஹாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணு ரகஸ்யம், விஷ்ணுயாமளம், கௌதம சம்மிதை என்பனவாம்.

அவற்றுள் முதல் இதிஹாச பாகவதம் 18000-சுலோகங் களாக வியாசமகரிஷியாற் செய்யப்பட்டது. அதில் சுருதி கீதை முதலிய 12-கீதைகளும், எம்பெருமான் திருவவதாரங் களில் விஸ்தாரமாக நான்கு திருவவதார சரித்திரங்களும் அட ங்கியுள்ளன. இப்பாகவதம் சூர்ணிகைகளாலும், விருத்தங்க ளாலும், பத்தியங்களாலும், வாக்கியங்களாலும், தண்டகங் களாலும், நிறைந்த 200-அத்தியாயங்களாகப் பிரித்த 12-ஸ்கந் தங்களையுடையது. ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்தி லும், மத்தியிலும் பெரும்பாலும் அத்தியாயமுடிவிலும் பகவத் ஸ்துதிகளுண்டு. 4-அரிபக்தர்கள் கதை இதில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வக்தா சுகமுனீந்திரர்— சுரோத பரீக்ஷித்துராஜன், புலவர் திலகராகிய ஆரியப்புலவரால் 4970-திருவிருத்தங்களாகத் தமிழில் மொழி பெயர்த் தருளப் பெற்றது இப்பாகவதமேயாம்.

2. புராண பாகவதம்:—36000-சுலோக முடையது, இதுவும் வியாசபகவானுற் செய்யப்பட்டது. இதற்கு மகா பாகவதமென்றுபெயர். இதில் 25-கீதைகள் அடக்கம். எம் பெருமான் திருவவதாரங்களின் 6-சரித்திரங்கள் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பகவத்ஸ்துதியுண்டு, பெரும்பாலும் அனுஷ்டிப்பு சுலோகங்களாலும் பிறவற்ருலமைந்த பல அத்தியாயங்களை யுடையது. தசாவதாரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வக்தா நாரதபகவான் சுரோதா, உருக்மணி பிராட்டியார், இதுவே அட்டாதச மகா புராணங்களுள் ஒன்றே பாகவதம்.

3. சம்மிதா பாகவதம்:—பத்தியங்களாலும் அனுஷ்டிப்பு சுலோகங்களாலும் நிறைந்த 50000-கிரந்தமுடையது. இது ஞான பூரிதமாயுள்ள 30-கீதைகளையும், 20-திருவவதாரங்களின் சரித்திரங்களையும் விசேஷமாய் 22-திருவவதாரங்களின் கதைகளையுமுடையதாய், வைராக்ய ரசமேநிறைந்த 1100-அத்தியாயங்களாய் விரிந்த 18-காண்டங்களாகப் பகுக்கப்பட்டது. இதற்கு வக்தா வைசம்பாயனமுனிவர் சுரோதா ஜனமேஜயன்.

4. உபசம்மிதா பாகவதம்:—பலவகை விருத்தங்களாகிய 70000-சுலோகங்களாய் 2000-அத்தியாயங்களாய்ப் பிரிக்கப்பட்டு 32-கீதைகளும் 100-பாகவதர்கள் சரித்திரமும் பரமாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய 32-திருவவதாரங்களின் சரித்திரங்களுமுண்டு. இதற்கு வக்தா அகஸ்தியமகரிஷி சுரோதா, சுதர்சனர்.

5. விஷ்ணு ரகஸ்ய பாகவதம்:—தண்டங்க ளிடையிடையேகலந்த 100000-சுலோகங்களுடையதாய் 1000-அங்கங்களாய் 10000-அத்தியாயங்களாய் விரிந்த 50-கீதைகளும், 25-திருவவதாரங்களின் சரித்திரங்களும், 100-பாகவதற்களின்

சரித்திரங்களும், அடங்கியுள்ளன. இதற்கு வக்தா ஹாரீத முனி, சுரோதா காசிபரிஷி.

6. **விஷ்ணுயாமள பாகவதம்** :—இது 80000-சுலோகங்களை யுடையதாய் 4-கீதைகளும், தசாவதாரங்களின் கதைகளும் சொல்லப்பட்டு 800-அத்தியாயங்களையுடையது இதற்கு வக்தா பராசரமகரிஷி, சுரோதா மைத்திரேயர்.

7. **கௌதம சம்மித பாகவதம்** :—இது 10000-சுலோகங்கள் அடங்கிய 100-அத்தியாயங்களையுடையது. இதில் **மோக்ஷமளிக்கத்தக்க க்ருஷ்ண சரித்திரமாத்திரம்** சொல்லப்பட் டிருக்கின்றது. இதற்கு வக்தா கௌதமரிஷி சுரோதா கௌசிகரிஷி.

இத்யாதி அளவிறந்த ஏற்றங்களை யுடையதாயும் மகா சமுத்திரங்களை யொத்ததாயுமுள்ள 7-பாகவதங்களினும் ஸ்ரீமந் நாராயண பரத்தையே பன் முறை உத்கோஷிக்கையாலதை அறியாதவனாய் அருளிச்செய்தவர் **வியாசராயிருக்க் சுகரேன்றும்**, வேறு பாகவதமில்லையென்றும், தாறுமாறான பிதற்றல்களை பிதற்றியுள்ளானாதலாலும் சகல, சுருதி, ஸ்ம்ருதிகளிலும் ஸ்ரீமந்நாராயணனையே ப்ரிதிபாதிக்கையால் தனது க்ராதகத்தால் சிவனுக்கு உயர்வுகூறும் பொருட்டு தமிழிலேயே ப்ரசண்டோப நிஷத்தென்று அப்பைய தீக்ஷிதரைப் போல் ஸமஸ்கிருத பாஷையில் கற்பிக்க சக்தியற்றவனாய் கற்பித்த ஆபாசக் கதைப்போன்ற பாகவதமுமொன்று இனி ஊளையிட வேண்டியதே. இதனால் அறியாமையை யறிவித்தும், தூஷண நிந்தைகளனைத்தையும் எமது சகல சாஸ்திர யதாரத்தங்களால் மிதித்துத் துவைத்தெரிந்தனம்.

இன்னுமவனதுச் சுவடியில் கீறியுள்ளப்பூரணக் குருட்டு யுக்திகளையும், நிந்தைகளையும், தூஷணங்களையும், பிதற்றல்களையும், புரட்டுகளையும், எடுத்துரைக்க வில்லையாயினும், சக்ர

வர்த்தித்திருமனை ஸ்ரீராமபிரான், ராவணுதி ராக்ஷச சம்ஹாரார்த்தமாக அநுமானைத் தூதுவிட்டேவியதுபோலிந்நூலை விட்டனம், இந்நூலின் 68-வது பக்கத்தில் 8-வது புரட்டு என்பதில் மூடபுத்தியால் தூஷித்தனனென்று வெளியிட்டிருப்பதால் யாம் தூஷிக்கக்கருதினதாகக் கூறவில்லை, வேதங்களையு மதன் யதார்த்தங்களையு மிவனதுச் சுவடியையும் பார்க்குமளவில், அவ்வேதமே தூஷண அஹங்காரமுள்ளோன்யாவனே அவனே மூடனென நிரூபிக்கின்றது.

சுக்லயஜுர் நிராலம்போபநிஷத் பூர்ணமத : சாந்தி
"மூடயிதீசா"—மூடன்யார்

"தேஹ வர்நாவிரம கர்த்ருத்வா போக்த்ருத்வா த்யா அஹங்காரா ஹாவநாரூடோமூடஹ"

என்று தேக வருணுசிரம கருத்திருத்துவ போக்திருத்துவ த்வேஷ முதலான அஹங்கார க்ரூரபாவனையுடைவோன்யாவனே அவனே மூடனென்கையாலே, "யாம் வெளியிட்ட நாலாயிர ப்ரபந்த விசாரத்துள் என்றும், யாம்படித்த 108 உபநிஷத், 18 ஸ்ம்ருதி, 18 புராணங்கள் என்றும், தான் சிலச்சுவடிகளை வரைந்தனனென்றும், எமதுசீடனிட மென்றும், தாம் பெரிய குருவாயும், தமக்கொரு சீடனுளனென்பதாயும், தம்மால் பிரசண்டோபநிஷத்தென்று ஒருஉபநிஷத்தைக்கல்பிக்கப்பட்டு மிவ்வாறுன இவனது அஹங்காரத்தை தமக்கோர்பட்டமாயமையப் பெற்றுள்ளோனுதலாலிவனை 'மூடனெனக்குறையில்லை இவ்வதிகாரத்தைக்கொண்டேயாம் அங்ஙனம் மூடபுத்தியென வெளியிட்டனம். இந்நூலின் 86-வது பக்கத்தில் ஹிரண்யன், ராவணன் முதலானேரே இவ்வுலகத்தில் இப்பாஷண்ட நிந்தகனை குமாரகுருதாசனென்போனைப் போன்றவனென வெளியிட்டனம்

சுக்லயஜுர் நிராலம்போபநிஷத் பூர்ணமத : சாந்தி
ஆசுராபிதீசா"—அசுரன்யார்

" ப்ரஹ்மா விஷ்நிவாசாநிந்ரேர்தீநோ ஐஸ்வர்ய காமநயாந நிரசந
ஜீவாக்நிஹோத்ரோ திஷ்வம் தாாதமாநம் சந்தாபயன்நாசாத் சந்ததா
மிருத்யுக்ர ராகத்வேஷஹிம்சா டம்பா அபேக்ஷிதம் தப ஆசுரம்"

என்று பிரம்மாவிஷ்ணு, ருத்ர இந்த்ர முதலியவர்களின் சத்ய லோகம், ஸ்ரீவிஷ்ணுலோகம், கைலாயம் முதலியவைகளின் ஐஸ்வர்யங்களைக் கருதியவாசையினால் உணவைவிட்டு ஜபம், அக்னிஹோத்ரம் முதலானவைகளினால், உள்ளேயிருக்கின்ற ஆத்மாவை வருத்தினவனாய், எப்போதும் கொடிய ஆசை, த்வேஷம், துன்பம், டம்பம் முதலியவைகளுடன் கூடினவனே அசுரனென்கையாலும், இக்குமரகுருதாசனென்பான் இவ்வுலகிலுள்ள மஹாமேருவின் சிகரத்திலிராநின்ற கைலாயத்தினைஸ்வர்யாதிகளை விரும்பினவனாய் 35 நாள் உணவின்றித் தன்னுள்ளிருக்கும் ஞானாநந்தமயமான ஆத்மாவை வருத்தினவனாயும் தான் சில பாஷண்டப் பண்டாரங்களுக்கு குருவாகவேணுமென்கிற கொடிய அவாவிலாழ்ந்தவனாய், " ததோவித்வாந் புண்யபாபே விதூயநிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி " என்றும், " க்ருஷ்ணேபக்த்தி: ப்ரஜாயதே " என்றும், " சர்வாணி ரூபாணி விசித்யதீர:'' என்றும் சக்ரப்ரவித்வான் பிரதி சஸ்ய தஸ்ர: தமேவம்வித்வான் அமுர்தம்யிஹபவதி " என்றும், "யதோவாசோநிவர்த்தியந்தே அப்ராப்யமநசாசஹ ஆநந்த ப்ரம்மணோவித்வான் என்றும் உத்கோஷியாநின்ற முண்டக, தைத்ரீய, புருஷஸுக்த, சுக ரஹஸ்யாதி உபநிஷத்துக்களாலும், ப்ரதிபாதிக்க வல்லவர்களான சுகப்ரம்மாதி ப்ரஹ்மவித்துக்களையும், சடகோப, எதிராஜ பட்டர்பிரான், ஆதியான ப்ரஹ்மவிதாக்ரேஸர்களையும், க்ரூரவசனங்களால் தூஷித்தும், நிந்தித்தும், தாம் சாஸ்த்ரநிபுணனாயும் சில செய்யுட்கள் செய்யவல்லோனென்றும், ஸ்வமதஸ்தாபனம் செய்யுமவனென்றும், சிற்சில ஆபாசடம்பங்களால் தன்னைப் புகழ்ந்துத்திரியுமவனாதலாலு

128123

மிவனே அசுரனென் ... டில்லை இ ... வக் ெ
பே ... யங்களும் அசுரனைப்போன்றவ ... பிட்டனம்
மைத்ராயண்ணியுபநிஷத்து 7-வது பிரபாடகம் 7-வது மந்த்

"விரத காஷாய குண்டலீந காலிநோதாயேஸாங்யேஹ விரதா
த்ருஷ்டாந்தகுஹகேந்ரஜாலைய: வைதீகேஷு பரிஸ்தாது மிச்
தைஹ சஹநாசம் வஸ்சேத் பிரகாஸ்யா பூதாவைதஸ்கரா அஸ்
யாத்யேவம் யாஹாநிராத்மியவாதா குஹகையிர்மித்யா த்ருஷ்ட
ஹேதுபிஹிபிராமங்லோகேநஜா நாதிவேவித்யாந்தாம்துயது"

என்று வேஷதாரிகளாயும், உலகத்தைப்பிரம்மிக்கப் ப
கின்றவர்களாயும், காஷாயவஸ்த்ர பஸ்மாதிகளால் வேஷம்
தவர்களாயும், குண்டலம், கப்பரைகளை யுடையவர்கள
விஞ்ஞன தற்கம், ஆபாசத்ருஷ்டாந்தம், மோசம், இந்த்ர
முதலியவைகளினல் தங்களுக்குவேண்டிய அவைதிகசப்த
வருவித்துக்கொண்டும், மிஸ்ரவைதிக வைதிகம தங்களில் சி
ஸ்ரீமத் பரமவைதிக ஸுத்தஸத்வகுண விஸிஷ்டாத்வைத
தாந்தத்தில் பற்றுள்ள விலக்ஷணப் பரமவைதிகோத்தம
டம் எதிர்க்குமவர்களாயும், துரஹங்காரிகளாயும், நி
வாதங்களினுல் ஸ்தாபிப்பார்கள். இப்பாஷண்ட த்ரோகிகளு
சாவகாசம் செய்வது கூடாதென்றும், இத்ரோகிகள்
காலத்துக்குள் குலம், பொருள், நிலம் முதலியவைக
மாண்டு, எரிவாய்ப் புழுச்சொரி நரகத்தில் விழுந்து அள
கல்பகாலம் கிடப்பது ஸத்யமாக்கும்.

சகல வேதோபநிஷத்துக்களால் ப்ரதிபாதிக்கப்பட்
ணய், உயிர்களான கோக்களை ரக்ஷிப்பவனுய், ஸ்ரீமானுய் விள
நின்ற பரந்தாமனேயும், அவனது தொண்டர்களேயும் நிந்
நிந்தைகளுக்களவிலவாயினு மிந்நூலில் சிலவைகளேயே காட்
ளோம் இத்ரோகிகளைக்கண்டால் ஊரைக்கொளுத்தும் அக்கி
யைக்கண்டு புறம்பே விலகிப்போவதுபோல், விலகிப் போச
ண்டியதாக்கும் யதார்த்தமான பாகவதர்களென்றறியக்கட

பரப்ரஹ்ம தத்வவிளக்கம் முற்றிற்று.

THE TATA PRINTING WORKS, 5 THAMBU CHETTY ST., MADRA

இப்புத்தகம் கிடைக்குமிடம்

1. ஸ்ரீ கோதாவிலாச அச்சுக்கூடம்,
சைதாப்பேட்டை,
சென்னை.

2. ம-ா-ா-ஸ்ரீ கோ. ஸ்ரீனிவாச நாயகர் அவர்கள்
கூத்தாடும்பிள்ளையார் கோவில் வீதி,
சைதாப்பேட்டை, சென்னை.

3. „ பெ. வடிவேலு பிள்ளை அவர்கள்,
தக்கோலம் கிராமம்,
அரக்கோணம் தாலூகா.

4. „ ரா. அ. முனுசாமி முதலியார் அவர்கள்,
ஜவுளிவியாபாரம், திமிரிபோஸ்ட்,
வடார்க்காட் ஜில்லா.

5. „ வீரபத்திர முதலியார் குமாரர்,
ஆறுமுக முதலியார் அவர்கள்,
ஆரணி போஸ்ட்,
வடார்க்காட் ஜில்லா.

6. „ ஊனா நாயுடு அவர்கள்,
முருக்கத்தாம்பூண்டி போஸ்ட்,
வடார்க்காட் ஜில்லா.